திருப்பரங்குன்றம்



TNSDA
08343

15.3

திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றம்

ஆசிரியர்
செ. போசு எம். ஏ.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
1981

முதற் பதிப்பு 1981.
த. நா. தொ. ஆய்வுத்துறை, வெளியீடு எண்: 75.

© த. நா. தொ. ஆய்வுத்துறை.

திருப்பரங்குன்றம்

8343
25:6:87

ஆசிரியர்
செ. போசு, எம். ஏ.

விலை. ரூ. 8-50

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால்
துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

பதிப்புரை

தமிழகக் கோயில்களைப் பற்றி ஏதுமே தெரியாது; கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகிய வற்றைப் பற்றியும், அவற்றோடு பிணைந்து விளங்கும் ஊர் வாழ் மக்கள் பற்றியும் ஏதும் தெரியாது. அப்படியிருக்கும் மாணவரை ஒரே ஆண்டில் இதுபோல் ஒரு நூல் படைக்க உருவாக்குகிறது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை நடத்தும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் என்றால் அது பெருமைக்குரிய செய்திதானே! இதுபோலத் தமிழக ஊர்களைப் பற்றியும், கோயில்களைப் பற்றியும் எத்தனை நூல்கள் வர வேண்டும்! அவற்றை எழுத எத்தனை இளைஞர்களை உருவாக்க வேண்டும்! அந்தப் பணியில் ஈடுபட்டு உள்ளது இந்தக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம். இந்நூலை நல்ல நடையில், கருத்துக்களை மிகுந்த உணர்ச்சியோடு வெளியிடும் திரு. செ. போசு போன்ற இளைஞர்களின் ஆர்வத்தை நல்லாறு படுத்தி நடாத்திச் செல்வதில் பெருமை கொள்கிறது இத்துறை. இவர்களது ஆய்வுகளை நூலாக்குவதிலும் பெருமை அடைகிறோம்.

இரா. நாகசாமி

உள்ளடக்கம்

1.	பதிப்புரை	
2.	மதுரைத் திருநகரமும் திருப்பரங்குன்றமும்	1
3.	பரங்குன்றம் பற்றிய புராணக் கதைகள்	9
4.	திருப்பரங்குன்றம் பற்றிப் பேசும் இலக்கியங்கள்	11
5.	திருமுருகாற்றுப் படையில் திருப்பரங்குன்றம்	13
6.	பரிபாடலில் பரங்குன்றம்	17
7.	அகநானூற்றில் குன்றம்	23
8.	காஞ்சி புகழும் குன்றம்	25
9.	கலித்தொகையில்	27
10.	தேவாரம் பெற்ற தலம்	31
11.	திருக்கோவையார் கண்ட திருப்பரங்குன்றம்	33
12.	பெரிய புராணம் பேசும் குன்றம்	37
13.	கல்லாடம் காட்டும் குன்றம்	39
14.	திருப்புகழில் திருப்பரங்குன்றம்	43
15.	கந்தபுராணத்துக் குன்றம்	45
16.	திருவிளையாடற் புராணத்தில்	47
17.	திருப்பரங்கிரி புராணம்	49
18.	வாய்மொழிப் பாடல்களில் பரங்குன்றம்	53
19.	வரலாற்றுக் காலங்களில்	57
20.	பாறைச் சிற்பங்கள்	81
21.	சமணச் சிற்பம்	83
22.	நாயக்கர் காலம்	93
23	சுதையுருவங்கள்	107
24.	வழிபாடும் விழாக்களும்	111
25.	சமணர் குகைத்தளம்	119
26.	குன்றத்துக் கோயில்கள்	127
27.	கல்வெட்டுக்களால் அறியப்பெறும் செய்திகள்	113
28.	அன்னதான மடம் பற்றிய செப்பேடு	151
29.	கல்வெட்டுகள்	155
30.	பாண்டியர்கள் ஆட்சிக்காலம்	158
31.	நாயக்கர்கள் ஆட்சிக் காலம்	158
32.	நூற்பெயர்க் கோவை	159

மதுரைத் திருநகரமும் திருப்பரங்குன்றமும்

திருப்பரங்குன்றம் பற்றிய வரலாற்றுக்குள் புகுவதற்கு முன்பாக அத்தலம் அமைந்திருக்கும் மதுரை நகரத்தின் சிறப்பினையும், அங்கே ஆண்ட பாண்டிய வேந்தர்களின் பெருமையினையும் சற்றே நோக்கிச் சென்றால் பெரிதும் பயன் விளையும். மதுரை என்று தொட்டுப் பெருமையுடன் திகழ்கிறதோ அன்று தொட்டுத் திருப்பரங்குன்றமும் தன் பெருமை குன்றாது திகழ்ந்து வருகிறது.

மதுரை என்னும்' போதே இனிமை என்னும் பொருள் தரும் 'மதுரம்' என்ற சொல்தான் நம்முன்னே தோன்றும். இந்த மதுரத்தின் அடிப்படையாகத்தான் மதுரை அமைந்ததோ என எண்ணவும் தோன்றும். புராண காலத்தை விட்டு விட்டுச் சங்ககால அளவில் இருந்தே மதுரையை நோக்கினால் அதுவே போதுமானது.

மதுரை என்று கூறிவிட்ட பிறகு அங்கிருந்த கடைச் சங்கத்தைக் கூறாமல் இருக்க முடியாது. தமிழும், தமிழ்ப் புலவர்களும், புரவலர்களும் உறவாடிய இடம் அது. அங்கே தான் பாண்டியன் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை 49 பேர் சங்கத்தைப் புரந்தனர். இச்சங்கத்து அரங்கேறிய அரசர்களும் பலர்.

சங்க இலக்கியங்கள் என்று துணியப்படும் எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் மதுரைத் திருநகரைத் தமிழ்த் திருநகரமாகவே எடுத்தியம்புகின்றன. இன்னும்,

"... ... பாண்டியர்
பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாஅது"[1]

"கூடலி னாய்ந்த ஒண்டீந்தமிழ்"[2]

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்"[3]

---

1. ஆசிரியமாலை.
2. திருக்கோவையார்.
3. திருநாவுக்கரசர் தேவாரம்.

என்றெல்லாம் பின் வந்த இலக்கியங்கள் புகழ்கின்றன.

இந்தத் தமிழ்த்திருநகரம் தான் மீனக்கொடி உயர்த்தி ஏனைய பகைவேந்தரோடு உடன்று வென்றிகொண்ட பாண்டியர்களின் தலைநகரமாகவும் நீடு நின்றது. எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றுதற்கும் பாண்டியர் அவைக்களம் இடம் கொடுத்தது. வழுதி கேட்க, பாண்டியன் அவையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதாகத் திருவள்ளுவமாலையில் மூன்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

தென்னிந்தியாவின் ஏதன்சு நகரம் என்று மேலை நாட்டார் இதனைப் புகழ்ந்து சென்றுள்ளனர். கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிளைனி பாண்டியர்களையும், மதுரை மாநகரத்தையும் தம்முடைய நூலில் குறிப்பிடுகின்றார். மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் எல்லாம் உரோம நாட்டு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் மதுரையின் தொன்மையை எடுத்துரைக்கின்றன.

தாமரைமலரின் அகவிதழ்களைப் போன்று மதுரை நகரில் தெருக்கள் அமைந்திருந்ததாகப் பரிபாடல் கூறும். புத்தேள் உலகம் வந்து கண்டுமகிழக்கூடிய மூதூர் இது என்று மதுரைக் காஞ்சி புகழ்கிறது.

நகருக்கு வெளியே நாற்புறமும் மதில்கள் சூழக்கோட்டைகள் இருந்தன. அதனைச் சூழ்ந்து அகழிகள் இருந்தன.

விரிநீர் ஏரியும், காய்க்குலைத்தெங்கும், கமுகும் நிறைந்திருந்ததாகச் சிலம்பு கூறும். பொருநர்த் தேய்த்த போரறு வாயில் இருந்ததாகத் திருமுருகாற்றுப்படையும், அவ்வாயில்களில் நெய்படக் கரிந்த திண்போர்க் கதவம் பொருத்தப் பட்டிருந்ததாக மதுரைக் காஞ்சியும் தெரிவிக்கின்றன. இவ் வாயில்களில் அடல்வாள் யவனர் காவல்புரிந்ததாகச் சிலம்பு கூறும். வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் அகநகர், அதன் உள்ளே பல்வேறு தெருக்கள்; அங்கே பல்வேறு பொருள்களை விற்பனை செய்யும் பல்வேறு அங்காடிகள் இருந்தன. அவற்றுள் சில நாளங்காடி; சில அல்லங்காடி.

'விழாவறா விதி வளநாடு' என்று தமிழகத்தில் ஒரு வளநாடே இருந்ததைப்போல மதுரை நகரமும் எந்நேரமும் விழாப்பெருநகராகவே இருந்து வந்துள்ளது. இன்றும் இருக்கிறது.

இங்கேதான் வையை என்னும் பொய்யாக் குலக்கொடியும் அன்று, வான் பொய்ப்பினும் தான் பொய்யாது ஓடினாள். ...யினும் இன்று......வானும் பொய்க்கத் தானும் பொய்த்து ...ாட்டுகின்றாள். இப்படி, மதுரையைப்பற்றிக் கூறிக்கொண்டே செல்லலாம். இந்நகரம் பாண்டியர், நாயக்கர் என்று பல்வேறு அரசர்களால் ஆளப்பட்டு வந்ததை வரலாறு எடுத்துச் சொல்கிறது.

'கோயில்மாநகர்' என்று கூறப்படும் பெருமைக்கேற்ப மிகுதியான கோயில்களையும் இங்கே காணலாம். கோயில் என்றவுடன் நகருக்கு நாயகமாக விளங்கும் மீனாட்சியம்மன் கோயிலும், அதோடு தொடர்புடைய திருப்பரங்குன்றம் கோயிலும், கூடலழகப் பெருமாள் கோயிலும், இம்மையில் நன்மை தருவார் கோயிலும், பழைய சொக்கநாதர் கோயிலும், ...ருவாப்புடையார் கோயிலும், மதனகோபாலசாமிகோயிலும், ...க்கீரர் கோயிலும் நாம் மறக்க நினைத்தாலும் மறக்க ...டியாமல் நம் நினைவில் நிற்கின்றன.

இத்தகைய சிறப்பு நிறைந்த மதுரைக்கு மேற்கில் திருப்...ங்குன்றம் இருந்ததாகச் சங்க இலக்கியம் தெரிவிக்கிறது.

"கொடிநுடங்கு மறுகிற் கூடல் குடாஅது"[4]

...ன்று அது தெரிவிக்கும்.

பின்வந்த திருவிளையாடல் புராணமும், பாண்டியனால் ...மைக்கப்பட்ட கூடல், கிழக்கில் திருப்பூவணத்தையும், ...ற்கில் திருப்பரங்குன்றத்தையும் நோக்கியபடி இருந்தது ...ன்று கூறுகின்றது.

ஆனால் இன்று மதுரைக்குத் தென்மேற்குத் திசையில் ஐந்து கல் தொலைவில் இக்குன்றம் அமைந்து காணப்

4. அகநானூறு: 149.

படுகின்றது. நகரம் மேற்குப் பகுதியில் விரிவடைந்து காணப் படுவதால் திருப்பரங்குன்றம் தெற்குத்திசையில் காணப்படுவ தாக இதற்கு அமைதி கூறலாம்.

தேவாரம் பாடப்பெற்ற பாண்டிய நாட்டுப்பதி பதினான் கனுள் திருப்பரங்குன்றமும் ஒன்றாகும்.[5]

தமிழகத்துத் தொன்றுதொட்டுத் திகழ்ந்து வரும் திருக் கோயில்களுள் ஒன்றான இதனை மதுரையில் இருந்து நகர, வெளியூர்ப் பேருந்துகள் மூலமாகவும், புகைவண்டி மூலமாக வும் எளிதில் சென்றடையலாம். மையப்பேருந்து நிலையத் தில் இருந்து தொடர்ச்சியாக நகருந்துகள் இவ்வூருக்கு விடப் படுகின்றன.

பழமையான இலக்கியங்களில் தண்பரங்குன்று என்று குறிக்கப்பட்டுப் பின்னர் தென்பரங்குன்று என்று ஆகி இன்று திருப்பரங்குன்றம் என்னும் பெயரோடு இது பீடுற்று நிற்கிறது. பரன்குன்று என்பதன் சமஸ்கிருத வடிவம் பரங்கிரி. இங் குள்ள இறைவன் பரங்கிரிநாதர். இதன் தொடர்ச்சியாக இப்பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம்.

எனினும் மூன்று பெயர்களும் சிறப்புக்குரியனவே. தண் பரங்குன்று என்பது குன்றத்தின் குளிர்ச்சியையும், தென்பரங் குன்றம் - மதுரைக்குத் தெற்கில் இருப்பதால் இப்பெயரையும், திருப்பரங்குன்றம்-என்று சிறப்புக்குரிய 'திரு' என்னும் அடைமொழியையும் பெற்றுள்ளதெனலாம்.

பரம் எனின் உயர்ந்தது; இதற்கு அப்பாற்பட்டது ஏது மில்லை எனலாம். அபரம்-வரம்புக்குட்பட்டது. பரம் எதற்கும் உட்படாதது. பரங்குன்றைப் பரன் குன்று என்றும் பிரிக்கலாம்.

இன்னும் திருப்பரங்கிரி, பரமசினம், சத்தியகிரி, கந்தமா தனம், கந்தமலை என்றும் இக்குன்றம் புராணங்களில் கூறப்

---

5. திரு ஆலவாய், திருவேடகம், திருப்பரங்குன்றம், திருவாப்பனூர், திருக்கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருப்புனவாயில், திருவிராமேசுவரம், திருவாடானை, திருக்கானப்பேர், திருப்பூவணம், திருக்குற்றாலம், திருநெல் வேலி, திருச்சுழியல்.

படுகின்றது. வாயுதேவன் வீசியெறிந்த கந்தமாதனமலையின் ஒரு கூறே இப்பரங்குன்று என்று புராணம் கூறுகின்றது.[6]

பழஞ்சிறப்புடன் திகழும் இக்குன்றம் கடல் மட்டத்திற்கு மேல் 1050 அடி உயரத்தில் உள்ளது.[7] குன்றத்தின் உயரம் முந்நூறு அடியாகும். சுற்றளவும் ஒன்றரைக்கல் தொலைவுடையதாய் அமைந்து உள்ளது.

இன்றைய திருப்பரங்குன்றம் முருகப்பெருமானின் சிறந்த தலமாக அன்றைய இலக்கியங்கள் கூறியதற்கேற்பச் சிறப்புடன் திகழ்கின்றது. ஆனால், சங்ககாலத்தில் எடுக்கப்பட்ட முருகன் கோயில் என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. அது இங்கு தான் இருந்ததா என்பதும் நமக்குத் தெரியாது.

இரண்டு குடைவரைக் கோயில்களும், சமணக் குகைத் தளமும் இங்கு இருக்கின்றன. இரண்டு குடைவரைக் கோயில்களில் இன்று வழிபாட்டில் இருக்கும் முருகப்பெருமான் கோயில் கி. பி. 8 நூற்றாண்டில் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனின் ஆறாவது ஆட்சியாண்டில் அவனுடைய சாமந்த பீமனாகிய சாத்தன் கணபதி என்பவனால் தோற்றுவிக்கப் பட்டது.[8]

இங்குக் காணப்படும் கிரந்தக் கல்வெட்டில் சிவபெருமானுக்காக இக்கோயில் தோற்றுவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே இக்காலத்து வழிபடப்பட்டுவரும் கோயில் அன்று சிவபெருமானுக்காகத் தோற்றுவிக்கப்பட்டகோயில் என்பது தெளிவுறும்.

கல்வெட்டில் குடைவரைக்கோயில் சிவனுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது என்று குறிப்பிட்டபோதும், இங்கு சிவன், பவழக்கனிவாய்ப் பெருமாள், முருகன், துர்க்கை, விநாயகர் ஆகிய ஐந்து கடவுளர்க்கும் எடுக்கப்பட்டதாக இன்று நாம் அறிகின்றோம்.

---

6. திருப்பரங்கிரிப் புராணம்.
7. Census of India Vol. IX.
8. ARE 37-1908; S. I. I. Vol. XIV. No: 3.

ஆவுடைநாயகியம்மனுக்கென்று கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தனிக்கோயில் எடுக்கப்பட்டிருப்பதால் அந்த நூற்றாண்டும் அதற்குப் பிற்பட்டுச் சில ஆண்டுகள்வரையிலும் இக்கோயில் சிவன்கோயிலாகத்தான் திகழ்ந்திருக்கவேண்டும். ஏனென்றால் இரண்டு குடைவரைக் கோயில்களிலும் முருகப்பெருமான் துணைக்கடவுளாகத்தான் காட்டப்பட்டுள்ளார்.

ஆனால் முருகப்பெருமான் கோயிலாக எப்படிப் பெரிய மாற்றத்தை அடைந்தது என்பது சற்று சிந்திக்கவேண்டிய ஒன்றாகும். சங்க காலத்தில் இருந்தே முருகன் கோயில் என்றுதானே குறிப்பிடப்படுகிறது - இடையில் அது எப்படி சிவன்கோயிலாகும் என்று கேள்வி எழுவதற்கு இடமே இல்லை. கோயில் சிவபெருமானுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது என்று கல்வெட்டுவாசகம் தெளிவாக இருப்பதால் முருகப் பெருமான் சன்னதியாக என்று ஏற்றம் பெற்றிருக்கவேண்டும் என்று அறியவேண்டும்.

கி. பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப்பிறகு, கொஞ்சங் கொஞ்சமாக மீண்டும் சங்ககாலச் சிறப்புப்பெற்று முருகப் பெருமான் சன்னதியாக இது மாறத் தொடங்கி இருக்கலாம்.

இதற்குப் பின் திருமலை நாயக்கர் காலத்து உன்னத நிலையை அடைந்திருக்க வேண்டும்.

'திருமலையன் மாற்றி வைத்தான் திருப்பரங்குன்றத்தை' என்ற பழமொழியும் கருத்தில் கொள்ளத் தக்கது.

மன்னன் எவ்வழியோ அவ்வழிதானே மக்கள்? மன்னனைத் தொடர்ந்து மக்களும் முருகப் பெருமானுக்குச் சிறப்புச் செய்ய முற்பட்டிருக்கலாம். திருமலை நாயக்கர் தம் மனைவியரோடு முருகனை வணங்கிய நிலையில் உள்ள சிற்பம் இக் கருத்துக்கு வலுவூட்டும் வண்ணம் அமைந்துள்ளது.

இனி பாண்டியர்காலக் கலை என்று குறிப்பிடும்போது இக்குடை வரைக் கோயில் சிறப்பிடம் பெறுகின்றது. தமிழகத்தின் வடபகுதியைப் பல்லவர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த போது, அதே காலத்தில் தென்பகுதியை முற்காலப்

பாண்டிய வேந்தர்கள் ஆட்சி செய்து வந்தனர். சாளுக்கிய வேந்தர்கள் பல்லவர்களோடு போரிட்டுக் கொண்டிருந்தது போலவே பாண்டியர்களும் பல்லவர்களோடு அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்தனர். அந்தப் போரின் தாக்கம் தான் தமிழகத்தின் தென்பகுதியில் பாண்டியர்கள் பல்லவர் களைப்போலக் குடைவரைக் கோயில்கள் செய்யும்படித் தோற்றியது என்பது ஒருசாரார் கருத்து.

இக்கருத்து ஏற்புடையதாக இருந்தாலும், பாண்டிய நாட்டுப் பகுதியில் உள்ள குடைவரைக் கோயில்கள் பல்லவர் குடை வரைக்கும் முற்பட்டதாக ஏன் இருத்தல் கூடாது.

பிள்ளையார்ப்பட்டியில் உள்ள குடைவரைக்கோயில் கல்வெட்டின் மூலம் அக்கோயில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே தோற்றுவிக்கப்பட்டது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.[9]

எனவே குடைவரைக் கோயில்கள் என்ற அமைப்பை நோக்கும்போது கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பாண்டிய நாட்டுப் பகுதியில் குடைவரைக் கோயில்கள் தோன்றத் தொடங்கி விட்டன எனலாம். குன்றக்குடியில் மலையின் அடி வாரத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோகர்ணத் திலும் குடைவரைக் கோயில்களைக் காண முடிகிறது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருமயத்தில் குடைவிக்கப்பட்ட கோயிலையும் காண்கிறோம். கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆனைமலையும், திருப்பரங்குன்றமும் உருவாக்கப்படுகின்றன. இப்படிக் கலையமைப்பிலும் பல்லவர்க்கு முற்பட்டனவாகப் பாண்டியர் கலைப்படைப்பு திகழ்கின்றது. திருப்பரங்குன்றம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டுக் குடைவரைக் கோயிலாக இருந் தாலும் முற்காலப் பாண்டியர் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. மற்றொரு குடைவரைக் கோயிலான 'சுந்தரபாண்டிய ஈசுவரமுடையார் கோயில்' பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

9. "In South Tamilnadu near Madurai there is a Cave temple excavated by the Pandyas, in judging from an Inscription found there, it belongs to the sixth Century A.D. and therefore, earlier than the Pallava creations" Dr. R. Nagasamy, "The Art of Tamil Nadu."

இனி, இத்திருப்பரங்குன்றம் பற்றிச் சங்க இலக்கியங்கள், தேவாரம், திருக்கோவையார், கல்லாடம் முதலான பிறநூல்கள் வாயிலாகவும், புராணம், நாட்டுப்பாடல்கள், செப்பேடு, கல்வெட்டுக்கள் வாயிலாகவும், சிற்ப அமைதி, கட்டிடக்கலை அமைப்பு வாயிலாகவும் தொடர்ந்து வரும் பகுதிகளில் நோக்குவோம்.

பரங்குன்றம் பற்றிய புராணக் கதைகள்

திருப்பரங்குன்றம் பற்றிப் புராணக் கதைகள் பல தொன்று தொட்டுச் செவிவழிச் செய்தியாக இங்கு பேசப்பட்டு வருகின்றன.

சிபிச்சக்ரவர்த்தி பூதானம் செய்து கொண்டிருந்த காலத்து அத்தானம் பெற ஒரேயொரு ஆள்மட்டும் குறைந்ததாகவும் அதுகண்டு மன்னன் வருந்தியதாகவும், அப்போது பரங்கிரிப் பெருமான் வேற்றுருக் கொண்டு சென்று அத்தானத்தை ஏற்றுக் கொண்டதாகவும் ஒரு கதை உண்டு.

இக்குன்றத்தில் அரிச்சந்திரன் முருகப்பெருமானுக்கு விழா வெடுத்து அதனால் விடுபேறு பெற்றான் என்றும் கூறப்படு கிறது.

ஒரு பெண் எக்காலமும் முருகனையே நினைந்து, 'முருகா முருகா' என்று உச்சரித்துவர, அதனைப் பொறமாட்டாத அப்பெண்ணின் கணவன் அவளுடைய கைகளை வெட்டி விட்டான். ஆனால் அக்கைகளோ வெட்டியவுடன் மீண்டும் வளர்ந்தன.

இந்நிகழ்ச்சி குறித்த பழம்பாடலொன்றும் உள்ளது. அப்பாடல்:

''ஓம்முருகா என்றென்உள் ளங்குளிர உவந்துடனே
வருமுருகா என்றுவாய் வெருவாநிற்பக் கையிங்ஙனே
திருமுருகா என்றுதான்புலம் பாநிற்கும் தையல்முன்னே
திருமுருகாற் றுப்படையுட னேவரும் சேவகனே''

முருகன் நக்கீரரைப் பூதத்தின் பிடியில் இருந்து விடுவித் ததும் இக்குன்றத்தில் தான்.

சூரபன்மனைச் சம்ஹாரம் செய்துவிட்டுத் தெய்வ யானையை முருகன் மணந்து கொண்டதும் இங்கே தான்.

நான்முகன் நாமகளை மணந்து இங்கு பிரம தீர்த்தம் உண்டாக்கினார். அதில் சாபத் தொழுநோய் பெற்ற மன்னன் மூழ்கியெழுந்து தம் நோய் நீங்கப் பெற்றனன்.

இப்படிப் பல்வேறு கதைகள் கூறப்பட்டு வருகின்றன.

திருப்பரங்குன்றம் பற்றிப் பேசும் இலக்கியங்கள்

1. திருமுருகாற்றுப்படை — நக்கீரர்
2. பரிபாடல் — சங்கப்புலவர்
3. அகநானூறு — ,,
4. மதுரைக்காஞ்சி — மாங்குடிமருதனார்
5. கலித்தொகை — சங்கப்புலவர்
6. தேவாரம் — திருஞானசம்பந்தர், சுந்தரர், நாவரசர்
7. திருக்கோவையார் — மாணிக்கவாசகர்
8. பெரியபுராணம் — சேக்கிழார்
9. கல்லாடம் — கல்லாடர்
10. திருப்புகழ் — அருணகிரிநாதர்
11. திருவகுப்பு — ,,
12. கந்தபுராணம் — கச்சியப்ப சிவாச்சாரியார்
13. கந்தபுராணச்சுருக்கம் — சம்பந்த சரணாலயர்
14. திருவிளையாடல் புராணம் — பரஞ்சோதி, பெரும்பற்றப்புலியூர்நம்பி
15. திருப்பரங்கிரிப் புராணம் — நிரம்ப அழகிய தேசிகர்
16. சத்தியகிரி மகாத்மியம் — கிரந்தமூலம் ஆசிரியர் பெயரில்லை.
17. பரங்கிரிப் பிள்ளைத்தமிழ் — மு.ரா. அருணாசலக் கவிராயர்
18. பரங்கிரிப்பாமாலை —
19. பரங்கிரிக் கலித்துறை அந்தாதி —
20. பரங்கிரிப் பதிற்றுப் பத்தந்தாதி — ,,

21.	பரங்கிரி வெண்பா அந்தாதி	—	மு. ரா. அருணாசலக் கவிராயர்
22.	பரங்கிரி அலங்காரம்	—	
23.	பரங்கிரி மும்மணிக் கோவை	—	
24.	பரங்கிரி அனுபூதி	—	
25.	பரங்கிரிக் கோவை	—	
26.	குமரகுருதாசசுவாமிகள் பாடல்கள்	—	பாம்பன் சுவாமி
27.	முருகன் அருள்வேட்டல்	—	திரு. வி. க.
28.	முருகன் வரப்பிரசாத மாலை	—	மு. வீரவேல்
29.	சிவாட்சர தீபம்	—	
30.	திருவருள் விலாசம்	—	
31.	தேவாரசந்தப்பாமாலை	—	
32.	திருப்பரங்கிரி மும்மணிக்கோவை	—	பாலகவி. வே. இராமநாதன் செட்டியார்.

திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம்

பத்துப்பாட்டின் சத்துப்பாட்டாக முத்துப்பாட்டாக ஏனைய பாட்டுக்களுக்கெல்லாம் கடவுள்வாழ்த்துப் பாட்டாக இருக்கும் முதற்பாட்டுத்தான் திருமுருகாற்றுப்படை. இச்சிறப்புமிக்க திருப்பாட்டில் முதற்கண் குறிப்பிடப்படுவதும் பரங்குன்றமே. இதனை 317 அடிகளில் சங்ககாலச் சான்றோரான நக்கீரர் பாடியருளியிருக்கிறார்.

முருகன் அருளைப்பெற்ற ஒருவன் அவ்வருள் பெற விரும்பிய மற்றொருவனை முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. ஆற்றுப்படை என்னும் புறத்துறையைச் சேர்ந்தது. ஆற்றுப்படுத்துபவன், முருகன் எங்கும் உளன்-காடும், காவும், கவின்பெறு துருத்தியும், யாறுங்குளனும் வேறுபல் வைப்பும், சதுக்கமும், சந்தியும், புதுப்பூங்கடம்பும், மன்றமும், பொதியிலும், கந்துடை நிலையினும் உளன் என்பதை இப்பாட்டின் மூலம் வெளிப்படுத்துகின்றான். மற்ற ஆற்றுப்படை இலக்கியங்களினின்றும் இது தனித்து நிற்பது. இதுவொன்றே இதன் பெருமையினை விளக்கும்.

இப்பரங்குன்றம் சங்ககாலத்திலேயே முருகனுக்குரிய திருவிடமாய் விளங்கியது என்பதை இப்பாட்டு வலியுறுத்துகிறது. ஆயின் பரிபாடலில் கூறப்படுவதைப் போன்று தெளிவான வருணனை இதன் மூலம் நமக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் திருப்பரங்குன்றத்தின் இயற்கை நலங்களையெல்லாம் ஒரு சில வரிகளிலேயே நக்கீரனார் நம் முன் வைத்துவிடுகின்றார்.

தண்பரங்குன்றத்தைக் கூறும் முன்னர் மதுரை மாநகரத்தின் தோற்றத்தை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார். மாநகர வாயிலையும், அங்கு நிறுவப்பட்டிருக்கும் நெடுங் கொடியினையும் கடைத்தெருவினையும், இரு

மருங்கும் விளங்கி நிற்கும் பெருநிலை மாடங்களையும் கூறி விட்டு இத்துணைச் சிறப்பமைந்த மாநகருக்கு மேற்கில் மதுரைக்கும், பரங்குன்றத்திற்கும் இடையில் வளவிய நெல் வயல்கள் முற்றிய கதிர்களோடு காட்சி தருகின்றன. இவ் வயல்களுக்கிடையே தாமரை மலர்ந்து பொலிவுடன் திகழ் கிறது. இத்தாமரை மலர்களில் வண்டுகள் சென்று தோய்ந்து தேனை மாந்தும். தேன் மாந்திய மயக்கத்தால் பகற்போது மறைவது கூடத் தெரிவதில்லை. தாமரை மலரும் குவிகிறது. மலர் குவியவும் மலருக்குள்ளே மயக்கத்தால் வீழ்ந்து கிடந்த வண்டினங்களும் உறங்குகின்றன. பின் வைகறையில் நெய் தற்பூ மலரவும் அதனிடத்து சென்று அவ்வண்டினங்கள் தேனுண்ணும். இவ்வாறு களிகூரும் வண்டினங்கள் கிழக்கே செங்கதிரோன் எழுந்தவுடன் பரங்குன்றம் பறந்து சென்று ஆங்குள்ள சுனைக்குச் சென்று, அச்சுனையிடத்தே மலர்ந் திருக்கும் நீல மலர்களின் தேனையுண்டு ஆரவாரிக்கும். இப்படிப்பட்ட நலம்வாய்ந்த பரங்குன்றத்தில்தான் முருகன் உறைகின்றான் என்று குன்றத்தின் கோலச்சிறப்பினைக் காட்டுகின்றார்.

இப்படிக், குன்றுதோறாடும் குமரனின் உறைவிடங் களைக் கூறிய நக்கீரர் முருகனைக் கண்டு வழிபடுவோர் அவன் புகழை எவ்வெவ்வாறெல்லாம் ஓதுகின்றனர் என்பதைச் சிறிது விரித்துரைக்கின்றார்.

"ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பின் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராளா
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உறுகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பெயர் - இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந, குரிசில்"

என்றெல்லாம் அந்தக் குமரனின் சிறப்பை நக்கீரர் பாடுகிறார்.

பரங்குன்றத்தில் நிகழ்ந்த இயற்கை நிகழ்ச்சிகளுக்குப் பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் மூன்று வகையாக விளக்கம் கூறுகின்றார்.

"பரங்குன்றில் அகன்வயலில் மலர்கள் மலர்தலையும் வண்டினம் தேனுண்டு கிடந்து சென்று சுனைமலரைச் சூழ்ந்து ஒலித்தலையும் காண்கின்றோம். வண்டின் நிகழ்ச்சியில் வழிபாடொன்று உள்ளுறுத்தப்படுவது இதனால் உணரப்படுகின்றது. அவ்வழிபாடு யாது? தாமரையைச் செல்வர் மனையாகவும், தாமரையில் துஞ்சிய வண்டினைச் செல்வராகவும், வைகறையில் நெய்தலை ஊதுவது செல்வர் வைகறையில் துயிலெழுந்து நீராடிச் செல்வதாகவும், அவ்வண்டினம் சுனை மலரையடைந்து ஒலிப்பதைச் செல்வர் பரங்குன்றடைந்து முருகனை வழிபடுவதாகவும் கொண்டால், மதுரை மாநகரிடத்து வாழும் செல்வப்பெருமக்கள் நாட்காலையில் எழுந்து நீராடிப் பரங்குன்றம் சென்று முருகப்பெருமானை வழிபடக் கண்டு அவன் அமர்ந்து உறைகின்றான் என்பது புலனாகிறது."[1]

இந்நூல் தோன்றியது குறித்து ஒரு வரலாறு வழங்குகிறது. திருப்பரங்குன்றத்தில் சரவணப்பொய்கையின் கரையில் ஓர் அரசமரம் நின்றது. அதிலுள்ள இலை நீரில் விழுந்தால்

1. பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள் — கழக வெளியீடு.

மீனாகவும், நிலத்தில் விழுந்தால் பறவையாகவும் மாறும். ஒருகால் ஓர் இலை பாதி கரையிலும், பாதி நீரிலுமாக விழுந்தது. கரையில் விழுந்த பகுதி பறவையாகவும், நீரில் விழுந்தது மீனாகவும் அமைந்த விசித்திரப் பிராணியாக அவ்விலை மாறிற்று. பறவைப் பகுதி விண்ணிடத்துப் பறக்கவும், மீன் பகுதி நீருள் மூழ்கவும் முயன்றன. அப்போது அங்கு கரையில் பூசை செய்துகொண்டிருந்த நக்கீரர் ஏகாக்கிரக சிந்தனையில் இருந்து வழுவி இந்த அதிசயத்தைக் கண்ணுற்று இரண்டையும் விடுவிக்க முயன்றார். சிவபூசையில் வழுவிய காரணத்தால் ஒரு பிரமராட்சசு நக்கீரரைப் பிடித்துக்கொண்டுபோய், ஒரு குகையில் அடைத்துவிட்டது. அக்குகையில் இவரைப்போல் வழுவிய 999 பேர் ஏற்கனவே அடைபட்டிருந்தனர். இவரையும் சேர்த்து ஆயிரம்பேராகவே, அத்துணைப் பேரையும் உண்டுவிட எண்ணி அப்பிரமராட்சசு நீராடி வருதற்குப் போயிற்று. அப்பொழுது நக்கீரர் முருகாற்றுப்படையைப் பாட முருகப்பெருமான் அவரைக் குகையினின்றும் விடுவித்தனர். இந்நூலை ஓதுவாருக்கு வேண்டும் வரம் கொடுப்பேனென்றும் முருகப்பெருமானருள் செய்தனர்.

இவ்வரலாறு வேறுசில வேறுபாடுகளுடன் முதன் முதலாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலில் காணப்படுகிறது. இந்நூலின் காலத்தைக் கி.பி. 13-ஆம் நூற்றாண்டென உ.வே. சாமிநாதையர் வரையறுத்துள்ளார்.

திருப்புகழார், கீரனுக் குகந்து............உலகம் உவப்ப வென்றுன் அருளால் அளிக்குகந்த பெரியோனே[2], எனவும், 'மலை முகஞ்சுமந்த புலவர் செஞ்சொல் கொண்டு வழிதிறந்த செங்கை வடிவேலா'[3] எனவும் கூறுகின்றார். இவருடைய காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு. இவ்வரலாறு கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதலாகக் கர்ணபரம்பரையாக வழங்கத் தொடங்கியதெனலாம்.

2. செய்: 352 — சமாஜப் பதிப்பு.

3. திருப்புகழ்: 1201.

பரிபாடலில் பரங்குன்றம்

தொகை நூல் எட்டனுள் ஐந்தாவதாக வைத்து எண்ணப் படும் நூல் பரிபாடலாகும். பரிபாட்டு என்பதற்கு இலக்கணம் கூறப் போந்த தொல்காப்பியர் இது வெண்பா யாப்புடையது என்றும், ஆசிரியம், வஞ்சி, கலி, வெண்பா, மருட்பா முதலான பாக்களின் உறுப்புக்களைப் பெற்றுவரும் என்றும், கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து, சொற்சீரடி, முருகியலடி என்னும் கலியுறுப்புக்களும் பெற்றுவரும் என்றும், அதுவும் காமப் பொருள் பற்றியே வரும் என்றும் செய்யுளியலில் கூறியுள்ளார்.

ஆனால் நமக்குக் கிடைத்துள்ள 22 பாடல்களில் பெரும் பான்மை கடவுள் வாழ்த்துப் பாடலாகவே அமைந்துள்ளன. இப்பரிபாடல் முதலில் 70-ஆக இருந்திருத்தல் வேண்டும். இறையனார் களவியல் உரையிலும், இளம்பூரணர் உரை யிலும் எழுபது என்ற எண்ணே வகுக்கப்பட்டுள்ளது. இருப்பி னும் இப்போது இழந்தனபோக எஞ்சி நிற்பன 22 பாடல்கள் தான். இதில் செவ்வேளுக்கு ஏழு பாடல்; திருமாலுக்கு ஏழு பாடல்; வையைக்கு எட்டுப்பாடல்.

செவ்வேளைப் பற்றி நல்லந்துவனார், கடுவன் இளவெயின னார், குன்றம் பூதனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழிசியார் ஆகிய அனைவரும் பாடியுள்ளனர். இப்பாடல் களின் துணை கொண்டு பரிபாடல் எழுந்த காலத்துக் குன்றத் தின் நிலையினைத் தெளிவாக அறியமுடியும். ஏழு பாடல்களே செவ்வேளுக்குரியதாக இப்போது கிடைத்துள்ள போதிலும், இவ்வேழு பாடல்களும் ஏழுகோடிப் பாடல்களில் உணர்த்த முடியாத அக்கால நிகழ்ச்சிகளை உணர்த்தி நிற்கின்றன என்று கூறுவது மிகையன்று.

பொதுவாக எல்லாப் பாடல்களிலும் பரங்குன்றத்தின் இயற்கை வளனும், அருவியோசையும், வண்டின் ஒலியும் பறவைகளின் ஆரவாரமும், மயில்களின் ஆடலும், குயில்களின் கூவலும், குறிப்பிடப் படுவதால் — அத்துணையும் கூறுவது

மிகைபடக் கூறல் அல்லது கூறியது கூறல் என்னும் குற்றங் களின் பாற்படும் என்பதால் அவற்றை இயன்றவரை விடுத்துச் சில பல நிகழ்ச்சிகள் மட்டும் இங்கு கூறப்படுகிறது.

'ஒருதிறம் பாணர் யாழின் தீங்குரலெழ
ஒருதிறம் யாணர் வண்டின் இமிரிசையெழ
ஒருதிறம் கண்ணார் குழலின் கரைபெழ
ஒருதிறம் பண்ணார் தும்பி பரந்திசையூத
ஒருதிறம் மண்ணார் முழவின் இடையெழ
ஒருதிறம் அண்ணல் நெடுவரை அருவிநீர்ததும்ப
ஒருதிறம் பாடல்நல் விறலியர் ஒல்குபுநுடங்க
ஒருதிறம் வாடை யுளர்வயிற் பூங்கொடிநுடங்க
ஒருதிறம் பாடினி முரலும் பாலையங்குரலின்
நீடுகிளர் கிழமை நிறைமுறை தோன்ற
ஒருதிறம் ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல்தோன்ற'
—பரி: 17: 9 - 19.

என்று நல்லழிசியார் அங்கு எழும் மாறுபாட்டொலிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இப்பரங்குன்றில் அருவிநீர் வீழ்வதால் அது கீழ்ப்படர்ந்து சென்று வயல்களுக்குப் பாயும். அவ்வாறு பாய்ந்தபின்னை குன்றத்தில் விளையாடும் மகளிர்தம் அணிகலனினின்றும் வீழ்ந்த மணி அவ்வயலைச் சிதைக்கும் என்றும் கூறுகின்றார்.

திருப்பரங்குன்றத்தின் அடியில் தங்கியிருப்போர் வானு லகத்தில் உறையும் வாழ்க்கையையும் விரும்பமாட்டார்கள் என்றும் அவர் கூறுகின்றார்.

நப்பண்ணனார் தாம்பாடிய 19-ஆம் பாடலில் 'திருப் பரங்குன்றம் முருகன் வள்ளியை மணந்த இடம்' என்று கூறுகின்றார். அவர் கூறும் செய்திகள் அனைத்தும் ஓர்ந் தோர்ந்து இன்புறத்தக்கன.

திருப்பரங்குன்றத்தை நோக்கி மதுரை மாநகரத்து மைந்த ரும், மகளிரும் தத்தமக்கு ஏற்ற அணிகலன்களைப் பூண்டும், ஆடைகளை யணிந்தும், குதிரை, தேர் இவற்றின் மீதேறி

வருகின்றனர். இந்தக் காட்சி இடைவெளியின்றி நிறைதலால் அவர்களுடைய மலர் மாலைகள் அணிந்த தலைகள் எல்லாம் ஒத்தமலர்களைச் செறியவைத்துக் கட்டி நிலமகளுக்கு இட்ட மாலையைப் போலத் தோன்றுகிறது.

இவர்கள் மட்டுமல்ல. பாண்டிய மன்னனும் தம் உரிமைச் சுற்றத்தோடும், அமைச்சர் பெருமக்களோடும் மலையேறித் திருக்கோயிலை வலம் வந்தான். இக்காட்சி விண் மீன்கள் தன்னைச் சூழத் திங்கள் மேருமலையை வலம் வந்ததை ஒத்தது. பாண்டியனோடு வந்த சிலர் பரிவட்டம் கட்டி அவனைப் புகழ்ந்தேத்தினர். யானைக் கூட்டங்களுக்குச் சிலர் கரும்பை உணவாகக் கொடுத்தனர். இன்னும் சிலர் குதிரை களையும், தேர்களையும் வழியினின்றும் அகற்றினர். இக்காட்சிகளால் திருப்பரங்குன்றத்தின் நிலப்பரப்பு ஒரு பாசறை போலத் தோன்றியது.

பாண்டியனோடு மலைமீதேறி வந்தோர் சிலர் குரங்கு உண்ண பண்ணியம் கொடுத்தனர். சிலர் முசுக்கலைகளுக்குக் கரும்பை வழங்கினர். இன்னும் சிலர் தெய்வப்பிரமம் என்னும் வீணை வாசித்தனர்; சிலர் குழல் ஊத, சிலர் யாழிசைத்தனர். சிலர் முரசம் முழக்கினர்.

இங்கு மற்றொரு காட்சியையும் புலவர் காட்டுகின்றார். சங்க காலத்தில் ஓவியம் இருந்ததா? அதுவும் உன்னத நிலையில் இருந்ததா என்ற கேள்விக்கு விடை தரும் வகையில், திருப்பரங்குன்றத்தில் 'எழுத்துநிலை மண்டபம்' ஒன்று இருந்ததாகவும் புலவர் பெருமான் சித்தரித்துள்ளார்.

இந்த எழுத்துநிலை மண்டபத்திற்குள் நுழைந்த சிலர் அங்கு தீட்டப்பட்ட ஓவியங்களைக் கண்டு களித்தனர். சிலர் துருவ சக்கரத்தைப் பொருந்திவரும் ஞாயிறு முதலான கோள்களின் நிலைமைகளை விளக்கும் ஓவியத்தைக் கண்டனர். தமது மனைவியர் தம்மை வினவியதன் காரணமாக அங்கிருந்த ஓவியங்களைக் காட்டிச் சிலர், 'இவள் இரதி; இவன் மன்மதன்; இப்பூனை இந்திரன் கொண்ட பூனை

யுருவம்; இவள் அகலிகை, இவன் கௌதமன், இவள் சினத்தாலே கல்லுருப்பெற்ற அகலிகை உரு இது என்று விளக்கம் கூறினர்

ஆக இத்தகைய ஓவியங்களும் அங்கிருந்தன என்பது தெளிவாகிறது. இதனால் சங்க காலத்து, ஓவியக் கலைக்கும் பரங்குன்றம் ஒரு பக்கம் இடந்தந்து நின்றுள்ளது என்பது தெளிவு.

பரங்குன்றில் சுனையருகே நின்ற மரங்களின் இளந்தளிர்களை மகளிர் சுனையில் விழும்படி உதிர்க்க, சுனையருகே வந்த மகளிர் அப்பூங்கொத்துக்களைக் கண்டு ஐந்தலையரவம் என்றும், மூத்த பிள்ளை, இளைய பிள்ளை என்றும் கருதி மயங்கா நின்றனர் என்றும் புலவர் கூறுகின்றார். இப்பாடலாலே அக்காலத்துத் தமிழ் மக்கள் திருக்கோயில் வழிபாடு செய்த முறையும், விழா நிகழ்ச்சிகளும் உணரப்படும்.

திருப்பரங்குன்றத்தில் ஏழிலைப் பாலைமரம் அடர்ந்து இருந்ததாக நல்லச்சுதனார் 21-ஆம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

இங்கு ஆடல் மகளொருத்தி கூத்தாட, ஒரு தலைவி கூத்தியின் அழகு காரணமாகத் தன் தலைவனோடு ஊடல் கொண்டாள். மற்றொரு தலைவி தன் கணவனின் நோக்கிற்கு அவளைக் காட்டிலும் தன்னழகு மேம்பட்டுத் தெரியும் பொருட்டுக் கண்ணாடியில் தன்னுருவம் திருத்தினாள். பிறிதொரு தலைவி தன் கணவன் தன்னைத் தவிர அந்த ஆடலணங்கை விழையாது இருக்கும் பொருட்டுத் தன் கொங்கைகளில் சந்தனக் குழம்பைப் பூசிப்பூசி உதிர்த்துப் பின்னும் பின்னும் பூசி மணக்க நின்றாள். இவை எல்லாம் கைவல்லான் தீட்டிய ஓவியக்காட்சி போல மீண்டும் நினைவுக்கு வருகின்றன என்று நல்லச்சுதனார் பாடுகின்றார்.

நல்லந்துவனார் தமது 8-ஆம் பாடலில் காட்டுகின்ற காட்சிகள் குன்றத்துக் காதலர் உணர்வை வெளிக்காட்டுகின்றன.

திருமாலும், சிவனும், நான்முகனும், ஆதித்தர் பன்னிருவரும், அசுவனி மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும்,

உருத்திரர் பதினொருவரும், திக்குப்பாலகர் எண்மரும், ஏனைத் தேவர்களும், அசுரர்களும், முனிவர்களும் முருகனைக் காண்டற் பொருட்டுக் குன்றம் வந்து நிற்றலால் பரங்குன்று இமயக்குன்று நிகர்த்தது என்கின்றார்.

இங்கு முகில் முழக்கம் கேட்ட சேவல், யானை பிளிறியதோ என எண்ணிக் குரல் கொடுக்க, அந்தக் குரல் கேட்டு யானை பிளிற இதனால் இம்மலை முழையின் கண் எதிரொலி எழுந்தது.

பரத்தையர் வீட்டினின்றும் வந்த தலைமகனை நோக்கி, 'நின் மேனியில் அயல் மகளிர் மணம் நாறுகின்றது' என்று தலைவி கூற, தலைவன் மிகச் சாதுரியமாக, 'மலருண்கண்ணாய்! இது திருப்பரங்குன்றத்துள்ள கனியினும், மலரினும் பயின்று வந்த காற்று என்மேல் பட்டதனால் ஏற்பட்ட மணம்!' என்று விடை கூறுகின்றான். இந்தக் காட்சியும் குன்றத்தில் நடப்பதாக நல்லந்துவனார் குறிப்பிடுகின்றார்.

திருப்பரங்குன்றத்தை நோக்கித் தலைமகளிர் வேறுபடு சாந்தமும் விறுபடு புகையும், ஆறுசெல்வளியின் அவியா விளக்கமும், நாறுகமழ்வீயும், கூறுமிசை முழவமும், மணியுங் கயிறும், மயிலுங்குடாரியும், பிணிமுகமும் ஆகிய இவற்றையும் இன்னோரன்ன பிற பொருள்களையும் ஏந்திச்சென்று தொழுவாராயினர். வரங்கொள்வோரும் வயிறுவாய்த்தல் வேண்டுவோரும், 'எம்தலைவர்க்குச் செய்பொருள் வாய்க்க' என்பாரும், எம்கணவர் போரில் வெல்க என்பாரும் அங்கு வழிபட்டவர் என்று கூறுகின்றார் புலவர்.

குன்றம்பூதனார் பரங்குன்றை இரண்டு பாடல்களில் (9, 18) பாடியுள்ளார். இப்பாடல்களில் வள்ளியும், தெய்வானையும் போரிட்டுக் கொள்வதாகப் புலவர் கற்பனை நயம்படச் சில காட்சிகளைக் காட்டுகின்றார். தெய்வானையின் பாற் செல்லாதே என முருகனுடைய கைகளைக் கட்டி மாலையைக் கோலாகக் கொண்டு வள்ளி புடைத்ததாகவும் கூறுகின்றார்.

தெய்வானையின் மயிலும், வள்ளியின் மயிலும் பகைத்து எதிர்த்தன; கிளிகளும் பகைத்தன; இருவர் வண்டுகளும் பொரு

தன; இருவர் தோழிகளும் போரிட்டனர் என்று அவர் காட்டி இறுதியில் வள்ளி வெற்றியுற்றதாகக் கூறிப்பெருமை கொள்கின்றார்.

ஒரு கானவன் திருப்பரங்குன்றத்து மயிலின் சாயலைக் கண்டு அதில் உளம்பறிகொடுத்து நிற்க, அது கண்ட அவன் காதலி, அவனோடு ஊடியதாகவும் குன்றம்பூதனார் குறிக்கின்றார்.

இவ்வாறு பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் முழுமையும் பரங்குன்றமும், அங்குள்ள முருகன், அருவி, சுனை மயில், கிளி, குரங்கு மற்றும் இயற்கை வளமும் பேசப்படுகிறது.

இக்காட்சிகளை எல்லாம் நம்கண்முன் கொண்டு வந்து நிறுத்திக் காணுங்கால், அக்காலத்து குன்றமிருந்த எழிலும், சிறப்பும் புலப்படும்.

அகநானூற்றில் குன்றம்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நெடுந்தொகை என்னும் அகநானூற்றின்கண்ணும் திருப்பரங்குன்றத்தின் சீரும் சிறப்பும் பேசப்படுகின்றது.

பரங்குன்றத்தின் இயற்கை நலனும், இங்கு முருகன் உறைகின்றான் என்ற உண்மையும் இரு பாடல்களில் வலியுறுத்தப்படுகிறது. சங்க நூலான இவ்வகநானூற்றில் மதுரை மருதனிளநாகனார் * தாம் திருப்பரங்குன்றத்தைப் பாடிய தோடமையாது தமக்கு முன்னர் குன்றத்தின் சிறப்பைப் பாடிய பரிபாடல் நல்லந்துவனையும் தம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட கிழத்திக்குத் தோழியுரைப்பதாக அமைந்த பாடலில் திருப்பரங்குன்றத்தின் தன்மை விளக்கப்படுகிறது.

"சூரபன்மாவினையும், அவன் சுற்றத்தினையும் தொலைத்தவன்; ஒளி பொருந்திய இலைத் தொழிலையுடைய நெடிய வேலையுடையவன்; சினம் மிக்க முருகன் தண்பரங்குன்றத்துறைகின்றான். அந்தக் குன்றத்தை நல்லந்துவனார் பாடியுள்ளார். அங்கு சந்தன மரங்கள் மிக்கிருக்கும்; இனிய தீவிய பைஞ்சுனையில் தண்ணறுங் கழுநீர்ப்பூக்கள் பூத்திருக்கும்."

—அகம் ; 59

இவ்வாறு மருதனிளநாகனார் திருப்பரங்குன்றம் பற்றிப் பாடுகின்றார்.

இதே தொகை நூலில் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்ற மற்றொரு புலவரும் பாடுகின்றார்.

எருக்காட்டூர் என்ற ஊர்ப்பெயர் இத் திருப்பரங்குன்றத்தில் உள்ள தமிழிக்கல்வெட்டிலும் குறிக்கப்படுகிறது (S. I. I. Vol. XII - 51) அந்த எருக்காட்டூரில் இருந்த புலவராக இவர் இருக்கலாம்.

தலைமகளைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்ற றிந்த தலைவன், தலைவியை வரைந்து கோடற்பொருட்டுப் பொருள்தேடவேண்டுங் காலம் நிகழ்வுழி தலைவியைப் பிரிய மாட்டாமையால் தன்னுடைய நெஞ்சிற்குத் தானே சொல்லு வதாக அப்பாடல் அமைந்துள்ளது. 'பல்வேறு இடர்கள் நிறைந்த சுரத்திடையே சென்று அரிதின்முயன்று பொருள் கொணர்ந்தாலும் அவற்றால் எத்துணைப் பயனுமில. யான் கடத்தற்கரிய நீளதர் அத்தத்திடைச் செல்வேனாயின், தலைவியின் கண்களில் நீர்தோன்றும்; எனவே இச்செலவழுங்கு வேனாக' என்று கூறுகின்றான். (அகம்: 149).

இதில் தலைவியின் கண்களுக்கு நீலமலர்களைப் புலவர் உவமையாக்குகின்றார். "அந்த நீலமலர்கள் வானளாவிய கொடிகள் அசைகின்ற தெருக்களையுடைய கூடல்மா நகரின் மேற்கே உள்ள, பல பொறிகளை உடைய, வெல்லும் மயிற் கொடியினை உயர்த்த, ஒடியா விழாவின் நெடியோன் குன்றத்துச் சுனையிற் பூத்தன" என்று கூறுகின்றான்.

இந்தப் பாடலின் மூலம் திருப்பரங்குன்றம் மதுரைக்கு மேற்கில் இருந்ததென்றும், அங்கு விழாக்கள் இடையறாமல் நாடொறும் நடந்து கொண்டிருக்கும் என்றும் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் தெரிவிக்கின்றார். இவ்வெருக்காட்டூர் தாயங்கண்ணனாரே அகநானூற்றில் 319, 357 ஆகிய எண் ணுள்ள பாடல்களையும் பாடியுள்ளார்.

காஞ்சி புகழும் குன்றம்

பத்துப் பாட்டுள் ஒன்றாகப் புகழப்படும் பெருகு வள மதுரைக் காஞ்சியைப் பாடிய புலவர் மாங்குடி மருதனார் ஆவார். இவர் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் அவைக்களத்தின் தலைமைப் புலவராவார்.

பாண்டியன் போருடற்ற எழுந்த காலத்துத் தாம் கூறிய வஞ்சினக் காஞ்சியில்,

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலையிய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை'
—புறம் : 72

என்று கூறியுள்ளமையால் மாங்குடி மருதனாரின் தனிச்சிறப்பு நன்கு விளங்கும்.

இவர் பாடிய மதுரைக்காஞ்சியின் பாட்டுடைத்தலைவனும் இவனேயாவான். இந்நூல் பத்துப் பாட்டினுள் மிகுதியான அடிகளை (782) உடையது. பாண்டியனுக்கு இளமை நில்லாமை, யாக்கை நில்லாமை என்பதை அறிவுறுத்தற் பொருட்டுப் புலவர் இதனைப் பாடினார்.

'பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே'

என்பது தொல்காப்பியர் காஞ்சித்திணைக்கு வகுத்த இலக்கணம்.

நிலையாமை பற்றிப் பாடவந்த இந்நூலிலும் அளக்கலாகா அளவும் பெருமையும், துளக்கலாகா நிலையும், தோற்றமும் உடைய பரங்குன்றின் பெருமை பேசப்படுகின்றது.

இனிய ஓசையினையுடைய துளைகளையுடைய முகில்கள் பெய்யும் குளிர்ந்த திருப்பரங்குன்றில் விழாக் கொண்டாடும்

ஆரவாரமும், புது நீர் விழாவின் ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட மகளிர்திரள், தம்மிடத்து நெருங்கின கோதைதம் கணவர் மாலையுடனே அழகுபெறக் கூடுமாறு அவர்களுடனே நீராடும் ஆரவாரமும் ஆகிய அவ்வோசை முழுவதும் ஏனைப் பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய பெருமையுடைய வானத்துச் சென்று முழங்கி ஆண்டு வாழ்நற்கு இனிதாக ஒலிக்க, குருகென்னும் பறவைகள் கூப்பிடும்படி மனையிடத்து மரங்கள் தொறும் மீனைத் திருத்தும் பாணர் குடியிருப்பில் பாடலானும் ஆடலானும் எழுந்த ஓசை என்று பரங்குன்றத்து ஆரவாரத்தையும், மகிழ்ச்சிப் பெருக்கையும் காட்டுகின்றார்.

"ஒலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞர் அரிபறை யின்குரல்
தளிமழை பொழியுந் தண்பரங் குன்றிற்
கலிகொல் சும்மை யொலிகொ ளாயம்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னாடும் இசையே யனைத்தும்
அகலிரு வானத் தமிழ்ந்தினி திசைப்பக்
குருகுநரல மனை மரத்தான்
மீன்சீவும் பாண்சேரி யொடு
மருதஞ் சான்ற தண்பனை சுற்றி"

— மது: 262 - 270.

பரங்குன்றில் மழைபொழியும் ஓசை கேட்டற்கு இனிதாக இருப்பதால் ஆசிரியர் இன்குரற்றளியென்று கூறினார். ஆயின், நச்சினார்க்கினியர், தளி — துளி; பொழியும் என்றதற்குத் தங்கும் என்று பொருள் கூறினர். திருப்பரங்குன்றத்தில் எப்பொழுதும் மழை பொழிதலுண்மையால் அது குளிர்ந்திருக்கும் என்பது ஆசிரியர் காட்டும் முடிபு.

கலித் தொகையில்

எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகையும் ஒன்று. "கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்று இதன் பெருமை பேசப்படுகின்றது. இதனுள் கடவுள் வாழ்த்து உட்பட 150 கலிப்பாக்கள் அடங்கி உள்ளன. ஐந்திணைக்கும் உரிய ஒழுக்க வகையுடன், பாலைத்திணையில் 35 பாடல்களும், குறிஞ்சித் திணையில் 25 பாடல்களும், முல்லைத் திணையில் 17 பாடல்களும், நெய்தல் திணையில் 37 பாடல்களும் கொண்டு இத்தொகை நூல் விளங்குகிறது.

இத்திணைப் பாடல்கள் ஒவ்வொரு திணையும் ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்றனவென்று பழம்பாடல்[1] ஒன்று தெரிவிக்கின்றது. ஆயின், அது பற்றி ஆராய்ச்சியாளர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்:

"கலித்தொகை என்னும் நூல் சங்க காலத்தின் இறுதியில் களப்பிரர் படையெடுப்புக்குச் சிறிது முற்பட்ட காலத்தில் பாண்டியன் மீதும், அவனது நாட்டின் மீதும் அளவற்ற பற்றுக் கொண்ட பாண்டிய நாட்டுப் புலவர் ஒருவரால் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்று கொள்வது மிகவும் பொருத்தமாகும்.... கலித்தொகையின் காலம் ஏறத்தாழக் கி.பி. 300 எனலாம்"[2]

சங்க நூல்களுள் ஒன்றான இதனுள்ளும் திருப்பரங்குன்றத்தைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் அக்குறிப்புக்கள் வெளிப்படையாகத் திருப்பரங்குன்றத்தைச் சுட்டவில்லை எனலாம்.

இதற்கு, கி.பி. 14-ஆம் நூற்றாண்டினர் எனக் கருதத்தகும் நச்சினார்க்கினியர் எழுதிய உரையில் இருந்து சான்று காட்ட

1. 'பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்
நல்லுருத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி!

2. டாக்டர் மா. இராசமாணிக்கனார், காலஆராய்ச்சி - பக். 118-119

முடிகிறது. உரையாசிரியர்களில் ஒருவரான உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் மதுரையைச் சேர்ந்தவர்; மதுரையிலேயே பிறந்து வளர்ந்தவர்; 'மதுரை பாரத்துவாசி' என்று அழைக்கப்படுபவர். அதற்கேற்றவாறு திருப்பரங்குன்றத்தைத் தமது உரையில் சுட்டிக் காட்டிச் செல்கின்றார்.

பாலைக்கலி 27-ஆம் செய்யுள்:

'கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னாதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும்
விரும்பார்கொல்'

இது, தலைவன் குறித்துப் பிரிந்து இளவேனில் வரவின்கண் எம்மையோ மறக்க, இக்காலத்து இவ்வூரின் கண்தாம் விளையாடும் விளையாட்டும் மறந்தாரோ எனச் சொல்லி ஆற்றாளாய் தலைவிக்கு, தோழிக்கு தலைவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியதென்னும் துறையின் பாற்பட்டது.

இப்பகுதியில் கூறப்படும்,

'ஒன்னாதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்
கொல்'

என்ற பகுதிக்கு உரையெழுதும்போது நச்சினார்க்கினியர் "பகைவரை மாயஞ்செய்து கொல்லாது வென்று கொல்லும் பரக்குங் கடலிடத்து எய்தா நின்ற மாமரத்தைத் தடிந்த வென்றி வேலையுடைய முருகன் திருப்பரங்குன்றின் மேற் பரத்தையருடன் விளையாடும் விளையாட்டையும் விரும்பாரோ?" என்று எழுதுகின்றார்.[3]

இதேபோன்று மருதக்கலியுள்ளும்,

"ஈரணிக் கேற்ற வொடியாப் பருவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற் பாடிப் பலநாளும்
ஆராக் கனைகாமங் குன்றத்து நின்னொடு
மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ"

3. கலித்தொகை உரை -:அனந்தராமையர் பதிப்பு; பக். 152.

என்ற 93-ஆம் செய்யுளுக்கு உரையெழுதும்போதும், "சூர பன்மாவைக் கொன்ற சிவந்த வேலுடைய முருகனைப் புகழ்ந்து நிறையாத செறிந்த காமவேட்கையாலே திருப்பரங்குன்றி னிடத்தே நின்னோடே மாரிக்காலத்தே பலநாளும் தங்கின கடவுளரைக் கண்டாயோ வென்றாள்" (பக். 563) என் கின்றார்.

இங்கு சுட்டப்பட்ட இவ்விரு பகுதிகளிலும் பரங்குன்றம் என்று வெளிப்படையாகச் சொற்கள் கூறப்படா விட்டாலும், வென்வேலான்குன்று என்று பொதுப்படக் கூறினாலும் அது பரங்குன்றத்தையே சேரும் என்று துணிபாகக் கொள்ளப்பட்டி ருத்தலை உணரலாம்.

இச்செய்யுட் பகுதிகளின் மூலம் கலித்தொகை காலத்துத் திருப்பரங்குன்றத்தின் நிலை எடுத்துரைக்கப்படுகின்றது. இங் குள்ள மலைப்பகுதிகளில் மயிற்கூட்டங்கள் ஆடிக் கொண்டி ருக்கும் என்பதும் இன்பம் விளைதற் பொருட்டுப் பரத்தை யருடன் தலைமக்கள் விளையாட்டயர்வர் என்பதும் இப்பகுதி கள் மூலம் உணரப்படுகின்றன.

முருகனுடைய உறைவிடங்களைப் பற்றியோ அல்லது அப்பெருமானுடைய செயற்பாடுகளைப் பற்றியோ விளக்க வந்த புலவர்களின் கண்களில் முதற்கண் பட்டது பரங் குன்றமே என்பது எளிதில் புலப்படுகிறது. ஆறுபடை விடு களிலும் திருமுருகாற்றுப்படையில் முதற்படை வீடாக வைத் தெண்ணப்பட்ட பரங்குன்றமே அச்சங்கப்புலவர்களின் அருங் கண்களுக்கு முதற்கண் தென்பட்டிருக்கின்றது. இது குன்றத் தின் தனித்தன்மையை அதன் தலைமையை விளக்குவதாக அமைந்துள்ளதெனலாம். ஏனைய படைவீடுகள் இத்துணை அளவுக்குச் சங்க நூல்களில் குறிப்பிடப் பட்டிருக்குமா என் பது சற்றே ஆய்தற்குரிய ஒன்றேயாம்.

தேவாரம் பெற்ற தலம்

இலக்கிய உலகில் மட்டுமின்றி சமய உலகிலும் திருப்பரங்குன்றத்தின் இனிமை பேசப்படுகிறது. சைவசமய நாயன்மார்களில் திருஞான சம்பந்தரும், சுந்தரரும் இத்தலம் பற்றிப் பெரிதும் பாடிச் சென்றுள்ளனர்.

சம்பந்தர் தேவாரம் முழுவதும் முழுக்க முழுக்கச் சிவபெருமானைப் பற்றியதாகவே உள்ளது. திருப்பரங்குன்றத்தில் தேவாரகாலத்திற்கு முன்பு முருகன் வழிபடப்பட்டு வந்தானா என்பதும் அறிய முடியாததாக இருக்கின்றது. ஏனென்றால் முருகனைப் பற்றிய குறிப்புகளே இப்பதிகத்தில் காணப் படுவதில்லை.

சம்பந்தர் பாடல்களில் இயற்கை வருணனை பேசப்படுகின்றது.

'வளர்பூங் கோங்க மாதவியோடு மல்லிகைக்
குளிர்பூஞ் சாரல் வண்டறை சோலைப் பரங்குன்றம்'

என்றும்,

'மயில்பெடை புல்லிமா நடமாடும் வளர்சோலைப்
பயில்பெடை வண்டு பாடலறாத பரங்குன்று'

என்றும் பரங்குன்றத்தின் இயற்கை நலன் கூறப்படுகின்றது.

'அங்க மொராறும் அருமறை நான்கும் அருள்செய்து
பொங்கு வெண்ணூலும் பொடியணி மார்பில்
பொலிவித்துத்
திங்களும் பாம்பும் திகழ்சடை வைத்தோன் தேன்மொழி
பங்கினன் மேய நன்னகர் போலும் பரங் குன்றே'

என்று சிவபெருமானைப் பாடுகின்றார்.

தளிர்போல் மேனித் தையல் நல்லாளொடு ஒரு பாகம் நளிர்பூங்கொன்றைச் சூடியமர்ந்துள்ள பரங்குன்றை யுன்னிய சிந்தை உடையவர்க்கில்லை உறுநோயே என்றும் சம்பந்தர் பாடுகின்றார்.

சுந்தரர் தேவாரத்தில் இரண்டாவது தலமாகத் திருப்பரங்குன்றம் உள்ளது. பதினொரு பாடல்கள் உள்ளன.

அவர் மூவேந்தர்களோடும் மதுரைமாநகரில் ஆலவாய் அண்ணலை வணங்கி, திருவாப்பனூர், திருவேடகம், முதலான பதிகளுக்குச்சென்று மீண்டும் மதுரைக்கு வந்து திருப்பரங்குன்றத்துப் பரமனைப் பணிந்து இப்பதிகங்களைப் பாடியுள்ளார்.

சேரமான்பெருமாள் நாயனார், பாண்டியவேந்தன், பாண்டியன் மகளை மணந்து பாண்டிநாட்டகத்திருந்த சோழமன்னன் ஆகியோருடன் சுந்தரர் இங்கு வந்து 'கோத்திட்டையும் கோவனும்' எனத்தொடங்கும் பதிகத்தைப் பாடினார்.

இத் திருப்பதிகம், இறைவற்குப் பணிசெய்தற்கு, இறைவற்கும் உயிர்கட்கும் உள்ள பெருமை, சிறுமைகளை உணர்த்துதற்பொருட்டு, இறைவனை உள்ளுறைச் சிறப்பு வகையால் (பழிப்பதுபோலப் புகழ்தல்) பாடப்பட்டுள்ளது.

இப்பதிகத்தின் இறுதிப்பாட்டில் பரங்குன்றம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

அப்பாடல்:

''அடிகேள் உமக்காட்செய அஞ்சுதுமென்
றமரர்பெரு மானையா ரூரன்அஞ்சி
முடியால்உல காண்டமூ வேந்தர்முன்னே
மொழிந்தாறுமோர் நான்குமோ ரொன்றினையும்
படியாஇவை கற்றுவல் லவ்வடியார்
பரங்குன்றமே யமர மன்னடிக்கே
குடியாகிவா னோர்க்கும்ஓர் கோவுமாகிக்
குலவேந்தராய் விண்முழு தாள்பவரே''

சேர, சோழ, பாண்டிய மன்னர்களுடன் சுந்தரர் இத்தலத்தை வழிபட்டதும் பெரியபுராணத்தில் கூறப்படுகின்றது.

திருக்கோவையார் கண்ட திருப்பரங்குன்றம்

திருவாதவூரில் பிறந்தவரான மாணிக்கவாசகரின் காலம் பற்றிப் பலரும் பல்வேறு முடிபுகளைக் கொடுத்துள்ளனர். அப்பல்வேறு அறிஞர்களின் முடிபுகளையும் இரண்டு வகையினுள் அடக்கி விடலாம். ஒன்று, மாணிக்கவாசர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவர்; மற்றொன்று தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் பிற்பட்டவர் என்பது. இவற்றுள் இரண்டாவது முடிபே ஏற்புடைத்ததாக இருக்கின்றது. முதலாம் வரகுண பாண்டியன் காலத்தவராக இவர் அறிஞர் பெருமக்களால் வரையறுக்கப்பட்டுள்ளார்.

இவருடைய திருவாசகமும், திருக்கோவையாரும் சைவ இலக்கிய உலகில் பெருவழக்குடையன. பன்னிரு திருமுறையில் எட்டாம் திருமுறையாக இந்நூல்கள் இடம் பெற்றிருப்பதினின்றே இவற்றின் பெருமையினை உணரலாம்.

நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை, புறநானூறு ஆகியன 400 பாடல்களைக் கொண்டமைந்து இருப்பதுபோல மாணிக்கவாசகரின் திருக்கோவையாரும் 400 பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

'ஆய்ந்த கலித்துறைதான் நானூறாகப் பொருண்
மேல்வாய்ந்த நற்கோவையாம்'

என்று வெண்பாப் பாட்டியலும்,

'கலித்துறை நானூறாய் நடப்பது
அகப்பொருட் கோவை நாமமன்றோ'

என்று சிதம்பரப் பாட்டியலும்,

'கோவை என்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப'

என்று பாட்டியல் சூத்திரமும் தெரிவிக்கின்றன.

இனி இரட்டுறமொழிதல் என்னும் உத்தியால், 'நான் நூறு' எனப்பிரித்து நானென்னும் செருக்கழிவது என்றும் பொருள் கூறுவர்.

திருக்கோவையார் என்னும் திருச்சிற்றம்பலக் கோவையின் பாட்டுடைத் தலைவனாகத் தில்லைத் திருச்சிற்றம்பலவன் குறிப்பிடப்படுகின்றான். இத்திருக்கோவையாரைத் தில்லைச் சிற்றம்பலவனே முதியோர் வடிவில் தில்லை வந்த மாணிக்க வாசகரை வேண்டி ஏட்டில் எழுதினன் என்று புராண வரலாற்றில் பேசப்படுகின்றது.

திருக்கோவையாரின் சிறப்பினை,

'ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலிதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே!

என்ற பாடல் தெளிவுறுத்தும்.

இத்திருக்கோவையாரில் திருவாதவூரர் 21 தலங்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அவற்றுள் திருப்பரங் குன்றத்தைப் பற்றி ஐந்து இடங்களில் பாடுகின்றார்.

திருப்பரங்குன்றம் மாணிக்கவாசகர் காலத்தில் சிங்கங்கள் திரிந்த இடமாகவும் இருந்திருக்கின்றது.

இதை அவர்,

''மைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்''

—'சேட்படை' பாடல்: 11

என்று குறிப்பிடுகின்றார். அப்படிப்பட்ட சிங்கங்களைக் கண்டு அங்கிருந்த குன்றத்தையொத்த யானைகள் நடுங்கின என்றும் குறிக்கின்றார்.

அவரே மீண்டும், இக்குன்றத்து அருவிபாய அதனால் புனத்திடை ஐவனம் என்னும் மலை நெல்லை இங்கு வாழ் மக்கள் விளைப்பர்; அங்ஙனம் விளைவித்த நெல்லைக் கொய்து

விட்டபோதும் அக்கதிர் கொய்த தட்டையில் தினைப்புனத்துக் கிளிகள் நட்பினால் ஓடாமல் அங்கேயே நிற்கும்' (செய் ; 144) என்றும் கூறுகின்றார்.

'திருவம்பலத்தை இருப்பிடமாகக் கொண்டுள்ள இறைவனின் திருப்பரங்குன்றத்தில் புனல்பாயும்' (செய். 299).

'இம்மலையில் காந்தள் பூக்கள் கனிவுடன் மலரும்' (செய். 292)

'இப்படிப்பட்ட மலர்கள் மலர்கின்ற பற்றொன்றில்லார் பற்றுந் தில்லைப்பரன் பரன்குன்றில் அவனது குமாரனாகிய முருகவேள் எழுந்தருளியிருப்பார்' (செய். 178)

என்றிவ்வாறு திருப்பரங்குன்றத்துக் காட்சிகளையும், அங்குறையும் உமைபங்கனையும், முருகவேளையும் மாணிக்க வாசகர் ஐந்து இடங்களில் எடுத்தோதுகின்றார். இச்செய்திகள் மூலம் அக்காலத்து மலை, பொழில் அடர்ந்து இருந்ததென்றும் காந்தள் பூக்கள் மலர்ந்தன என்றும், ஐவனம் விளைந்ததென்றும் முருகவேள் எழுந்தருயிருந்தார் என்றும் அறியப் படும்.

கோவை இலக்கியங்களுள் நமக்குக் கிடைத்த முதற் கோவை பாண்டிக் கோவையாகும். ஆயின் இதன் பாடல்கள் முழுமையும் கிடைக்கவில்லை. கி. பி. 9ம் நூற்றாண்டில்தான் மாணிக்கவாசகரால் இவ்விலக்கிய வகை உருப்பெற்றது.

பெரியபுராணம் பேசும் பரங்குன்றம்

பெரியர் புராணம் என்பது பெரிய புராணம் என வழங்கு கிறது. இதற்கு ஆசிரியர் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத் தொண்டர் புராணம்' என்பதாகும். இவருடைய காலம் பற்றி யும் கருத்து வேறுபாடு உண்டு. இருப்பினும், இவர் இரண் டாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்தவர் என்பது ஆராய்ச்சியாளர் கொண்ட முடிபு.

•

இப்பெரியபுராணம் ஆண் நடையும், பெண் நடையும் கொண்டு, மென்மையிலும், இனிமையிலும் இணையற்ற மொழி களால் தொடுக்கப்பட்ட பாமாலைச் செறிவாக விளங்குகிற தென்று கா. சு. பிள்ளை எழுதுவர்.

இப் பெரியபுராணத்திற்கு அடிப்படையாக அமைந்தவை திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார்நம்பி திருவந் தாதியும் ஆகும்.

இந்நூலகத்தும் திருப்பரங்குன்றம் பேசப்படுகின்றது. திருத்தொண்டர் புராணத்தின் உட்பிரிவான கழறிற்றறிவார் புராணத்தில் மூன்று பாடல்கள் காணப்படுகின்றன.

அவை,

பரமர்திருப் பரங்குன்றில் சென்றுபார்த் திபரோடு
புரமெரித்தார் கோயில்வலம் கொண்டுபுகுந்
துள்ளிறைஞ்சிச்
சிரமலிமா லைச்சடையார் திருவடிக்கீழ் ஆட்செய்யும்
அருமைநினைந்து அஞ்சுதும் என்றாரூரர் பாடுவார்.

கோத்திட்டை என்றெடுத்துக் கோதில்திருப் பதிகஇசை
மூர்த்தியார் தமைவணங்கி முக்கோக்க ளுடன்முன்பே
ஏத்தியவண் டமிழ்மாலை இன்னிசைபா டிப்பரவிச்
சாத்தினார் சங்கரனார் தங்குதிருப் பரங்குன்றில்

இறைவர் திருத் தொண்டுபுரி அருமையின் இருநிலத்து
முறைபுரியும் முதல்வேந்தர் மூவர்களுங் கேட்டஞ்சி
மறைமுந்நூல் மணிமார்பின் வன்றொண்டர்
தமைப்பணிந்தார்.

இவ்வாறு அப்பாடல்கள் செல்கின்றன.

இங்கு சேர, சோழ பாண்டியர்களுடன் சுந்தரர் ஒருசேர இறைவனை வழிபட்ட செய்தி மீண்டும் சேக்கிழாரால் எடுத்தோதப்படுகிறது. 'பரமர் திருப்பரங்குன்றம்' என்றும், 'சங்கரனார் திருப்பரங்குன்றம்' என்றும் சிவபெருமானுக்கே முதலிடம் கொடுத்துத் திருப்பரங்குன்றம் பற்றிப் பாடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்துக்குப் பிறகு தான் திருப்பரங்குன்றத்தில் முருக வழிபாடு சிறப்புப் பெறத் தொடங்கியது என்பதும் உணரற்பாலது.

கல்லாடம் காட்டும் குன்றம்

கல்லாடர் என்ற பெயரோடு தமிழகத்தில் வெவ்வேறு காலங்களில் மூன்று பெரும்புலவர்கள் இருந்துள்ளனர். அவர்களுள் காலத்தால் முந்தியவர் சங்ககாலப் புலவராவார். அவருடைய பாடல்கள் அகம், புறம், குறுந்தொகை என்னும் தொகை நூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இரண்டாமவர் கல்லாடம் என்ற இலக்கியச்சுவை மிகுந்த அகப்பொருள் நூலை ஆக்கியவர்.

மூன்றாமவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரையெழுதிய கல்லாடர் ஆவார்.

இங்குக் குறிப்பிடப்படுபவர் இரண்டாமவரே. கி.பி. 9-ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப் பட்டவர்.

கல்லாடரால் இயற்றப்பட்டமையின் இந்நூலும் கல்லாடம் என்று பெயர் பெற்றது. இந்நூல் பதினைந்தடிச் சிறுமையும், அறுபத்தாறடிப் பெருமையும் உடைய நூறு அகவற்பாக் களைத் தன்னகத்தே கொண்டது.

இக் கல்லாட நூல் எழுந்தமைக்குப் புராண வரலாறு ஒன்றும் கூறப்படுவதுண்டு. மாணிக்கவாசகரின் திருக்கோவை யாரை மதுரைப் புலவர்கள் ஏற்க மறுக்க, ஆலவாய் அண்ண லின் அருளால் அத் திருக்கோவையாருக்கு வழிநூலான இக் கல்லாடத்தை நூறு பாக்களால் அவர் ஆக்கினார் என்றும், இப்பாடல்களைப் பாடும்போது மாமதுரைச் சொக்க நாதப்பெருமான் ஒவ்வொரு பாடலுக்கும் 'நன்றுநன்று' எனக் கூறியதாகவும் கூறப்படுகிறது.[1]

---

1. கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயு
மாமறை ஈசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

—கடவுள் வாழ்த்து

கல்லாடத்தின் சிறப்பினை,

'கல்லாடங் கற்றவனோடு சொல்லாடாதே'
'கல்லாடங் கற்றவனோடு மல்லாடாதே'

என வழங்கும் பழமொழிகள் உணர்த்துகின்றன.

கல்லாடம் என்பது சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுள் ஒன்றாகும். மாணிக்கவாசகரும் தமது கீர்த்தித் திருவகவலில்,

'கல்லாடத்துக் கலந்தினி தருளி
நல்லாளொடு நயப்புற வெய்தி' (கீர் : 11-12)

என்று பாடுகின்றார்.

இத்திருத்தலத்தில் தோன்றியதால் கல்லாடர் என்னும் பெயர் பெற்றார் என்று சிலரும், இயற்பெயரே கல்லாடர் என்று சிலரும் உரைப்பர். இக் கல்லாடர் பெரும்பற்றப் புலியூர் நம்பிக்கும் முற்பட்டவர்; சுந்தரருக்குப் பிற்பட்டவர். கி. பி. 9ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 13ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தவர்.

இவரும் தமது நூலில் திருப்பரங்குன்றத்தைப் பற்றி விளக்குகின்றார். முருகப்பெருமான் இக்குன்றிடத்து வாழ்கின்றார் என்பதைப் பன்முறை கூறுகின்றார். திருப்பரங்குன்றம் மதுரையை ஒட்டியுள்ளமையான் மதுரை குன்றத்தால் அணி செய்யப்படுகின்றது என்று கூறுகின்றார்.

அவர் பாடல் பகுதிகள் வருமாறு :—

'கறங்குகால் அருவிப் பரங்குன் றுடுத்த
பொன்னகர்க் கூடல் சென்னியம் பிறையோன்'
செய். 1 : 8,9.

'ஒருபரங் குன்றம் மருவிய கூடல்' செய். 56.

'மணிவேற் குமரன் முதனிலை வாழும்
குன்றுடுத் தோங்கிய கூடலம் பதியோன்' செய். 6.

'பரன்குன் றுடுத்த பயங்கெழு கூடல்' செய். 70.

•

'மணிவேற் குமரன் திருவளர் குன்றம்
பேரணி உடுத்த பெருநகர்க் கூடல்' செய்- 81.

'மணிநெடுந் திருவேள்
சேவலங் கொடியோன் காவல்கொண் டிருந்த
குன்ற முடுத்த கூட லம்பதி!

செய். 8 : 6-8.

'கடன்மாக் கொன்ற திப்படர் நெடுவே
லுருளிணர்க் கடம்பி னெடுந்தார்க் கண்ணிய
னரிமகள் விரும்பிப் பாகஞ் செய்து
களியுட னிறைந்த வொருபரங் குன்றமும்'

செய்: 41 : 10-13

•

'மணிவேற் குமரன் களிமகிழ் செய்த
பேரருட் குன்றம்'

செய் : 48:11-12

இப்படி நூல் முழுவதும் ஏராளமான பகுதிகள் காணப் படுகின்றன. 25க்கும் அதிகமான இடங்களில் திருப்பரங் குன்றம் பற்றிப் பேசப்படுகிறது.

இப்பகுதிகளால் முருகன் மயிலூர்தியுடையவன் என்பதும் சேவற்கொடியுடையவன் என்பதும் பெறப்படுகிறது. திருப் பரங்குன்றத்து முருகன் வள்ளியொடும், தெய்வானையொடும் கூடியிருக்கின்றான் என்று நூல் முழுவதும் பரக்கப் பேசப் படுவது ஆய்வுக்குரியது.

சங்க காலத்தில் முருகன் என்ற அளவில் திருப்பரங்கும் றத்தின் சிறப்புக்கள் அக்காலப் பாடல்களில் எடுத்தோதப் பட்டு வந்துள்ளன. பின்னர் வந்த நூல்களில் திருப்பரங் குன்றத்தில் வள்ளி, தெய்வானை ஆகிய இருவருடனும் முருகன் உறைகின்றான் என்ற கருத்துக் கூறப்பட்டுள்ளது.

இக்கல்லாடத்தில், இங்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள் பெரும்பான்மையாக முருகன் வள்ளியொடும், தெய்வானையொடும் உறைவ தாகவே கூறப்பட்டுள்ளன. இதை நோக்கி, திருப்பரங்

குன்றத்தின் பின் பகுதியில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் தெற்கு நோக்கிக் குடைவிக்கப்பட்ட இரண்டாவது குடைவரைக் கோயிலில் முருகன் வள்ளியொடும், தெய்வானை யொடும் இருக்கும் திருக்கோலத்தைக் கண்டுநான் பாடப் பட்டிருக்கவேண்டும் என்ற எண்ணம் மேலெழுகிறது. அப்படி யாயின் கல்லாடம் எழுந்த காலமும் இதனால் எளிதில் விளங்கிவிடும்.

மலையின் தென்பக்கத்தில் அமைந்துள்ள இக் கோயில் இப்போது உமையாண்டார் கோயில் என்றழைக்கப்படுகிறது. சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவராகிய மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் பிரசன்ன தேவர் வேண்டிக்கொள்ள இச் 'சுந்தரபாண்டிய ஈஸ்வரமுடையார் கோயில் ஏற்படுத்தப்பட்டது என்று இங்குள்ள கல்வெட்டுக் கூறுவதால் இது எழுந்த பிறகு எழுதப்பட்டிருக்கவேண்டும்.

இங்குள்ள முருகன் வள்ளியொடும், தெய்வானை நாச்சியாரோடும் எழுந்தருளியிருப்பதால் கல்லாடர் பாடியது இக்கோயிலையே எனலாம். இப்படிக் கொள்வதால் கல்லா டருக்கும் குறையேதும் வந்துவிடாது. மாறாகக், கல்லா டத்தின் திட்டவட்டமான காலம் தெளிவுபடும்.

•

திருப்புகழில் திருப்பரங்குன்றம்

அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் அவதாரஞ் செய்தவராவார். இவர் ஒரு செட்டியாருக்குப் பரத்தை மாதிடம் பிறந்தவரென்பர். இவர் வாழ்க்கையின் முடிவு பற்றிப் பொருந்தாக் கற்பனைகள் செறிந்த காமக்கதைகளை மக்களிடத்தே பரப்பியுள்ளனர். கருநடவேந்தனாகிய பிரவுட தேவராயர் காலத்தைச் சேர்ந்தவராவார் இவர்.

நாம் பாடிய திருப்புகழிலே இன்பக்கலையினை எடுத்து விதந்து அதன் தீமையில் தப்பிக் கடவுள் நெறி தலைப்பட வேண்டும் என்று பல பாடல்களில் வற்புறுத்திக் கூறுகின்றார்

தாயுமானவர்,

'கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன எந்தை அருணகிரி' என்று அருணகிரிநாதரைப் புகழ்வார்.

அருணகிரிநாதர் கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, திருவகுப்பு, வேல்விருத்தம், உடற்கூற்று வண்ணம், திருப்புகழ், கந்தரந்தாதி ஆகிய நூல்களைப் பாடியுள்ளார்.

திருப்பரங்குன்றத்தின் மீது 'திருப்பரங்கிரி வகுப்பு' என்று ஒரு வகுப்பே தனியாகப் பாடியுள்ளார். திருப்புகழ் போலச் சந்தப்பாவால் அமைந்தது. முருகக் கடவுளின் அடிப்பெருமை, அடியார்பெருமை, அவன்கொண்டுள்ள வேலின் பெருமை, அருட்பெருமை, கடைக்கண் நோக்கப் பெருமை, திருக்கரங்களின் சிறப்பு இவற்றையெல்லாம் தனித்தனியாக எடுத்தோதுகின்றது. இறுதியில், 'பரங்கிரி முருகேசனே' என்று விளித்து முடிக்கின்றார்.

அருணகிரியாரின் ஒரு பாடல் வருமாறு:—

'சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே

கந்தனொன் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ

தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா

செந்திலங் கண்டிக் கதிர்வேலா
வெண்பரங் குன்றிற் பெருமாளே'

அருணகிரிநாதர் மதுரையில் இருந்தபடியே படை வீடுகளில் முதற் படைவீடான திருப்பரங்குன்றத்துக்குச் சென்று பெருமானைத் தரிசித்தார். முருகப்பெருமான் அங்கு தெய்வானையை மணந்ததைக் கூறினார். மணிவாசகப் பெருமானுக்கு உபதேசித்த குருநாதரும் வழிபடக் குருக்களாய் நின்ற பெரியவனே என்றும் பரவினார். நான்முகனும், தேவர்களும் முருகவேளை வழிபட்ட தலம் பரங்குன்றம் என்று விளக்கினார்.

இவ்வாறு அருணகிரிநாதரும் பரங்குன்றைப் பாடிப் பெருமை கொள்கின்றார்.

கந்தபுராணத்துக் குன்றம்

புராணங்களில் ஒன்பது புராணங்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. அவை பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், காஞ்சிப்புராணம், சேதுப்புராணம், காளத்திப் புராணம், கோயிற்புராணம், கந்தபுராணம், தணிகைப்புராணம், திருக்குற்றாலத் தலபுராணம் என்பன. இவற்றுள் கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியார் கி. பி. 11-வது நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ இருந்தவராகக் கொள்ளலாம்.

இக் கந்தபுராணம் உற்பத்தி காண்டம், அசுரகாண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்ச காண்டம், என ஆறு பகுதிகளையுடையது. பாயிரம், கடவுள் வாழ்த்து முதலான ஏழு பகுதிகளையும், 135 படலங்களையும், 10,345 செய்யுட்களையும் கொண்டு விளங்குகிறது.

இந்நூலில் முருகன் தோற்றம், பேராற்றல், பெருந்திறன் அனைத்தும் கூறப்படுகின்றன.

தேவகாண்டத்துள் இரண்டு படலம் திருப்பரங்குன்றத்தைச் சிறப்பிக்கின்றது. 1. திருப்பரங்குன்று படலம். 2. தெய்வயானையம்மை திருமணப்படலம்.

திருப்பரங்குன்றுசேர் படலத்தில் முருகப்பெருமான் திருச்செந்தூரில் இருந்துவரும் போது பராசர முனிவரின் புதல்வர்கள் அறுவரும், நான்முகனும், தேவர்களும் வேண்டச் சிங்காதானத்தில் வீற்றிருந்தருளியது கூறப்படுகிறது.

தெய்வயானைத் திருமணப் படலம் :

இந்திரன் தன் பகைவனாகிய சூரபன்மனை அழித்து விண்ணுலக அரசாட்சியை அளித்தருளிய ஆறுமுகக் கடவுளுக்குத் தன்மகளாகிய தெய்வயானையம்மையைத் திருமணம் செய்து கொடுக்க எண்ணினான். முருகனிடம் தன் கருத்தைத்

தெரிவிக்க, அவரும், 'முன்னரே நம்மைத் திருமணம் செய்து கொள்ளக் கருதித் தெய்வயானை தவம் செய்துள்ளாள். ஆதலால் நீ கருதியபடி அவளைத் திருமணம் புரிவோம்' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஆறுமுகக் கடவுளின் திருக்கரத்தில் தெய்வயானையம்மையாரின் திருக்கரத்தை வைத்து, 'அடியேன் இவளைத் தேவரீருக்குத் திருமணம் செய்து தந்தேன்' என்று திருமந்திரம் கூறி நீரைவிடுத்துத் தத்தம் செய்தான். ஆறுமுகக் கடவுள் தம் திருக்கரத்தில் அதனை ஏற்றருளினார். நான்முகன் ஒரு திருமாங்கல்ய சூத்திரத்தை மனத்தினால் படைத்துத் தந்தான். அதனை முருகப்பெருமான் தம் திருக்கரத்தில் வாங்கித் தெய்வயானையம்மையாரின் திருக்கழுத்தில் தரித்தார். அம்மையாருக்கு ஒரு மலர்மாலையுஞ் சூட்டினார். முக்கனி, கரும்பு, தேன், காமதேனுவின் பால் ஆகிய இவற்றை இந்திரன் முருகக் கடவுளுக்கு நிவேதித்தான். மத்தளம், தக்கை, சங்கம், பேரிகை முதலிய இசைக் கருவிகள் முழங்கின.

இவ்வாறு திருப்பரங்குன்றத்தில் தெய்வயானையம்மைக்கு நிகழ்ந்த திருமணம் பற்றிக் கந்தபுராண ஆசிரியர் ஒரு படலத்தில் கூறுகின்றார்.

இத்திருமணத்தைக் காணவந்த போது,

'கையிலார் கைகள் பெற்றும்
காலிலார் கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள் பெற்றும்
மூங்கைகள் மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருட ரானோர்
வாள்விழி பெற்றுஞ் சென்றார்
ஐயன்மேல் உள்ளம் வைத்தார்க்
கனையதோ அரிது மாதோ'

என்றும் இக்கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகின்றார்.

திருவிளையாடற் புராணத்தில் . . .

திருவிளையாடற் புராணம் என்ற அளவில் இரண்டு புராணங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றைப் பரஞ்சோதி முனிவரும், பெரும்பற்றப்புலியூர்நம்பியும் இயற்றியுள்ளனர்.

ஸ்ரீ ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் வடமொழி நூலைத் தழுவிப் பரஞ்சோதி முனிவர் தம்முடைய திருவிளையாடற் புராணத்தை 3363 செய்யுட்களால் இயற்றினார். மதுரை மீனாட்சியம்மையின் திருவருள்பெற்ற இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வேதாரண்யம் என்னும் திருமறைக் காட்டில் சைவ வேளாளர் மரபில் தோன்றியவர். இவர் நிரம்ப அழகிய தேசிகருடன் கல்வி பயின்றதாக வரலாறு காணப்படுகிறது.

இவர் தம் திருவிளையாடற்புராணம் மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என மூன்று காண்டங்களுடையது.

இதில், பாண்டியனால் அமைக்கப்பட்ட கூடல் மாநகரம் கிழக்குத் திக்கில் திருப்பூவணத்தையும், மேற்குத் திக்கில் திருப்பரங்குன்றத்தையும் நோக்கியபடி இருந்தது என்று குறிப்பிடப்படுகிறது.

உத்தர மகாபுராணமென்னும் வடநூலின் ஒரு பகுதியான 'சாரசமுச்சயம்' என்பதிலிருந்து மொழிபெயர்த்து செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர்நம்பி என்பவரால் 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்' இயற்றப்பட்டது. இச் செல்லிநகர் வேம்பத்தூர், நிம்பை எனவும், குலசேகரச் சதுர்வேதிமங்கலம் எனவும் பெயர்பெறும்.

இந்நூலுள் 1753 செய்யுட்கள் உள்ளன. பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல், திருவிளையாடல் என்பதெல்லாம் இதனையே குறிக்கும்.

இப்புராணத்தில் இடபகிரி, இலந்திமலை, எண்கிரிகள், கைலை, கொடுங்குன்றம், சமணொளிமலை, திருக்கழுக்குன்றம், நாகமலை, பசுமலை, பன்றிமலை, பொதியில், முதியவெற்பு, மேருமலை, யானை மலை என்று மலைகள் குறிக்கப்படுமிடங் களில் திருப்பரங்குன்றமும் குறிப்பிடப்படுகிறது.

உக்கிரகுலத்துப் பிறந்த பாண்டியனொருவன் இந்திரன் அணிந்த ஆரத்தைத் திருப்பரங்குன்றத்தில் வைத்ததும், இக்குன்றம் முருகப்பெருமானால் வணங்கப்பட்டதும், பரம ராட்சசுவால் கட்டுண்ட நக்கீரர் முருகனருளால் விடுவிக்கப் பட்டதும் இப்புராணத்துள் கூறப்படுகிறது.

புலியின் முலைப்பாலைச் சிவபெருமான் புல்வாய்க் கன்றுக்கு அளித்தருளிய திருவிளையாடலும், பன்றிக் குட்டிகளுக்குத் தாயாகிப் பாலூட்டிய திருவிளையாடலும் இந்நூலில் தான் குறிப்பிடப்படுகிறது.

திருப்பரங்கிரி புராணம்

திருப்பரங்குன்றத்துத் தலபுராணமாகத் 'திருப்பரங்கிரிப் புராணம்' திகழ்ந்து வருகின்றது. இதனை இயற்றியவர் இங்கு மடம் அமைத்து வீற்றிருந்த நிரம்ப அழகிய தேசிகராவார்.

புராணங்கள் தோற்றம் பெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒவ்வொரு புராணமும் வெவ்வேறு காரணங்களால் தூண்டப்பட்டு எழுதப்பட்டிருக்கும்.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற ஔவையாரின் கூற்றிற்கேற்ப ஒவ்வொரு ஊரிலும் கோயில்கள் அமைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். அக்கோயில்களை மையமாக வைத்துப் பல கதைகள் வழங்கின. அக்கோயிலில் வழங்கும் கதைகளை வைத்துக் கொண்டு, புராணம் செய்து தரும்படி மக்கள் புலவர்களை வேண்டினர். மக்களின் விருப்பத் திற்கேற்பப் புலவர்கள் புராணம் செய்தனர். அப்புராணங் களுக்கு விரிவுரை தருவோரும் இருந்தனர். அவர்கள் புராண பிரசங்கிகள் என அழைக்கப்பட்டனர். அக்கோயிலில் உள்ள கோயில் குருக்கள் பல புராணக் கதைகளை வடமொழியில் எழுதி வைத்ததுண்டு. அதைத் தமிழ்ப்படுத்தியும் தமிழ்ப் பாவலர்கள் புராணம் செய்தனர்.

இந்தத் தலபுராணங்கள் கோயிலைப் பற்றி எழுந்தவை யாதலால் கோயிலிலுள்ள பலதெய்வ வடிவங்களையும் கதை வடிவாக விளக்குகின்றன. தலபுராணத்தின் முக்கிய நோக்கம் சமயத்தைச் சாதாரணமக்களிடம் பரப்பவேண்டும் என்பதாகும். சாதாரணமக்களுக்கு, தத்துவக் கருத்தையோ அல்லது நீதி போதனைகளையோ கூறினால் அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் இயல்பில்லாதவர்களாக இருந்தனர். அதைக் கதை களுடன் பொதிந்து கொடுத்தால் அவர்கள் மனம் எளிதில் புரிந்துகொள்வதாக இருந்தது. ஆகையால் தத்துவக் கருத்துக் களைக் கதைகளின் மூலம் சொல்லிச் சாதாரண மக்களிடம் சமயத்தைப் பரப்பினர்.

தலபுராணம் சீரும், சிறப்புமாக எழுந்தது கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் செய்தகோயிற் புராணம் பாடியபோது எனலாம். அளவில் சிறியதாக இருப்பினும் தலபுராணங்களுக்கெல்லாம் வித்திட்ட இந்நூல் பாட்டிலும், நயத்திலும், கொள்கையின் உயர்விலும், விரைந்து செல்லும் கதைப் போக்கிலும் மிகச் சிறந்து விளங்குகிறது.'[1]

இதைத் தொடர்ந்தெழுந்த நிரம்ப அழகிய தேசிகரின் திருப்பரங்கிரிப் புராணம் சிறப்பிடம் பெறுகிறது. இது பாயிரச் சருக்கம், குமரன் உபதேசச் சருக்கம், குமரன் தவசுச் சருக்கம், தலவிசேடச் சருக்கம், அரிச்சந்திரச் சருக்கம், திருவிழாச் சருக்கம் நற்கீரச்சருக்கம், சூரசங்காரச் சருக்கீம், திருக்கலியாணச் சருக்கம் என்று சருக்கங்களையும், 526 செய்யுள்களையும் தன்னகத்தே கொண்டது.

"ஒரு காலம் திருக்கயிலாயத்தில் சிவபெருமான் பஞ்சாக்கர மந்திரத்தை உமாதேவியார்க்கு உபதேசித்தருளினார். அப்பொழுது அன்னையின் மடி மீதமர்ந்த குமாரக்கடவுள் அதனை ஒளிந்திருந்து கேட்க நேர்ந்தது. குருமுகமாக அன்றி அங்ஙனம் மந்திரப் பொருளை மறையினிற் கோடல் குற்றமுடைத்தாகலான் அவ்வுண்மையை உலகினுக்குணர்த்துதற்பொருட்டு அவர் பரங்குன்றீசரை வழிபட்டு அப்பாவத்தின் நீங்கினார். அதுநிற்க.

சிபிச்சக்கரவர்த்தி பூதானஞ்செய்கின்ற காலத்து அதனைப் பெறுதற்குரிய அந்தணரொருவர் குறைபட்டமை கண்டு அளவிலாத் துயரமெய்தி நின்றான். அப்பொழுது பரங்கிரிப் பெருமான் ஒரு அந்தணர் வடிவுடன் தானமேற்று அவனுக்கு அருள் புரிந்தனர்.

அன்றியும், நான்முகக் கடவுள் நாமகளை மணம் புரிந்து கொண்டு அப்பரங்குன்றில் தானே பிரம தீர்த்தத்தையும் உண்டாக்கினார்.

சாபவாசத்தாற் குட்டமுற்ற அரசன் ஒருவன் ஆங்குப் பிரமகூவமென்னும் தீர்த்தத்தில் படிந்து பிணி நீங்கியவனானான்.

1. வே. இருட்டிணசாமி, 'தமிழில் தலபுராண இலக்கியம்'—பக். 13.

 8343

அரிச்சந்திரன் சத்திய கூவத்துள் நீராடி முருகக் கடவுளுக்குத் திருவிழா இயற்றி அவரருளாற் சத்திய வாக்குடன் முத்தியும் பெற்றனன்.

அவையேயன்றி மற்றொரு சமயம் அக்கடவுள் தமிழ்நர் பெருமானாம் நக்கீரதேவரைத் திருமுருகாற்றுப்படை பாடச் செய்து அவரைச் சிறையினின்றும் விடுவித்தருளினார்.

சூரசங்காரம் செய்த பின்னர் அக்குமரப் பிரானார் திருப்பரங்கிரியிலே தங்கித் தெய்வயானையம்மையைத் திருமணம் புரிந்து தம்மை வணங்கினார்க்கெல்லாம் இட்ட சித்தியளித்து மணக்கோலத்துடனேயே என்றுநான்றும் வதிந்தருளுகின்றனர்"[2]

இக்கதைகளையெல்லாம் ஒருசேரச் சேர்த்து மக்களுக்கு, 'திருப்பரங்கிரிப் புராணம்' என்னும் பெயரில் வழங்கப்பட்டது. இதுவே இத்தல புராணமாகவும் இருக்கின்றது.

இங்கெழுந்துள்ள கடவுளரின் திருவுருவங்களுக்கெல்லாம் வணக்கம் கூறி நூல் ஆரம்பமாகிறது.

'நாம் உமாதேவிக்கு உபதேசித்த மந்திரத்தை மறைந்திருந்து கேட்டு வெளிப்படுத்தின குற்றம் தீர நீ தவஞ்செய்ய வேண்டும். அதற்குத் தக்கஇடம் மேரு மலைக்குத் தெற்கில் நாவலந்தீவில் குற்றமற்ற பரதகண்டத்தில் காவிரிக்குத் தெற்கே பாண்டி நாட்டில் வையை நதியிருக்கிறது. வையைநதி சூழ்ந்துள்ள மதுரை நகரத்திற்குத் தென்மேற்கிலே பாதியோசனை தூரத்திலே நாகமலை இருக்கிறது. அந்த நாகமலைக்குக் கால் யோசனை தூரத்திலே தன்பெயர் கேட்டவர்க்குச் சிவஞானம் உண்டாக்கும் சத்தியகிரி என்ற ஒரு மலை இருக்கின்றது. அந்தச் சத்தியகிரியானது பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தோணியாகும். அம்மலையின் வடபக்கத்தில் உள்ள சத்திய கூவத்தில் மூழ்கினால் சத்தியவாக்குண்டாம். மேல் பக்கத்தில் உள்ள புத்திர கூவத்தில் மூழ்கினால் புத்திரோற்பத்தி உண்டாவது மல்லாமல் பாவமும், நோயும், தரித்திரமும் நீங்கும். ஞானிகள் சூழும் அந்த மலைக்கு ஈசான திக்கிலே ஒரு பாணஞ்

2. நாராயண அய்யங்கார், 'திருப்பரங்கிரிப் புராணம்'—முகவுரை.

செல்லுந் தூரத்திலேயுள்ள தாமரைத் தடாகம் உன்னுடைய பெயரால் விளங்கும். அந்தத் தீர்த்தத்தைக் கையால் தீண்டினாலும், கண்டாலும் மனத்தில் நினைத்த எல்லாப் பொருளும் கிட்டும். நீ அந்தத் தீர்த்தத்திற்குப் போய் ஸ்நானஞ் செய். தேவ மந்திரத்தினாலேயே தருப்பண முதலானவைகள் செய்து வேதியர்க்கு வேதவிதிப்படி தானம் கொடுத்து நமது ரூபமாகிய திருப்பரங்கிரியைப் பிரகாசம் பொருந்திய மலர்களாலே அருச்சனை செய்து அந்தத் தடாகத்தை வேலினாற் கிழித்த இடத்திலே தீர்த்தம் பெருகி மேலெழுந்து வரும். அந்தத் தீர்த்தமானது எந்தக் காலத்தும் சரவணப் பொய்கையென வழங்கப்படும் என்று முருகப்பெருமானுக்குச் சிவபெருமான் கூறியதாகவும் இப்புராணம் தெரிவிக்கிறது.

சரவணப் பொய்கை பற்றிய பாடல்:

''சரவணப் பொய்கை கண்டவர் தருமஞ்
சாருவர் தொட்டவர் பொருளை
மருவெவ ருள்ளே கொண்டவர் காம
மன்னுவர் மூழ்குவோ ரெவரும்
பரகதி யடைவர் புத்திர கூவம்
படிந்தவர் மைந்தரைப் பெறுவர்
திருவரை முளைக்கும் பசுங்கொடி பழுக்கத்
தினந்தினஞ் சுவைதருங் கனியே!''

திருப்பரங்குன்றத்திற்குக் காவலரென்று கூறப்படும் அண்டாபரணருக்கும், உக்கிரமூர்த்திக்கும் இதில் துதி கூறப்பட்டுள்ளது.

இப்புராணத்திற்கு அருணாசலக் கவிராயர் **உரையும்,** எட்டு பிரபந்தங்களையும் இயற்றியுள்ளார்.

வாய்மொழிப் பாடல்களில் பரங்குன்றம்

எழுதப்பட்ட இலக்கியங்கள், எழுதா இலக்கியங்கள் என்னும் இருவகைக் கட்டுக்கோப்புக்குள் இலக்கியங்களை அடக்கி விடலாம். எழுதப்படுவதற்கு முன்பாகவே மரபுவழியாகத் தொன்றுதொட்டுப் பல பாடல்கள் எழுதா இலக்கியங்களாகத் திகழ்ந்து வருகின்றன. அவை பல்வேறு வடிவில் பல்வேறு நிகழ்ச்சிகளின் போது வெளிப்படுகின்றன. இவ்வெழுதா விலக்கியங்கள் எல்லாம் வாய்மொழிப் பாடல்கள், நாட்டுப் பாடல்கள் என்றழைக்கப்படுகின்றன.

திருப்பரங்குன்றமும், அங்கு உறையும் முருகனும், அங்கு எரியும் விளக்கும் நாட்டுப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இங்கே உள்ள மக்கள் பாடும் பாடலில் முருகப் பெருமானின் மலைச்சிறப்பும், அதன் செழுமையும் புலப்படுத்தப்படுகிறது. முருகனுக்கு என்னென்ன காணிக்கைப் பொருள்களையெல்லாம் வழங்கவேண்டும் என்று பக்தன் எண்ணுகின்றானோ அவற்றை யெல்லாம் பரவசத்தோடு கூறுகின்றான். அந்த நிலையில் சொற்கள் அவனுக்குத் தங்குதடையின்றி வந்து விழுகின்றன. இலக்கணத்தோடு அமையவேண்டும் என்ற விலங்குப் பிடிக்குள் அவன் தன்னை ஆட்படுத்திக் கொள்வதில்லை. இதனால் தான் அந்தப் பாடல்கள் சிலசொற்கள், தொடர்கள் மாறினாலும் இன்றளவும் நின்று நிலவி வருகின்றன.

அதற்கு, பாடுகின்ற மக்களுடைய உணர்ச்சி தான் காரணம். அந்த உணர்ச்சிப் பிரவாகம் ஏனையோரையும் இழுக்கிறது. அதன் எளிமை எல்லோருக்கும் பிடிக்கிறது.

திருப்பரங்குன்றத்து முருகப் பெருமானை 'சுப்பையா' என்று பெயரிட்டழைக்கிறார் ஒருவர். அவர் பாடும் பாடலைப் பாருங்கள்:

"ஊசி படர்ந்த மலை—சுப்பையாவுக்கு
உத்திராட்சம் காய்க்கும் மலை

பாசி படர்ந்த மலை—சுப்பையாவுக்கு
பகளத்தேர் ஓடும் மலை
சாஞ்ச மலையா—சுப்பையாவுக்குத்
தேனும் தெனை மாவோ
தேனும் தெனை மாவோ—சுப்பையாவுக்குத்
தெகட்டாத செங்கரும்போ
கண்ணுள்ள தேங்காயே—கண்ணே
கணுவுள்ள செங்கரும்பே
பாக்குப் பதிங்கலமும்—கண்ணே
பச்சரிசி முக்கலமும்
எள்ளு இருகலமும்—சுப்பையாவுக்கு
எளனி தேங்காய் முந்நூறும்"[1]

முருகன் குறிஞ்சி நிலக் கிழவனல்லவா? அவனுக்குப் பக்தன் தேனும், தினைமாவும் படைக்கவேண்டும் என்று கொண்டு செல்கின்றான். அதுமட்டுமல்ல, கண்ணுள்ள தேங்காய், கணுவுள்ள செங்கரும்பு, பத்துக்கலம் பாக்கு, பச்சரிசி மூன்று கலம், எள்ளு இரண்டுகலம், எளனி தேங்காய் முந்நூறு இவ்வளவும் கொண்டு செல்லும்போது அவனுக்கு ஏன் பாடல் பிறக்காது?

இப்போதைய திருப்பரங்குன்றம் குடைவரைக்கோயில் என்பது பொதுவாக எல்லா மக்களுக்கும் தெரிகிறதோ இல்லையோ இங்கே குறிப்பிடப்படும் பாடல் பாடியவருக்கு, அவர் முன்னோர்க்கு, அவர் வழி வந்தோர்க்கு அது குடைவரை தான் என்று தெரிந்திருக்கிறது.

அவர்,

"மலையைத் துளைச்சு மண்டபங்கள் உண்டுபண்ணி
சனத்தை ரெவழைச்சு—முருகன்
சக்தி விளங்குறாரோ"

என்று பாடுகின்றார். முருகனுடைய உருவம் மலையில் குடைவிக்கப்பட்டது என்ற உண்மை அவர்பாடலில் விளக்க முறுகின்றது.

1. Saraswathi Venugopalan—'Madurai Temple Complex.

திருப்பரங்குன்றத்துச் சன்னதியில் எரியும் விளக்கைக் கூடப் பாமரமக்கள் விட்டு விடவில்லை. அவர்களுடைய கற்பனை இந்த வாய்மொழிப் பாட்டில் அபரிமிதமாகத் தென் படுகின்றது. எல்லாக் கோயில்களிலும் நொந்தா விளக்குகள் உண்டு; தூண்டா மணிவிளக்குகளும் உண்டு. ஆனால் இங்கே எரிகின்ற தூண்டா மணிவிளக்கோ நாம் நினைப்பதைப் போலச் சாதாரண விளக்கல்ல. அது தெய்வீக ஒளிவிளக்கு என்று நம்பிப் பாடுகின்றான்.

விளக்கில் இடப்பட்டிருக்கும் நூல் தாமரையிலிருந்து எடுக் கப்பட்டிருக்கிறதாம். அப்படி எடுக்கப்பட்ட நூலை விளக்கில் வைத்து, பசுவிலும் சிறந்த பசுவின் நெய்யை உருக்கி அதிலே விட, அந்த விளக்கு தூண்டாமலேயே எரிகிறதாம் சுப்பையா சன்னதியில். பாட்டைக்கேளுங்கள் :

"அடியும் படித்துறையே அமிர்தமுள்ள ஊருணியே
இரும்பாலே ஊருணியாம் இருபுறமும் தாமரையாம்
தாமரையை நூலெடுத்து தனிப்பசுவின் நெய்யுருக்கி
தூண்டா வெளக்கெரியும் சுப்பையா சன்னதியில்"[2]

இப்பாடல்களின் மூலம் திருப்பரங்குன்றத்து இறைவன் மீது மக்கள் கொண்டுள்ள ஈடுபாட்டைத் தெளிவாக உணரலாம். விளக்கு கூடத் தூண்டாமல் எரியவேண்டும்; அதுவும் தனிப்பசு வின் நெய்யை உருக்கி அதில் ஊற்றவேண்டும்; ஊற்றும் முன் அங்கே இருக்கின்ற 'திரி' தாமரைத் திரியாக இருக்க வேண்டும் என்பதெல்லாம் பக்தனின் பரவசம் தானே?

2. Ibid.

வரலாற்றுக் காலங்களில்...

புராணகாலம், சங்ககாலம், இதற்குப் பிற்பட்ட காலம், ஏனைய இலக்கியக்காலம் என்ற அளவில் திருப்பரங்குன்றத்தை இதுகாறும் கண்டோம். வரலாற்றுக் காலந்தொட்டு இதன் தோற்றத்தை இனிக்காண்போம்.

வரலாற்றுக்காலம் என்று கூறும்போது, இப்போதைய திருப்பரங்குன்றம் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை உள்ள காலத்தை • நாம் எளிதில் வரையறுத்து விடமுடியும். இதற்கு அடிப்படையாக இங்குள்ள கல்வெட்டுச் சான்றுகள் அமைந்து கிடக்கின்றன.

முற்காலப்பாண்டியர் காலத்துக் குடைவரையாகத் தோற்றம் பெற்று, இடையில் பிற்காலப் பாண்டிய மன்னர்களால் பல்வேறு காலங்களில் சிறப்புச் செய்யப்பெற்று நாயக்கர் காலத்துக் கவின்மிகு மண்டபங்களையும், எழில் வாய்ந்த எழுநிலை மாடங்களையுடைய கோபுரத்தையும் ஏற்றமுடன் பெற்று மிளிர்கின்றது.

குடைவரைக்கோயில்கள் இங்கு இரண்டு உள்ளன. மலைக்குத் தென்புறமொன்றும், வடபுறமொன்றுமாக இவை அமைந்துள்ளன. தென்புறமுள்ள குடைவரைக்குச் சற்றுத் தள்ளி, சமணர்களின் குகைத்தளமும் அமைந்து கிடக்கிறது.

உச்சி மலையின் மீது இன்று காசி விசுவநாதர் கோயில் என்றழைக்கப்பெறும் கோயிலின் மேற்புறம் பாறைச் சிற்பங்களாகக் குடையப்பட்ட சிற்பங்களும், சமணச் சிற்பங்களும் காணப்படுகின்றன. இவையனைத்தும் தனித்தனியாக இங்கு விளக்கப்படுகின்றன.

வடபுறம் இன்று வழிபாட்டிலிருக்கும் கோயில் ஆஸ்தான மண்டபம், திருக்கல்யாணமண்டபம், கம்பத்தடி மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் எனப் பல்வேறு மண்டபங்

களையும் பெற்றிருக்கிறது. மலையின் வடபகுதி பெரும் பான்மை கோயிலைச் சார்ந்தவண்ணம் உள்ளது. முற்காலப் பாண்டியர்களின் சிற்பக்கலைக்கும், குடைவரை அமைப்புக் கலைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இது திகழ்ந்து வருகிறது.

பாண்டியர் காலம்

பாண்டியர்கள் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. தமிழகத்தின் தென்பகுதியை ஆண்ட பாண்டியமன்னர்களுடைய வரலாற்றைப் பார்க்கும் போது எந்த மன்னன் முதன்முதலில் ஆட்சிக்கு வந்தான் என்பது அரிது முயன்றும் அறியமுடியவில்லை. பாண்டியன் என்ற சொல் லின் தோற்றம் பற்றியும் பல்வேறு கதைகள் கூறப்பட்டு வருகின்றன. இவர்களைச் சந்திர குலத்தைச் சேர்ந்தவர்களாக இலக்கியங்கள் கூறுகின்றன.

பண்டையோன் என்னும் சொல்லே பாண்டியன் எனத் திரிந்தது என்றும், பாண்டவரின் தந்தையாகிய பாண்டுவே இதற்கு முதல் எனவும், கிரேக்கமன்னன் ஹிராக்கிளீசுவின் மகளான 'பண்டேயா' என்பவளின் வழித்தோன்றல்களே பாண்டியன் என்றும் கூறுவாருமுளர்.[1]

வடமொழி ஆதிகாவியமான வான்மீகி இராமாயணத்தில் பாண்டியர்களின் தலைநகர் பொன்னாலும், முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட கோட்டை வாயிலையுடையதாக இருந்தது என்று கூறப்பட்டுள்ளது. வியாசமுனிவரது மகாபாரதத்தில் பாண்டவருள் ஒருவனாகிய அருச்சுனன் ஒரு பாண்டியர் குலப் பெண்மணியை மணந்து கொண்டான் என்ற குறிப்புக் காணப் படுகிறது. கி. மு. 4ஆம் நூற்றாண்டினராகக் கருதப்படும் கார்த்தியாயனர் தாம் வரைந்த வார்த்திகம் என்ற உரையுள் 'பாண்டிய' என்னும் சொல்லுக்கு இலக்கணம் வரைகின்றார். இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சம் கி. மு 478இல் ஆட்சி புரிந்த விசயன் என்பவன் பாண்டியர் குலப் பெண்

1. Foreign notices of South India.

மணியை மணம்புரிந்து கொண்டான் என்றும், அவள் பொருட்டுத் தனது மாமனாகிய பாண்டிய மன்னனுக்கு ஆண்டுதோறும் பரிசில்கள் அனுப்பி வைத்தான் என்றும் கூறுகிறது. ஹாலாஸ்ய மகாத்மியம் என்ற சமஸ்கிருத ஸ்தலபுராணமும் பாண்டிய அரசர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கி. பி. 79இல் காலமான பிளைனி என்ற வரலாற்றாசிரியரும் இந்தியாவில் பண்டே என்று ஒரு சாதி பெண்ணரசுக்கு உட்பட்டிருந்தது என்று கூறுகின்றார்.

இவ்வாறு பாண்டியர்களின் தோற்றம் பற்றிப் பல்வேறு விதமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. மார்க்கோ போலோ தாலமி மற்றும் சீனத்தூதுவர்களின் வரலாற்றுக் குறிப்புக்களில் இருந்தும் பாண்டிய அரசர்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. முகமதிய வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புக்களும் இடைக்காலப் பாண்டியர்களைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் இவர்களது வரலாற்றைப் புரிந்து கொள்ளப் பெரிதும் துணைநிற்கின்றன.

இவ்வகையில் பராந்தக நெடுஞ்சடையனின் ஆனைமலைக் கல்வெட்டுக்கள், வரகுணனுடைய ஐவர் மலை, திருச்சி, அம்பை கல்வெட்டுக்கள், ஐடிலவர்மனுடைய சென்னைப் பொருட்காட்சிச் செப்பேடுகள், பராந்தகநெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேடுகள், இராசசிம்மனுடைய பெரியசின்னமனூர்ச் செப்பேடுகள் முதலியன குறிப்பிடத்தக்கன. இராசராசனுடைய பெரிய லெய்டன் செப்பேடும், முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேடும் பாண்டியர் வரலாற்றுக்கு முக்கியமானவை.

பாண்டியர், தலை இடை கடை என மூன்று தமிழ்ச் சங்கக் காலங்களிலும் ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்களைப் பற்றி இறையனார் களவியலுரை மூலம் அறியமுடிகிறது.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட பாண்டியர்கள் திறனில்லாமல் இருந்ததால் தமிழகத்தில் அப்பால் இருந்து வந்த களப்பிரர்களால் பாண்டியநாடு கைக்

கொள்ளப்பட்டது. பாண்டியரும் தம்பெருமை குன்றி வாழத் தலைப்பட்டனர். இக்களப்பிரர்கள் பற்றியும் ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால் சங்க இலக்கியங்களில் களப்பிரர் என்ற சொல் காணப்படவில்லை. இச்சொல் முதன்முதலில் வேள்விக்குடிச் செப்பேட்டிலும், பின்னர் தளவாய்புரச் செப்பேட்டிலும் காணப்படுகின்றன.[2] கி. பி. ஆறாம் நூற்றாண்டு வரை இக்களப்பிரர்களின் ஆட்சி நீடித்தது.

களப்பிரருக்குப் பின் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களைப்பற்றி முதன்முதலில் நமக்குத் தெரிவிப்பது வேள்விக்குடிச் செப்பேடாகும். இஃது இப்போது இலண்டன் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது. கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியன் கடுங்கோன் என்பான் படுகடல் முளைத்த பருதிபோல் வெளிப்பட்டுப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி மீட்டு ஆளத் தொடங்கினான்.

இங்கிருந்து பாண்டியர் வரலாறு ஆரம்பமாகிறது. கடுங்கோன் (கி. பி. 560—590) மாறவர்மன் அவனிசூளாமணி (கி.பி. 590-620) செழியன் சேந்தன் (கி. பி. 620-650) மாறவர்மன் அரிகேசரி (கி. பி. 650-700) கோச்சடையன் ரணதீரன் (கி. பி. 700-730) அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கி. பி. 730-765) நெடுஞ்சடையன் பராந்தகன் (கி. பி. 765-815) ஆகிய முற்காலப் பாண்டிய மன்னர்களின் வரலாற்றைச் செப்பேடுகளாலும், கல்வெட்டுச் சான்றுகளாலும் உணரமுடிகிறது.

நெடுஞ்சடையன் பராந்தகன் (கி. பி. 765-815)

பராங்குச மாறவர்மனுக்கும், கங்க அரசன் மகளான பூசுந்தரிக்கும் பிறந்த மூத்தமகன் இவன். சடையவர்மன் என்ற பட்டம் புனைந்து ஆண்டவன்.

'இவனுக்கு முன்னர் அரசாண்ட பாண்டிய மன்னர்களின் செப்பேடுகள் தற்போது யாண்டும் கிடைக்கவில்லை. ஆகவே

2. 'களப்ர னென்னும் கலியரசன்'
—வேள்விக்குடிச் செப்பேடு.

இதுகாறும் கிடைத்தவற்றுள், இவ்வேந்தனுடைய செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் மிகவும் பழமை வாய்ந்தவையாகும். அவை இலண்டன் பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் உள்ள வேள்விக்குடிச் செப்பேடுகளும், சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ள சிவரமங்கலச் செப்பேடுகளும், ஆனைமலைக் கல்வெட்டுக்களும், திருப்பரங்குன்றத்துக் கல்வெட்டுக்களுமேயாம். இவ்விரு செப்பேடுகளும் கிடைக்காமற் போயிருப்பின், கடைச்சங்க காலத்திற்குப் பிறகு பாண்டிய நாட்டில் நடைபெற்ற களப்பிரர் ஆட்சிபற்றிய செய்தியும், கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி. பி. எட்டாம் நூற்றாண்டு முடிய அரசாண்ட பாண்டிய மன்னர்களின் வரலாறுகளும் எவரும் தெரிந்து கொள்ள இயலாதவாறு மறைந்து போயிருக்கும் என்பது திண்ணம்.[3]

வேள்விக்குடிச் செப்பேடு இவனது 3-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. 17-வது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட சிவரமங்கலச் செப்பேடு இவனைப் பரம வைணவனாகக் காட்டுகிறது.

தன் ஆட்சியின் தொடக்கத்தில் நந்திவர்மப் பல்லவ மல்லனைக் காவிரியின் தென்கரையில் உள்ள பெண்ணாகடத்தில் புறங்காட்டி ஓடச்செய்தான். ஆய்வேள், குறும்பர் ஆகியோரை வென்றான் என்று வேள்விக்குடிச் செப்பேடும், வெள்ளூர், விண்ணம், செழியக்குடி என்ற ஊர்களில் இவன் தன் பகைவர்களை வென்றான் என்று சிவரமங்கலச் செப்பேடும் குறிக்கின்றன.

இவனுடைய அரசியல் தலைவர்களாக விளங்கியவர்கள் மாறன்காரி, மாறன் எயினன், சாத்தன் கணபதி, ஏனாதிசாத்தஞ் சாத்தன், மூர்த்தி எயினன், சங்கரன், சிதரன் ஆகியோராவர். இவர்களுள் மாறன்காரி, மாறன் எயினன், சாத்தன் கணபதி ஆகிய மூவரும் குறிப்பிடத்தக்கவராவர்.

'கடிநாறு கவிவலங்கற் களப்பாழர் குலங்களைந்தும்'
'கற்றறிந்தோர் திறல்பரவக் களப்பாழரைக் களைகட்ட
மற்றிரள்தோள் மாக் கடுங்கோன்' —தளவாய்புரச் செப்பேடு.

3. திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், 'பாண்டியர் வரலாறு'—பக். 46-47.

பராந்தக நெடுஞ்சடையனின் உத்தரமந்திரியான மாறங்காரி மதுரை அருகே உள்ள ஆனைமலையில் திருமாலுக்காக கலி 3871இல் கோயிலொன்றைக் குடைவிக்கின்றான். இதற்கு 3 ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பரங்குன்றத்தில் சாமந்த பீமனாகிய சாத்தன் கணபதி சிவபெருமானுக்குக் கோயில் எடுக்கின்றான்.

இரண்டு பெருந்தலைவர்களில் ஒருவர் திருமாலுக்காகவும், மற்றொருவர் சிவபெருமானுக்காகவும் கோயில் எடுத்துள்ளனர்.

சாத்தன் கணபதி எடுத்துள்ள கோயில்தான் இன்று வழிபாட்டில் இருக்கும் திருப்பரங்குன்றத்துக் குடைவரைக் கோயிலாகும்.

குடைவரைக் கோயில்-1

சாத்தன் கணபதி கரவந்தபுரத்தில் வாழ்ந்த வைத்திய குலத்தைச் சேர்ந்த சாத்தன் என்பவன் மகன். இவன் சாமந்த பீமன் என்று பராந்தக நெடுஞ்சடையனின் ஆட்சியில் விளங்கியவன். பாண்டி அமிர்தமங்கலப்பேரையன் என்னும் பட்டம் உடையவன்.

இவன் திருப்பரங்குன்றத்தில் சிவபெருமானுக்காகக் கோயில் எடுத்ததை இங்குள்ள சமஸ்கிருதக் கல்வெட்டு தெரிவிக்கிறது.[4] இது கலி 3874-இல் நிகழ்ந்ததாகும்.

இக்கோயிலுக்கு இவன் திருப்பணி புரிந்து அங்குள்ள திருக்குளத்தையும், திருத்தி, அறச்செயல்களையும் ஒழுங்கு படுத்தினான் என்று பராந்தகநெடுஞ்சடையனுடைய ஆறாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு தெரிவிக்கிறது.[5] இவனுடைய மனைவி நக்கன் கொற்றி என்பவளும், துர்காதேவிக்கும், ஜேஷ்டா தேவிக்கும் கோயில் எடுத்ததையும் அக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இப்போது தென்படும் குடைவரைக்கோயில் 5 தெய்வங்களுக்குத் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக விளங்குகிறது. சிவன்,

4. Epigraphica Indica. Vol. XXXVI, No. 15. Two Pandya Inscriptions from Tirupparankundram.

5. Indian Antiquary Vol. XXII, P. 67; S. I. I. Vol. XIV No. 3.

திருமால், முருகன், துர்க்கை, விநாயகர் ஆகிய ஐவர் சிற்பங்களும் இங்குள்ளன.

வடக்கு நோக்கியுள்ள இக்கோயிலில் சிவபெருமான் கருவறை கிழக்குநோக்கியும், திருமால்கருவறை மேற்கு நோக்கியும் அமைந்துள்ளது.

இங்கு துர்காதேவி, இலக்குமி, ஜேஷ்டாதேவி ஆகிய மூவருக்கும் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. நான்முகனின் அழகிய உருவச்சிற்பமும் முற்காலப்பாண்டியர் கலைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன.

சிவன் கருவறை

சிவன் கருவறை கிழக்கு நோக்கியமைந்து காணப்படுகிறது. வடமொழிக்கல்வெட்டில் 'பரமசிகிரிணி' என்று குறிப்பிடப் படுகிறது. இறைவன் பரங்கிரிநாதர் என்றழைக்கப்படுகிறார். இக்கருவறை சதுரவடிவமானது. உள்ளே லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. கருவறையின் உட்புறச் சுவரில் சோமாஸ் கந்தரின் மிகப் பெரிய சிற்பம் காணப்படுகிறது.

"மாமல்லபுரத்தில் கருவறையின் உள்ளே பின்புறச் சுவரில் இது பெரும்பாலும் காணப்படுகிறது. கருவறையில் இலிங்கத்தின் பின்னர் இதுபோன்ற சோமாஸ்கந்தரின் உருவை இராஜசிம்மன் என்ற மன்னன் வைத்துள்ளான். இவனுக்கு முன்னர் உள்ள கோயில்களில், உதாரணமாக மகேந்திர வர்மனின் கோயில்களில் இவ்வுருவம் இல்லை. இவனுக்குப் பின்வந்த பல்லவர் கோயில்களில் இவ்வுருவம் காணப் படுகிறது."[6]

காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருமறைக்காடு, திருப் புள்ளிருக்குவேளூர் முதலான இடங்களில் எல்லாம் கருவறை யின் பின்புறச் சுவரில் சிவலிங்கத்திற்குப் பின்னர் இவ்வெழில் வாய்ந்த சிற்பம் அமைக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

---

6. திரு. இரா. நாகசாமி, 'மாமல்லை'—பக். 150.

மாமல்லபுரத்தில் காணப்படுவதை விட மிகப் பெரிதாக இங்குள்ள சோமாஸ்கந்தரின் உருவம் உள்ளது. இந்தத் திரு வுருவத்தை வழிபட்டால் கணவனும், மனைவியும் மக்கள் பேற்றுடன் இனிய குடும்பவாழ்வைப் பெறுவார்கள் என்று நூல்கள் கூறுகின்றன.

இக்காட்சியைக் கந்தபுராண ஆசிரியர்,

"ஏலவார் குழல் இறைவிக்கும்
எம்பிரான் தனக்கும்
பாலன் ஆகிய குமரவேள்
நடுவுறும் பான்மை
ஞால மேல்இரவி னோடு
பகலுக்கும் நடுவே
மாலையானதொன்று அழிவின்றி
வைகுமாற நொக்கும்"

என்று பாடுகின்றார்.

'இறைவனுக்குரிய சத்து, சித்து, ஆனந்தம் என்பவற்றுள் சிவம் சத்தாகவும், அம்பிகை சித்தாகவும், கந்தன் அல்லது முருகன் ஆனந்தமாகவும் திகழும் பெற்றியை விளக்குவது சோமாஸ்கந்த மூர்த்தம் என்னலாம்.'[7]

இங்கு சிவபெருமான் இடது காலை மடக்கி வலதுகாலைத் தாமரைமீது வைத்தமர்ந்துள்ளார். நான்கு கைகளுடன் காட்சி தருகின்றார். மேலிரு கைகளில் மழுவும், மானும் ஏந்தி கீழ்வலக் கரத்தை அபயமுத்திரையிலும், கீழ் இடது கரத்தைத் தொடை மீதும் வைத்துள்ளார்.

தலையில் கிரீடமகுடம் தரித்திருக்கின்றார். கபாலமுள்ளது. கிரீடத்தின் வலப்புறம் பாம்பும், இடப்புறம் பிறையும் அணிந் துள்ளார். மார்பில் யக்ஞோபவீதம் காணப்படுகிறது. கழுத்தில் இரு ஆரங்கள் தவழ்கின்றன. சிரித்த முகத்துடன் அடியவர் களுக்கு அருள் செய்பவனாகக் காட்சிதரும் அற்புதப் படைப் பாக இது விளங்குகிறது. இரு புறமும் சாமரம் வீசிய நிலையில் கந்தர்வர் இருவர் காட்டப்பட்டுள்ளனர்.

7. திரு. ந. ரா. முருகவேள், 'அருளோசை'—பிப். 75.

இறைவி :

வலது காலை மடக்கி இடது காலைத் தொங்கவிட்டு இறைவனுக்கருகில் அமர்ந்துள்ளார். வலது தொடையில் குகனை அமர்த்திக் கொண்டுள்ளார். இரண்டு கைகள்: வலக்கையில் மலர் ஏந்தியுள்ளார். இடக்கையைத் தரையின் மீது ஊன்றியுள்ளார். மார்புக்கச்சணிந்துள்ளார். காதுகளில் பத்ரகுண்டலங்கள் காணப்படுகின்றன.

குகன் :

இடக்காலை மடக்கி, வலக்காலைச் சிவனின் இடது தொடை மீது வைத்துள்ளார். வலக்கையில் தாமரை மலரை ஏந்தியுள்ளார். இடது கையை மடிமீது வைத்துள்ளார். மார்பில் அணிகள் புரள்கின்றன. இடுப்பில் அரைஞாண் கொடியும், கால்களில் கழல்களும் உள்ளன.

இக்கருவறையைக் காத்து நிற்கும் வாயிற்காவலர்களின் சிற்பங்களும் அழகுள்ளனவாகத் தோற்றம் தருகின்றன.

வலது புறமுள்ள வாயிற்காவலர் தன் வலக்கையைத் தண்டத்தின் மீது வைத்து, இடக்கையை, விஸ்மய ஹஸ்தத்தில் காட்டி நிற்கின்றார். இடுப்பில் இருந்து தொடை வரை மடிப்புள்ள ஆடை காணப்படுகின்றது. கைகளில் காப்புள்ளன. மார்பில் மாலைகள் கிடக்கின்றன.

இடப்புறமுள்ள வாயிற்காவலர் இடது கையைத் தண்டத்தின் மீது வைத்திருக்கின்றார். வலது கை தர்ஜனி முத்திரையில் காணப்படுகிறது. இடுப்பு முதல் தொடை வரையிலான ஆடையமைதி; மார்பில் ஆரம் உள்ளது. கைகளில் காப்புள்ளன. வலது கால் பக்கத்தில் அரவொன்றும் காணப்படுகிறது.

திருமால் கருவறை :

சிவன் கருவறைக்கு நேரெதிரில் திருமாலுக்காகச் சதுரமான கருவறை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இடக்காலை மடக்கி, வலக்காலைத் தாமரை பீடத்தின் மீது வைத்துள்ளவராகக் காட்டப்பட்டிருக்கின்றார். 4 கரங்கள்; மேலிரு

களில் சக்கரமும், சங்கும் ஏந்தியிருக்கின்றார். கீழ் வலக்கரம் அபயம் காட்டும் நிலையில் காணப்படுகிறது. கீழ் இடக் கரத்தைத் தொடை மீது வைத்திருக்கின்றார்.

தலையில் கிரீடமும், கைகளில் காப்பும், வாசிபந்தமும் காணப்படுகிறன. யக்ஞோபவீதம் மார்பில் படிந்து செல்கிறது. காதுகளைக் குண்டலங்கள் அணி செய்கின்றன. இருபுறமும் ஸ்ரீதேவி, மதங்கமுனிவர் உள்ளனர்.

வலதுபுறம் மதங்கமுனிவர் இடது கையில் பூச்செண்டைப் பிடித்துக் கொண்டிருக்கின்றார். வலதுகையோ பூக்களால் இறைவனைச் அர்ச்சிக்கும் நிலையில் உள்ளது.

இடது புறம் ஸ்ரீதேவி இடக்காலைக் கீழே மடக்கி வலது காலைக் குத்திட்டுள்ளார். வலது கையில் பூச்செண்டேந்தியுள் ளார். காதுகளில் மகர குண்டலங்கள் காணப்படுகின்றன.

திருமாலின் இருபுறமும் கந்தர்வர் இருவர் சாமரம் வீசிக் கொண்டிருக்கின்றனர். மேற்புறத்தில் வானவர் இருவர் பறந்து வருவதைப் போன்று காட்டப்பட்டுள்ளது.

பூர்வகாலத்தில் முன்னொரு நாள் தன்னை நினைத்துத் தவஞ்செய்து'கொண்ட முனிவர்களுக்குக் காட்சி கொடுப்பதை நினைத்தவிடத்து, முதலாவது பன்றி வடிவம் எடுத்தவுடன் நரசிங்க அவதாரமும் எடுத்து, அதன் மேல் தனக்குத் தானே சமமாகிய இலக்குமி சமேதராய்த் திருப்பரங்குன்றம் வந்து முருகப்பெருமான் தெய்வயானையம்மையைத் திருமணம் செய்ய வருவது தெரிந்து, அங்கே அந்த மணக்கோலம் தரிசிக்கும் பொருட்டு வந்திருந்தவரான, திருமால் பின்னெழுந்த திருப் பரங்கிரிப் புராணத்தில் குறிப்பிடப்படுகிறார்.

அப்பாடல் :

'முன்னொருநா ளரியதவ மிழைத்தருளு
முனிவருக்கு முன்னர்க் காட்சி
யுன்னியகா லாதிவரா கத்தினொடு
நரசிங்க வுருவங் காட்டித்

தன்னிகரில் கமலையுடன் முருகர்மணக்
கோலமெழுந் தகைமை நோக்கிப்

பன்னு புகழ்ப் பரங்கிரியி லிருந்தபவ
ளத்திரளைப் பணிதல் செய்வாம்.'

திருமால் கருவறைக்குக் காவலராகவும் இருவாயிற் காவலர்களின் சிற்பங்கள் எழில் ததும்பச் செதுக்கப்பட்டுள்ளன.

முருகன்

வடக்கு நோக்கிய நிலையில் முருகன், துர்க்கை, விநாயகர் ஆகியோர் உருவச்சிற்பங்கள் அமைந்து காணப்படுகின்றன.

முருகன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்க விட்டு அமர்ந்து காணப்படுகிறார். அவருடைய வலது பக்கம் நாரதர் மலர்க்கொத்தேந்தி நிற்கின்றார். இடது புறம் தெய்வயானை நின்று கொண்டிருக்கிறார். மூலவராகிய முருகப் பெருமானின் திருவுருவத்துக்கு மேலே சூரியனும், சந்திரனும் காட்டப்பட்டுள்ளனர்.

முருகன் நான்கு கரங்களோடு காட்சி தருகின்றார். மேலிரு கரங்களில் சக்திப் படையும், வச்சிரப் படையும் கொண்டுள்ளார். கீழ் வலக்கரம் அபயம் காட்டுகிறது. கீழ் இடக்கையை இடது தொடை மீது வைத்து மலர் ஏந்தியுள்ளார்.

அவரது பக்கங்களில் காயத்திரி, சாவித்திரி, சித்த வித்யாதரன், கலைமகள், நான்முகன், இந்திரன் ஆகியோர் உருவங்கள் உள்ளன.

கால்களுக்கு அடியில் யானை, மயில், ஆடு, குள்ளக்கணமொன்று சேவலைப் பிடித்துள்ள காட்சி ஆகியன காட்டப்பட்டுள்ளன. உக்கிரமூர்த்தி, அண்டாபரணர் என்னும் இரு பூதகணங்களும் காலுக்கடியில் உள்ளன.

துர்க்கை

முருகப்பெருமானுக்கும் விநாயகருக்கும் நடுவில் கருவறையில் துர்க்கை காணப்படுகிறாள். மகிஷத் தலையின் மீது நின்று பீடோடு காட்சி தருகின்றாள். நான்கு கரங்கள் காணப்படுகின்

றன. பேலிரு கைகளில் சக்கரமும், சங்கும் தாங்கியுள்ளாள். கீழ் வலக்கரத்தை அபயஹஸ்தத்தில் வைத்திருக்கின்றாள். கீழ் இடக்கரத்தை கட்ய வலம்பித ஹஸ்தத்திலும் வைத்திருக்கின்றாள். கால்வரை மடிப்புள்ள ஆடை இடையில் இருந்து காட்டப்பட்டுள்ளது. மார்பில் கச்சமுள்ளது.

துர்க்கையின் காலடியில் ஒருவன் தன்னுடைய வலக்கையில் கத்தியையும் இடக்கையில் தலையையும் பிடித்துக் கொண்டு அறுக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளான்.

''அடிக்கழுத்தி நெடுஞ்சிரத்தை அரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின்கை கொடுப்ப ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ !''
— கலிங்: 111.

என்று கலிங்கத்துப்பரணி யாசிரியர் காட்டும் காட்சிக்கு அவன் தன்னைத் தயார் நிலைக்கு ஆக்கிக்கொள்வதாக அவ்வுருவம் அமைந்துள்ளது. தன் தலையைக் கொற்றவையின் கையில் கொடுப்பதற்காக வீரன் அணியமாகும் காட்சி மாமல்லபுரத்தில் காணப்படுவது நோக்கத்தக்கது.

மற்றொருவன் வலது கையில் கத்தியோடு கொற்றவையின் அருகே காணப்படுகின்றான். முனிவர் ஒருவர் இரு கைகளையும் தேவியை நோக்கிக் கும்பிட்ட நிலையில் வடிக்கப்பட்டுள்ளார். பெண்ணொருத்தி இடது கையில் சங்கும், வலது கையில் மலரும் ஏந்திக் காணப்படுகின்றாள். இடுப்பு முதல் தொடை வரை ஆடை காணப்படுகின்றது. மார்பில் கச்சும் கைகளில் வளைகளும் காணப்படுகின்றன. இன்னும் இங்கு தேவகணம், மான், சிங்கம் ஆகிய உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

கற்பக விநாயகர்

விநாயகரின் மிகப் பெரிய உருவச் சிற்பமும் இங்கு மலையைக் குடைந்து கலைவண்ணம் மிளிர உருவாக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் காணப்படும் விநாயகருக்கும் இங்குள்ள விநாயகருக்கும் பெரும் வேறுபாடு இருப்பதைக் காணலாம்.

மற்றைய இடங்களில் மேலிரு கரங்களில் அங்குசமும், பாசமும் ஏந்தியிருப்பார். ஆனால், இங்கோ மேலிரு கரங்களில் ஒரே கரும்பை—நீளக் கரும்பைத் தலைக்குப் பின்புறம் வைத்துப் பிடித்த நிலையில் இருக்கின்றார்.

"சிற்ப அமைதிப்படி ஏராளமான கணபதி உருவங்கள் உள்ளன. பதினெட்டுக்கும் அதிகமான மூர்த்தங்கள் காணப்படுகின்றன. பொதுவாக இக்கணபதிகளின் கைகளில் இரண்டு ஆயுதங்கள் இருக்கும். அவை பாசமும், அங்குசமும் ஆகும். இந்த அடையாளங்கள் தாருண கணபதி, வீரவிக்னேஸ்வர கணபதி, லெட்சுமண கணபதி, பிரசன்ன கணபதி, உன்மத்த உச்சிட்ட கணபதி, விக்னராஜ கணபதி, புவனேச கணபதி, நிருத்த கணபதி, ஹரித்ர கணபதி ஆகிய உருவங்களின் கைகளில் காணப்படும். இதனால் பாசமும், அங்குசமும் ஆரம்ப காலத்தில் இருந்திருத்தல் வேண்டும். இவை மட்டும் இருக்கக் காரணம் என்ன? என்று ஒரு சிறிய வினாவை எழுப்புவோமானால், கணபதி-வேட்டுவக் கடவுள் என்ற பதில்தான் கிடைக்கும். யானைத் தலையும் இதனை உறுதிப்படுத்தும்."[8]

ஆனால் இங்குள்ள விநாயகர் தம் கைகளில் பாசமும், அங்குசமும் கொண்டிராவிட்டாலும் இவரை வேட்டுவக் கடவுளின் வளர்ச்சி நிலையில் உள்ளவராகக் கொள்ளலாம். இரு கரங்களில் கரும்பைப் பிடித்துக்கொண்டு தாமரை மலர் மீது பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். கணுக்கால்வரை ஆடை காணப்படுகிறது. யக்ஞோபவீதம் மார்பில் படிந்து செல்கிறது. கீழிரு கரங்களில் - கீழ் வலக்கரத்தில் மோதகம் வைத்துள்ளார். இடக்கையைத் தொடைமீது வைத்திருக்கின்றார். தோள்பட்டையில் வாசிபந்தமுள்ளது. முன்னிரு கைகளிலும் காப்புகள் உள்ளன. மார்பில் உருத்திராட்சமாலை, காசு மாலை, ரோசாப்பூ மாலை - ஆக மும்மாலைகளோடு காட்சியளிக்கின்றார். தும்பிக்கையில் மணி உள்ளது. தலையில் கரண்ட மகுடமுள்ளது.

---

8. Deviprasad Chattopadhyaya—"Lokayata" 'A Study in Ancient Materialism'

விநாயகரைச் சுற்றிலும் மேற்புறம் பூதகணங்களும், தேவர்களும் இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளவர். அனுமன் ஒருபுறம் இடக்கையால் சஞ்சீவி பர்வதத்தைப் பெயர்த்தெடுத்துக்கொண்டு வருகின்றான். ஒரு பூதகணம் இடக்கையில் சங்கேந்தி வருகிறது. மற்றொரு கணம் வலக்கையில் கத்தியை வைத்துக்கொண்டு இடக்கையில் மாதுளங்கனியைப் பிளந்துகொண்டு இருக்கிறது. மற்றொரு பூதம் தன்னிரு கரங்களால் மத்தளத்தை முழக்குகிறது. ஒரு பூதம் பலாப்பழத்தைத் தலையில் வைத்துத் தூக்கிக்கொண்டு வருகிறது. இன்னொரு பூதகணம் இளநீர்க் காயை ஏந்திக்கொண்டு வருகிறது. அமரனொருவன் அஞ்சலித்த நிலையில் நின்றுகொண்டிருக்கின்றான். மற்றுமொரு பூதம் நின்றுகொண்டிருக்கின்றது. இன்னொரு பூதம் மிருதங்கம் வாசிக்கின்றது. விநாயகருக்கு இருபுறமும் கந்தர்வர் இருவர் சாமரம் வீசிக்கொண்டு இருக்கின்றனர்.

சதுர நடமாடும் சைவன்

இத் திருப்பரங்குன்றத்துக் காணப்படும் சிற்பங்கள் ஒவ்வொன்றும் கலைநலமும், எழில் நலமும், ஒருங்கமைந்து திகழ்கின்றன. ஒன்றுக்கொன்று உயரிய சிற்பங்களாகப் பார்க்கும்போதெல்லாம் பரவசமுட்டுகின்றன.

சிவன் கருவறைக்கு வெளிப்புறமுள்ள சுவரில் சதுர நடமாடும் சிவனின் சதுர தாண்டவம் சித்திரிக்கப்பட்டுள்ளது. தன்னிரு கால்களையும் முயலகன் மீது வைத்துமுயலகன் ஆணவம் அழிந்துபட ஆடுகின்றாராகச் சிவபெருமான் காட்சி தருகின்றார். முயலகன் சிவபெருமான் ஆடும் தாண்டவத்தைத் தாங்கமுடியாமல் விழிகள் இரண்டும் பிதுங்க, அடங்கிக் கூனிக் குறுகிக் கிடக்கின்றான்.

சிவபெருமான் ஆடும் தாண்டவத்திற்குக் குள்ளபூதமொன்று குழல் ஊதுகிறது. நந்தி, குடமுழா வாசிக்கிறது. நடமாடும் பெருமான் நான்கு கரங்களில், மேலிரு கரங்களில் அனலையும் விடைக்கொடியையும் ஏந்தியுள்ளார். கீழ் வலக்

கையை ஆகூய வரதத்திலும் சீழ் இடக்கையை வேழமுத்திரையிலும் வைத்துள்ளார். அவர் அணிந்துள்ள காது வளையங்கள், மகுடம், கழுத்தில் அணிந்துள்ள மாலை, யக்ஞோபவீதம் தோள்வளை அனைத்தும் முற்காலப் பாண்டியர் கலைச் சிறப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இச் சிற்பம் பட்டடக்கல் சிற்பத்தைப் போன்று காணப்படுகிறது.[9]

சிவனாராடும் இச் சதுரதாண்டவத்தைப் பார்வதி கண்டு மகிழ்வதாக அடுத்தொரு சிற்பம் உள்ளது. அவள் நிற்கும் நிலையே உயரிய கலைப்படைப்பாக விளங்குகிறது. நடனத்தை ரசிப்பதால் அவளுடைய கால்கள் வளைந்து,நெளிந்து, குழைந்து காணப்படுகின்றது. தன் வலக்கரத்தை வாமனனின் தலை மீது வைத்துள்ளார். இடக்கரத்தில் அல்லிமலர் ஏந்தியுள்ளார். "இந்தத் தோற்றம் மகாபலிபுரத்தில் வராகக் குகைக் கோயிலில் உள்ள இலக்குமியையும், அஜந்தாவில் உள்ள இளவரசியையும் நினைவூட்டுகிறது."[10]

மலைமகளின் தலையில் இருப்பது மணிமகுடமல்ல எளிய மகுடத்தை அணிந்து இருக்கின்றாள். கழுத்தில் மாலையும், மார்பில் பட்டையான புரிநூலும், இடையில் ஆடையும் அணிந்துள்ளார். இம் மலைமகளைச் சூழ, நந்தி குடமுழா வாசிக்கிறது. குள்ளச் சிறுகணம் குழல் ஊதுகிறது. நான்கு சிறுகணங்கள் எட்டிப் பார்க்கின்றன.

நான்முகன், சங்கு சக்கரத்துடன் திருமால், அடுத்து இந்திரன் ஆகிய மூவரும் விண்ணிடத்தே நின்று கொண்டு கண்கள் களிகூர இந்த நடனத்தைக் கண்டு ரசித்துக் கொண்டிருப்பதாகவும் காட்டப்பட்டுள்ளது.

---

9. C. Sivaramamoorthy—'Kalugumalai and early Pandya Rock-cut Shrines'.

10. Ibid.

சப்தமாதர்

சிவனாடும் சதுர தாண்டவத்தைச் சப்தமாதர்களும் கண்டு, அவர்களும் சதுர நடனமாடுவதைப் போன்றும் ஒரு காட்சி வடிக்கப்பட்டுள்ளது.[11] இச்சிற்பங்கள் துரதிர்ஷ்ட வசமாகப் பின் எழுந்த சுவர்களுக்குள் சிக்கி இப்போது வெளித்தெரியவில்லை. அற்புதமான இச்சிற்பங்களை வெளிக்கொணர, பின் எழுப்பப் பட்ட சுவர்ப்பகுதி அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

சப்தமாதருள் பிராமி, சாமுண்டா ஆகிய இருவர் மட்டுமே இப்போது வெளிப்பகுதியில் பாதியுடலோடு தெரிகின்றனர். பிராமியின் வலதுபக்கத்தலை தெரிகின்றது. இருகரமும் காணப் படுகிறது. சாமுண்டாவின் தலைமுழுவதும் தெரிகிறது.

இருவருடைய கால்களும் சதுர நடமாடும் சிவனின் கால் களைப் போலவே சதுர தாண்டவ நிலையில் உள்ளன. இவர் களுக்கும் கீழே பூதகணமொன்று முழவை முழங்கிக்கொண்டு இருக்கிறது. ஏனைய மாதர் கட்டிடப்பகுதிக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். இப்படியொரு அற்புதச் சிற்பத்தை வாதாபி சென்று தான் காணமுடியும்.

மாடத்துள் மறைந்த மாதர்

இவ்வடபுறச்சுவரில் மண்டபம் எழுப்பப்பட்ட பகுதியில், சிறு மாடமொன்றும் பூட்டப்பட்டுக் கிடக்கிறது. அதனுள் வராகி, இந்திராணி, கௌமாரி, மாஹேஸ்வரி ஆகியோரும் நடமாடும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய கால்களுக்கடியில் இரண்டு பூதகணங்களின் தலைகள் மட்டும் செதுக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கருகிலேயே மலையைக் குடைந்து ஓரடி உயரத் தில் உமாமகேசுவர் சிற்பமொன்றும் செதுக்கப்பட்டுள்ளது.

---

11. சிவபெருமான் நாட்டியமாடும்போது அவரோடு சேர்ந்த எழுமாதரும் நடமிடும் காட்சி பல்வேறு இடங்களில் காட்டப்பட்டுள்ளது. மேலைச் சளுக்கி யரின் கலைப்பாணியில் (கி. பி. 6-ஆம் நூற்றாண்டு) அய்ஹொளேயிலும், கூர்ஜர பிரதிகாரர் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) கலைப்பாணியில் ராசசுதானத்தில் அபனேரியிலும், அலகாபாத் அருங்காட்சியகத்திலும் காணப்படுகின்றன.

இரு கால்களையும் மடக்கி சிவன் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். நான்கு கரங்கள். தலையில் ஜடாமகுடம் தரித்திருக்கின்றார். இடது தொடைமீது இடது கீழ்க் கையை வைத்திருக்கின்றார். வலதுகையை நெஞ்சில் வைத்து உபதேசம் செய்வது போலக் காணப்படுகிறார்.

அருகே உமையன்னை இடக்காலை மடக்கி வலக்காலைக் குத்திட்டு அமர்ந்துள்ளார். வலக்கை அபய வரதம் காட்டுகிறது. இடக்கை தரையின் மீது ஊன்றப்பட்டுள்ளது. கரண்ட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலமும் உள்ளன. மார்பில் புரிநூல் தடிப்பாக உள்ளது. கருவறையின் பின்னுள்ள சோமாஸ்கந்த மூர்த்தத்தைப் போலவே இது காணப்படுகிறது. நடுவில் குகன் மட்டும் இல்லை.

இச்சிற்பங்கள் யாவும் மறைக்கப்பட்டுள்ளன. மண்டபப் பகுதியை அகற்றினால் இவை வெளிப்பார்வைக்குத் தென்படும்.

நரசிங்கமூர்த்தி

திருமாலுக்கான கருவறையின் வெளிப்புறச் சுவரில் நரசிங்கமூர்த்தி, பூவராகமூர்த்தி, வைகுண்டநாதர் ஆகியோரின் சிற்பங்கள் உள்ளன.

உக்கிரப்பார்வையோடு நரசிங்கமூர்த்தி காணப்படுகின்றார். தன் இடது தொடையை மடக்கி வலது காலைக் கீழே ஊன்றி இரணியனைத் தன்தொடை மீது சாய்த்து வைத்து, அவனுடைய மார்பைத் தம் கூரிய நகங்களால் கிழித்துக் குடலை உருவி, மாலை போடுகின்றாராகக் காட்சியளிக்கின்றார்.

நான்கு கரங்களில் மேலிரு கரங்களிலும் குடலை உருவி மாலையாகக் கொண்டுவரும் நிலை காட்டப்பட்டுள்ளது. கீழ் வலக்கரத்தால் மார்பைப் பிளக்கின்றார். கீழ் இடக்கரத்தால் இரணியனை அமுக்கிக் கொண்டு இருக்கிறார். அவருடைய பிடியில் இருந்து விடுபட வேண்டும் என்பவனைப்போல இரணியன் பரிதாபகரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான். அவன் தன் வலக்கரத்தில் கத்தியும் இடக்கரத்தில் கேடயமும் பிடித்துள்ளான்.

வைகுண்டநாதர்

ஐந்தலை அரவத்தின் கீழ் இடதுகாலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டமர்ந்தாராக ஆதிநாதர் காட்டப்பட்டுள்ளார். தலைக்குமேல் வானவரிருவர் காட்டப்பட்டுள்ளனர். பெருமான் நான்கு கரங்களில் மேல் வலக்கரத்தில் சக்கரமும், மேல் இடக்கரத்தில் சங்கும் ஏந்தியுள்ளார். கீழ் வலக்கரம் உடைந்துள்ளது. கீழ் இடக்கரத்தைத் தொடைமீது வைத்துள்ளார்.

மார்பில் புரிநூலும், ஆரமும் காணப்படுகின்றன. அவர் காலடியில், தொங்கும் வலது காலைத் தாங்கியவளாக ஒரு பெண்ணும், அவளுக்கு நேரெதிரே மற்றொரு ஆணும் மண்டியிட்டிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளனர்.

பூவராகமூர்த்தி

அடுத்தபடியாக இருப்பது பூவராகமூர்த்தி அவதாரம். இளங்குழவி மடந்தைதனை இடந்து புல்லி எயிற்றிடை வைத்தருளிய எம் ஈசனாக, ஏனத்தின் உருவாகி நிலமங்கை எழில் கொண்டானாக அவர் காட்சி தருகிறார். கீழ் வலது கரத்தால் நிலமகளை அணைத்துக் கொண்டு, மேலிரு கரங்களிலும் சக்கரமும், சங்கும் கொண்டுள்ளவராகக் காணப்படுகின்றார்.

இவர் கால்களுக்கடியில் ஆதிசேடனும், அவன் மனைவியும் தம்மிரு கரங்களையும் கூப்பி வணங்கிக் கொண்டிருக்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

கங்காதரர்

சிவபெருமான் கருவறைக்குப் பக்கத்தில் இந்தச் சிற்பம் உள்ளது. நான்கு கரங்கள், கீழ் வலக்கரத்தை ஆகூய வரதத்திலும், கீழ் இடக்கரத்தைத் தொடை மீதும் வைத்துள்ளார். குள்ளப் பூதத்தின் மீது இடது காலை ஊன்றிய நிலையில் இருக்கின்றார். மார்பில் பட்டையான புரிநூல் உள்ளது. தலைக்கு மேலே இரண்டுபேர் கும்பிட்டுக் கொண்டுள்ளனர். கிரீடமகுடம் அணிந்துள்ளார். காதுகளில் பத்ரகுண்டலங்கள் அணி செய்கின்றன.

கருடாழ்வார்

திருமால் கருவறைக்குப் பக்கத்தில் இச்சிற்பம் உள்ளது. வலதுகை விரல்கள் இரண்டை நாபியில் வைத்துக்கொண்டு புன்முறுவல் பூத்த நிலையில் கருடாழ்வார் தோற்றமளிக்கின்றார். இடதுகையைத் தொடை மீது வைத்துள்ளார். கால்களில் தண்டை காணப்படுகிறது. இடது தோளில் அரவம் வீற்றிருக்கின்றது.

இச்சிற்பத்தினடியில் கண்ணபெருமான் குழந்தை வடிவத்தில் கொக்கொன்றைப் பிளந்தானாகக் காட்டப்பட்டுள்ளார்.

துர்க்காதேவி

கி. பி. 8-ஆம் நூற்றாண்டளவில் பெண்களுக்குச் சிறந்த தோரிடம்- தலைமையிடம் தந்திருந்தனர் என்பதற்குச் சான்றாகத் துர்க்காதேவியின் கோயில் திகழ்கிறது. இதையும் ஜேஷ்டாதேவி கோயிலையும் சாத்தன் கணபதியின் மனைவியான நக்கன் கொற்றி தோற்றுவித்ததாகக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

தேவி அமர்ந்திருக்கும் தோற்றமே பெருமிதத் தோற்றமாகக் காணப்படுகிறது. தேவியைச் சேர்த்து மொத்தம் 21 சிற்பங்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளன.

தாமரை மலர் மீது வலது காலை மடக்கி, இடது காலைத் தொங்கவிட்டு அன்னை அமர்ந்திருக்கின்றாள். தாமரைமீது இருபுறமும் சிறிய உருவில் இரண்டு சிங்கங்கள் உள்ளன. நான்கு கரங்களில் மேலிரு கரங்களில் அங்குசத்தையும், பாசத்தையும் பிடித்துள்ளாள். கீழ் வலக்கரத்தை அபயமுத்திரையிலும், கீழ் இடக்கரத்தை இடது தொடை மீதும் வைத்துள்ளாள். காதுகளில் மகர குண்டலம் அணிந்துள்ளாள். கைகளில் வளைகள் காணப்படுகின்றன.

தேவிக்கு வலப்புறமும், இடப்புறமும் இருவர் நின்றுகொண்டிருக்கின்றனர். பராசரர், வேதவியாசர் மற்றும் நான்கு முனிவர்கள் கீழே அமர்ந்துள்ளனர். இடப்புறம் ஆண், பெண் இருவர் வணங்கிய தோற்றமும், வலப்புறம்

இரண்டு பேர் நின்ற நிலையும் காட்டப்பட்டுள்ளன. ஒருவர் யாழ் வாசிக்கின்றார். மற்றொருவர் புல்லாங்குழல் ஊதுகிறார். தேவிக்கு இடதுபுறம் முன் வரிசையில் ஓர் உருவம் நிற்கின்றது. அந்த உருவம் பாண்டிய மன்னனாக இருக்கலாம். அவனுடைய வலக்கரத்தில் கத்தியும், இடக்கரத்தில் கேடயமும் காணப்படுகின்றன. கேடயத்தில் மீன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டியனுக்கு நேர் எதிரே நந்தி நின்று கொண்டிருக்கின்றது.

துர்க்காதேவி இன்று அன்னபூரணி என்றும், இராசராசேசுவரி என்றும் அழைக்கப்படுகின்றாள்.

கஜலெட்சுமி

துர்க்காதேவி கோயிலுக்கு மேற்புறம் அதே வரிசையில் கஜலெட்சுமியின் கருவறை இருக்கிறது. குடைவிக்கப்பட்ட இக்கோயில் இங்கிருப்பது பலருக்குத் தெரியாது. இங்கிருக்கும் அழகுமிகு பாண்டியர் காலச் சிற்பங்களுள் இஃதும் ஒன்றாகும். ஆனால், இக்கோயில் இன்று வழிபாட்டில் இல்லை. கோயில் நிர்வாகத்தார் இதனைப் பூட்டிவைத்துக் கோயிலுக்குக் கருவூல அறையாகப் பயன்படுத்தி வருகின்றனர். கோயிலில் பல ஆண்டுகளாக வழிபாடு செய்துவரும் பட்டர் கள்கூட இப்படியொரு சிற்பம் இங்கிருப்பது தங்களுக்குத் தெரியாது என்று இக்கோயில் பற்றி ஆய்வுசெய்யும்போது தெரிவித்தவர். மிகப்பெரிய லெட்சுமியின் திருவுருவச் சிற்பமாக இது அமைந்துள்ளது.

தாமரை மலர்மீது இலட்சுமி இரு கால்களையும் தொங்க விட்டு அமர்ந்துள்ளாள். இரண்டு கரங்கள்; வலது கையில் மலர் ஏந்தியுள்ளாள். இடதுகையைத் தொடைமீது வைத்துள்ளாள். இடுப்புமுதல் கணுக்கால்வரை மடிப்புள்ள ஆடையமைப்பு காணப்படுகிறது. மார்பில் கச்சு காணப்படுகிறது. தலையில் கரண்ட மகுடம் அணிசெய்கிறது. காதுகளில் பத்ரகுண்டலங்கள் தொங்குகின்றன. கண்டாவளி என்னும் பதக்கமணிந்துள்ளாள். கைகளிரண்டிலும் வளையல்கள் காணப்படுகின்றன.

இலட்சுமிக்கு இருபுறமும் இரண்டு யானைகள் நின்று கொண்டு நீராபிடேகம் செய்கின்றன. இடப்புறமுள்ள யானை இலக்குமியின் தலை மீது நீரை ஊற்றி வழிபாடு செய்து விட்டது. வலப்புறமுள்ள யானை தன் தும்பிக்கையில் கலயத்தை வைத்துக் கொண்டு நீராட்டுவதற்குத் தயாராக உள்ளது. இரு யானைகளும் மணிகள் அணிந்துள்ளன.

இலச்குமியின் இருபுறமும் தோழியர் இருவர் சாமரம் வீசிக் கொண்டு இருக்கின்றனர். வலதுபுறமுள்ள பணிப்பெண் இடது கையில் சாமரம் வைத்துக் கொண்டும், வலதுகையைத் தொடை மீது வைத்துக் கொண்டும் இருக்கிறாள். சுருள் சுருளான ஆடை யமைப்பு காணப்படுகிறது. காதுகளில் பத்ரகுண்டலங்கள் தொங்குகின்றன. இடதுபுறமுள்ள பணிப்பெண் வலதுகையில் சாமரத்தையும், இடதுகையை இடது தொடைமீது வைத்துக் கொண்டும் இருக்கிறாள்.

இலக்குமியின் கால்களுக்கடியில் இருபுறமும் இரண்டு பெண்கள் உள்ளனர். இடது பக்கத்தில் உள்ள பெண் இடது காலை மடக்கி வலதுகாலைக் குத்திட்டமர்ந்துள்ளாள். அவள் இடக்கை உடைந்து காணப்படுகிறது. வலக்கையை இடுப்பில் வைத்திருக்கின்றாள். உருவம் முற்றுப் பெறவில்லை, அதற்கு மேல் சுதை பூசப் பெற்றுள்ளது.

வலதுபக்கப்பெண்ணின் முகம் பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்கு மேலும் சுதை பூசியுள்ளனர். இடக்கையில் மலர் ஏந்தி யிருக்கின்றாள். வலக்காலை மடக்கி இடக்காலைக் குத்திட்டு வைத்துள்ளாள். காதுகளில் பத்ரகுண்டலங்கள் காணப்படு கின்றன.

இலக்குமிக்கு இருபுறமும் இரண்டு குள்ளபூதங்கள் தலை களில் கலயங்களைச் சுமந்து கொண்டு செல்கின்றன. வலது பக்கம் சூரியனும், இடது பக்கம் சந்திரனும் நின்ற நிலையில் காணப்படுகின்றனர். சூரியனின் வலது கையில் தாமரை மலரும், சந்திரனின் வலது கையில் அல்லி மலரும் காணப்படுகிறது.

ஜேஷ்டா தேவி

இலட்சுமி கருவறைக்குச் சற்றுக்கீழே, மேல்புறமாகச் சென் றால் ஜேஷ்டா தேவியின் சிற்பத்தைக் காணலாம். இதுவும்

நக்கன் கொற்றியால் தோற்றுவிக்கப்பட்டது. இதை இன்று மூதேவிகோயில் என்று மக்கள் அழைக்கின்றனர்.

இக் கோயிலிருக்கும் இடத்தைச் சென்றடைவது என்பது மிகவும் எளிதான செயலல்ல. கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் இருந்து சுமார் 100 அடி இருட்டான சுரங்கப் பாதைக்குள் கைகளில் பெரிய தீவட்டியோடு சென்றால்தான் இச்சிற்பத்தைக் காணமுடியும். அந்த அளவுக்கு இது பேணுவாரற்றுக் கிடக்கிறது.

ஜேஷ்டா தேவி இருக்கை ஒன்றில் இரண்டு கால்களையும் தொங்கவிட்டு அமர்ந்துள்ளாள். இரண்டு கரங்கள்; வலக்கரத்தில் தாமரை மலரை ஏந்தியிருக்கின்றாள். தன்து இடது பக்கத்தில் வலதுகாலை மடக்கி இடது காலைத் தொங்கவிட்டுள்ள தம் மகள் இடது தொடையில் இடது கையை வைத்துள்ளாள். மார்பில் கச்சணியப் படவில்லை. காதுகளில் குண்டலங்கள் காணப்படுகின்றன.

அவளுக்கு வலது பக்கத்தில் எருமைத் தலையுடைய அவளுடைய மகன் இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளான். இரண்டு கரங்கள்; வலதுகை தண்டத்தைப் பிடித்த நிலையில் காணப்படுகிறது.

தேவியின் இடது புறம் அவளுடைய மகள் அமர்ந்துள்ளாள். இரண்டு கைகள்; வலக்கையில் மலர் ஏந்தியுள்ளாள் இடக்கையைத் தரைமீது வைத்துள்ளாள். மார்பில் கச்சு இருக்கிறது. இருவருடைய முகமும் உருண்டையாகச் செய்யப்பட்டுள்ளது.

நான்முகன்

இருட்டுக் கொட்டகை என்றழைக்கப்படும் பகுதியிலும் நான்முகனுடைய சிற்பம் குடைவிக்கப்பட்டுள்ளது. இது சிவபெருமான் கருவறைக்கு நேர்கீழாக உள்ளது. அங்கு செய்யப்படும் அபிடேக நீரைப் பிரமன் தன் தலையில் வாங்கி வாய் வழியாக வெளியே விடுவதைப்போன்று இச்சிற்பம் குடைவிக்கப்பட்டுள்ளது. இடது காலை மடக்கி வலதுகாலைப் பின்புறம் நீட்டி உள்ளார். வலது கையைத் தொடைமீது வைத்துள்ளார். மூன்று தலைகள் பார்வைக்குத் தெரிகின்றன.

இவரைச் சுற்றிலும் எட்டு பூத கணங்கள் கைகளில் பல் வேறு ஆயுதங்களை ஏந்திக்கொண்டு போருக்கு ஆயத்த மான நிலையில் காணப்படுகின்றன.

நான்முகனின் வாய்ப்பகுதியில் பெரிய துளை ஒன்றும் காணப்படுகிறது.

காவற்பூதங்கள்

இங்கு, இவை தவிர திருப்பரங்குன்றத்தைக் காவல் புரியும் காவல் பூதங்களான உக்கிர மூர்த்திக்கும், அண்டாபர ருக்கும் குடைவிக்கப்பட்ட சிற்பங்களும் மிகப் பெரிய அளவில் உள்ளன.

கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் குடைவிக்கப்பட்ட இச்சிற் பங்களில் சிவன், திருமால், முருகன், துர்க்கை, விநாயகர், சதுர நடமாடும் சைவன், கங்காதரர், கருடாழ்வார் நரசிங்க மூர்த்தி, வராக மூர்த்தி, வைகுண்டநாதர் சிற் பங்கள் ஆகியன அர்த்த மண்டபத்திலும், துர்க்காதேவி, பிரம் மன், இலக்குமி ஆகியோர் சிற்பங்கள் மகாமண்டபத்திலும், ஜேஷ்டாதேவி, அண்டாபரணர், உக்கிரமூர்த்தி ஆகியோர் சிற்பங்கள் கம்பத்தடி மண்டபத்திலும் காணப்படுகின்றன.

ஸ்ரீதடாகம்

இக்கோயிலில் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டின் மூலம் சாத்தன் கணபதி ஸ்ரீதடாகத்தைத் திருத்துவித்தான் என்றறிய முடிகிறது. திருக்கல்யாண மண்டபத்தின் இடது புறம் இக்குளம் அமைந்துள்ளது. இன்று 'லெட்சுமிதீர்த்தம்' என்று இக்குளம் அழைக்கப்படுகிறது.

வடபுறமுள்ள இக்குடைவரைக்கோயிலின் அமைப்பு திருச்சி மலைக்கோட்டையின் அடியில் இருக்கும் கீழ்க்குடைவரை கோயிலை ஒத்துக் காணப்படுகிறது.

இக்குகை சிவன், திருமால், பிள்ளையார், முருகன், நான் முகன், சூரியன், துர்க்கை ஆகிய 7 பேருக்கும் எடுக்கப்பட்ட

தாகும். திருப்பரங்குன்றத்தில் சிவபெருமானுக்காக குடைவரை தோற்றுவிக்கப்பட்டிருந்தாலும் பிறகடவுளர் துணைக் கடவுள ராகக் காட்டப்பட்டுள்ளனர்.

இக்குகை முத்தரையர் காலத்தது என்றும், சிலர் பல்லவர் காலத்தது என்றும், சிலர் பாண்டியர் காலத்தது என்றும் கூறுகின்றனர். இவ்வாறு கருத ஒரே காரணம் தூண்கள் வேறு விதமாக இருப்பதால்தான். இதன் காலம் கி. பி. 7- ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகலாம்.

இதே அமைப்புத்தான் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் திருப் பரங்குன்றத்தில் குடைவரைக் கோயிலாக அமைந்து காணப்படு கிறது. சிவனுக்கும், திருமாலுக்கும் கருவறை எதிரெதிரே அங்கிருப்பதைப் போலவே இங்கும் குடைவிக்கப்பட்டுள்ளது. இங்கு வடபுறச் சுவரில் மூன்றே பேர் துணைக் கடவுளராகக் காட்சியளிக்க அங்கு ஐவர் காட்சி தருகின்றனர்.



1. அந்துவன் என்பான் படுக்கை அமைத்துக் கொடுத்ததைக் குறிக்கும் கி.மு. 2-ஆம் நூற்றுண்டுக் குகைக் கல்வெட்டு.

அ ந் து வ ன் கொ டு பி த வ ன்

(பரங்குன்றத்துச் செவ்வேள் பற்றிய பரிபாடல் எழுதிய புலவர் நல்லந்துவனுரை இங்கு நினைவு கூரலாம்.)



2. எருகாடுரைச் சேர்ந்த போலாலயன், இருக்கையும் படுக்கையும் அமைத்துக் கொடுத்ததைக் குறிக்கும் கி.பி. முதல் நூற்றாண்டுக் குகைக் கல்வெட்டு.

'எருகாடூர் ஈழகுடும்பிகன் போலாலயன் செய்த ஆய்சயன நெடுசாதன.



3. சதுர நடம் ஆடும் சிவனும், நடம் கண்டு குழைந்து நிற்கும் தேவியும். கி.பி. 773-இன் எழிற் படைப்பு.



4. தேவியின அண்மை தோற்றம்

5. குடமுழவொலிக்கும் நந்தி தேவர்.

6. சிவனின் தாண்டவம்
அண்மைத் தோற்றம்

7. இரணியனை ஆகம கீண்ட எம்மான்.
கி.பி. 773-ஆம் ஆண்டு.

8. ஐந்தலை அரவின் மீதமர்ந்த ஆதிநாதர்.
கி.பி. 773-ஆம் ஆண்டு



9. ஏனததுன உருவாகி நிலமங்கை
எழில் கொண்ட தேவர்.
கி.பி. 773-ஆம் ஆண்டு.





10 கரிய கஞ்சுகரான வைரவர்.
கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

11. வில்லேந்திய வேலவர், வள்ளி தெய்வயானை
யுடன் தரும் தோற்றம். கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

12. சமயக் குரவருள் முன்னவர் மூவரான சுந்தரர்,
சம்பந்தர், அப்பர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

பாறைச் சிற்பங்கள். மாறவர்மன்
சுந்தரபாண்டியன் காலத்தவை

13. திருமலை நாயக்கரின் தம்பி
முத்தியாலு நாயக்கர்.
கி.பி. 17-ஆம் நூற்றாண்டு



14. திருமலை நாயக்கர் (1629-1659).

15. ராணி மங்கம்மாள் *(1689-1706)*



16. 'தெய்வானை நாச்சியார் கல்யாணம்'
என்று கல்வெட்டு பொறிக்கப்
பெற்ற சிற்பம்.
கி.பி. 18-ஆம் நூற்றாண்டு



17. வீரப்ப நாயக்கர் கட்டிய கோபுரத்துடன் கூடிய, செவ்வேள் திருக்கோட்டத்தின் முகப்புத் தோற்றம்.
கோபுரம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



18. மங்கம்மாள் திருப்பணியான ஆஸ்தான மண்டபத்தின் எழில் மிகு பக்கவாட்டுத் தோற்றம்.
கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

பாறைச் சிற்பங்கள்

திருப்பரங்குன்றத்தில் குடைவரைச் சிற்பங்கள் தவிர பாறைச் சிற்பங்களும் காணப்படுகின்றன. மலையின் உச்சியில் காசி விசுவநாதர் கோயில் ஒன்றுள்ளது. அதற்கும் சற்றுத் தள்ளிச் சென்றால் அங்குள்ள பெரிய மலைப்பாறையில் பாறைச் சிற்பங்களைக் காணலாம். அவையும் இதே காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன எனலாம்.

சிற்பங்கள் தெற்கு நோக்கிக் குடைவிக்கப்பட்டுள்ளன. ஐந்து சிவலிங்கங்கள் தென்படுகின்றன. சிவபெருமான் பத்மாசன நிலையில் காணப்படுகின்றார். விநாயகர் நின்ற நிலையில் உள்ளார். மேலிரு கரங்களில் அங்குசமும், பாசமும், கீழிரு கரங்களில் தந்தமும், மோதகமும் வைத்து உள்ளார். அவருக்குப் பின்புறம் மூஞ்சூறு வாகனம் காட்டப்பட்டுள்ளது.

முருகன் நான்கு கரங்களோடு தோன்றுகிறார். மேலிரு கரங்களில் வச்சிரம், சக்தி தாங்கியுள்ளார். கீழ் வலக்கரம் அபயமுத்திரையிலும், கீழ் இடக்கரம் வரதத்திலும் காட்டப்பட்டுள்ளது. அவருக்குப் பின்புறம் மயில் காட்டப்பட்டுள்ளது.

விசாலாட்சி ஒரு கையில் மலரேந்தியுள்ளார்.

பைரவர் சுவாலை மகுடத்துடன் நான்கு கரங்களோடு காட்சி தருகின்றார். மேலிரு கரங்களில் தமருகம், மான் ஏந்தியுள்ளார். கீழ் வலக்கரம் உடைந்துள்ளது. கீழ் இடக்கரத்தில் கபாலம் ஏந்தி உள்ளார். கபாலமாலை காணப்படுகிறது. காதுகளில் பத்ரகுண்டலங்கள் உள்ளன.

இச்சிற்பத்திற்கு மேல் நாகர சிகரமுடைய விமானமும் செதுக்கப்பட்டுள்ளது. விமானத்தின் மீது கும்பமும் உள்ளது. இவையனைத்தும் ஒன்றரையடி உயரச் சிற்பங்களாகவே உள்ளன. இச்சிற்பங்களுக்கு அருகிலேயே மேலும் சில சிற்பங்களைச் செதுக்க முற்பட்டுள்ளனர். ஆனால் அப்பணி முற்றுப் பெறவில்லை. தொடக்கத்தோடு அவை நிற்கின்றன.

சமணச் சிற்பங்கள்

இச்சிற்பங்களுக்கருகில் சமணச் சிற்பங்களும் காணப்படு கின்றன. திகம்பர சமணரொருவர் நிர்வாண கோலத்தில் நின்றுகொண்டிருக்கின்றார். அவருக்கு இருபுறமும் இரண்டு பெண்கள் நின்றுகொண்டிருக்கின்றனர். கால்களுக்கடியில் அரவுகள் காணப்படுகின்றன. தலைக்குமேலும் இருவர் உள் ளனர்.

இவருக்குப் பக்கத்தில் மற்றொரு திகம்பர சமணர் ஐந்தலை அரவத்தின் கீழ் நின்றுகொண்டிருக்கிறார். அரவத் தலைக்குமேல் குடை காணப்படுகிறது. அவர் வலதுகாலடியில் பெண்ணொருத்தி அமர்ந்துள்ளாள். இடதுபுறம் இன்னுமொரு பெண் நின்றுகொண்டு இருக்கின்றாள். இவள் தலைக்கு மேலும் இரண்டு பேர் காணப்படுகின்றனர். ஒருவர் தன் தலைமீது ஏதோ ஒரு பொருளைச் சுமந்துகொண்டு வருகின் றார்.

இச் சிற்பங்கள் யாவும் மிகவும் உயரமான இடத்தில் வடிக்கப்பட்டுள்ளன. கூன்பாண்டியன் சமணனாக இருந்த காலத்தில் இச்சமணச் சிற்பங்கள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார்

கி. பி. 12-ஆம் நூற்றாண்டளவில் திருப்பரங்குன்றத்தில் அம்மனுக்காகத் தனி ஆலயம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. கல் வெட்டுக்களில் 'திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார்' என்று குறிப்பிடப்படுகிறது. கோயில் காமக்கோட்டம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இன்று கோவர்த்தனாம்பிகை என்றும், ஆவுடை நாயகி என்றும் அம்மன் அழைக்கப்படுகின்றார். இக்கோயில் இங்கு எடுக்கப்பட்டமைக்குக் காரணம், திருப்பரங்குன்றம் சிவன்

கோயிலாக இருந்தமையால் தான் என்பது புலப்படும். இதனால் முருகப்பெருமான் துணைக்கடவுளருள் ஒருவர் என்பதும் பெறப்படும்.

இக்கோயில் சுவர்களில் கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கருவறை சதுர வடிவில் அமைந்துள்ளது.

அம்மன் கோயிலுக்கு நிலதானங்கள் பல செய்யப்பட்டுள்ளன. (கல்வெட்டுக்கள் பகுதியில் இவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.)

குடைவரைக் கோயில்-2

திருப்பரங்குன்றத்தில் இரண்டாவது குடைவரைக் கோயில், மலையின் பின்புறத்தே தென்பக்கத்தில் ஒரு கல்தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் சிவபெருமானுக்காகப் பாண்டியர் காலத்துத் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

இக்கோயில் இப்போது உமையாண்டார் கோயில் என்றும், ஊமையாண்டார் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் இக்குடைவரை தோற்றம்பெற்றிருக்க வேண்டும். இங்குள்ள சிற்பங்கள் கி. பி.13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாக உள்ளன. இரண்டு தூண்கள் காணப்படுகின்றன. அவற்றில் தாமரைச் சக்கரங்கள் உள்ளன. அதிட்டானப் பகுதியுள் ஜகதிப்படை மண்ணுள் மறைந்துள்ளது. அதற்கு மேல் விருத்தக்குமுதம் காணப்படுகிறது. இப்போது தென்படும் படிகள் பிற்காலத்துக் கட்டப்பட்டன.

கி. பி. 1216 முதல் கி. பி. 1238 முடிய, பாண்டியநாட்டை மதுரை நகரிலிருந்து ஆட்சி புரிந்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து இங்கு சிவனுக்காகக் கோயில் எடுக்கப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட சிற்பங்கள்தான் இன்று காணப்படுகின்றன. இவன் சடையவர்மன் குலசேகரனுடைய தம்பியாவான் என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவுகட்டியுள்ளனர்.

இவன் சோழநாட்டை மூன்றாம் இராசராசன் ஆட்சி புரிந்தபோது படையெடுத்துச் சென்று அந்நாட்டைக் கைப் பற்றிக் கொண்டான். அப்படையெழுச்சியால் சோழரின் தலை நகராகிய உறையூரும், தஞ்சாவூரும் கொளுத்தப் பட்டன. ஆடரங்குகளும், மணிமாடங்களும், கூடகோபுரங்களும் இடிக்கப் பட்டன. சோழன் கரிகால் பெருவளத்தான் பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாருக்கு வழங்கியிருந்த பதினாறுகால் மண்டபம் தவிர ஏனைய எல்லாம் இடிக்கப் பட்டன என்று திருவெள்ளறைக் கல்வெட்டு கூறுகிறது.

"வெறியார் தளவத் தொடைச்செய மாரபன் வெகுண்ட
தோன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டில் அரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே"[1]

பிற்காலப் பாண்டியர்களில் தலைசிறந்த புகழுடன் திகழ்ந் தவன் இவன். இவனுடைய மூன்றாம் ஆட்சியாண்டுக் கல் வெட்டுக்கள் இவனைச் 'சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர்' எனவும், 'சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டிய தேவர்' எனவும் கூறுகின்றன. இவனுடைய மெய்க் கீர்த்தி 'பூமருவிய திருமடந்தையும் புவிமடந்தையும்' என்று தொடங்குகிறது. இவனுடைய பட்டத்தரசி உலகமுழுதுடை யாள் என்று திருப்பரங்குன்றக் கல்வெட்டில் குறிப்பிடப்பட் டுள்ளாள்.

இங்குக் காணப்படும் கல்வெட்டு கோயிலின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஏழாவது ஆட்சியாண்டு, நாள் முன்னூற்றிருபத்தைந்து மதுரைக் கோயில் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப்பீட மழவராயனில் எழுந்தருளி இருந்த போது பிரசன்ன தேவர் என்பவர் வேண்டிக்கொள்ள 'சுந்தரபாண்டிய ஈஸ்வரம் உடை யார் கோயில்' என்ற இக்கோயில் தோற்றுவிக்கப்பட்டது என்று கல்வெட்டு கூறுகிறது.

1. செந்தமிழ்: தொகுதி 41, பக்: 215.

இக்குடைவரையில் உள்ள கருவறையில் அர்த்தநாரீஸ்வரர் காணப்படுகிறார்.

சுவரில் நடராசர், சிவகாமசுந்தரி, ஹேரம்ப கணபதி, முருகன் ஆகிய சிற்பங்கள் ஒரு புறத்திலும் வள்ளி, தெய்வயானையுடன் கூடிய வில்லேந்திய வேலன் மற்றொரு பக்கத்திலும் செதுக்கப்பட்டுள்ளனர். வெளிப்புறச்சுவரில் கணபதி, பிரசன்ன தேவர், அவர் மாணவர், மாணிக்கவாசகர், ஞான சம்பந்தர், அப்பர், சுரியகஞ்சுகனான பைரவர் ஆகியோர் சிற்பங்கள் அமைந்துள்ளன.

அர்த்தநாரீசுவரர்

'பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்'
'மாதியலும் பாதியர்'
'அம்மையப்பர்'

என்றெல்லாம் புகழப்படும் அர்த்தநாரீசுவரர் பீடத்தில் நின்றநிலையில் கருவறையில் காணப்படுகின்றார். நான்கு கைகளில் கீழிரு கரங்களும், மேல் வலக்கரமும் உடைந்து விட்டன. மேல் இடக்கரத்தில் மலர் ஏந்தியுள்ளார். மலரும் உடைந்து காணப்படுகிறது.

உமைபாகத்தில் உள்ள கரங்கள் விடையின் தலைமீது உள்ளன. காதுகளில் அணிகலன்கள் காணப்படவில்லை. இடது காலைக் கொஞ்சம் பின்தள்ளி வலதுகாலைச் சற்று முன் நோக்கி வைத்துள்ளார். மார்பில் புரிநூல் காணப்படுகிறது. இடது பக்கம் கணுக்கால் வரை ஆடை காணப்படுகிறது. வலதுபக்கம் ஆடை தொடைவரை உள்ளது.

ஹேரம்பகணபதி

சிம்மாசனத்தில் இடது காலைக் குத்திட்டு வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். தலைக்கு இருபுறமும் இரண்டு தலைகளும், மேல்புறம் ஒரு தலையும் ஆக நான்கு தலைகள் வெளியேதெரிகின்றன. பஞ்சமுகக் கணபதி என்று இவர் அழைக்கப்படுகின்றார். பத்துக் கைகளில் பாசம், தந்தம், அக்கமாலை,

மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் ஆகியவற்றுடன் அபயம், வரதம் காட்டுகின்றார்.

இவரைச் சுற்றிலும் எட்டு விநாயகருடைய உருவச் சிற்பங்கள் சிறிய அளவில் உள்ளன.

இதற்கு நேரெதிரில் ஆறுமுகப் பெருமான் மயில் வாகனத்தின் மீது பன்னிரு கரங்களோடு இடக் காலைத் தொங்கவிட்டு வலக்காலைக் குத்திட்டு அமர்ந்துள்ளார்.

இவ்விரு சிற்பங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் நடுவே பிரபை மண்டலத்தில் நடராசரின் பெரிய சிற்பம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மார்புக்குக் கீழே உள்ள பகுதி முழுவதும் உடைந்துவிட்டது. கால் பகுதி இருந்த அடையாளம் கூட இல்லை. பெருமானுடைய சடைமுடியில் கங்கை கும்பிட்ட வண்ணம் உள்ளாள். காலுக்கடியில் காணப்படும் முயலகன் உருவம் மட்டும் இருக்கிறது. நான்கு கரங்களை உடையவராக நடராசர் காட்சி தருகிறார். நான்கு கரங்களும் உடைந்து விட்டன. மேல் வலக்கரத்தில் இருந்த உடுக்கையும், மேல் இடக்கரத்தில் இருந்த அனலும் உடைந்து சிறிது மட்டும் வெளியே தெரிகின்றன. இந் நடனத்தைக் காரைக்கால் அம்மையார் காண்கின்றார். கீழே கணமொன்று குடமுழா வாசிக்கிறது.

பக்கத்தில் சிவகாமசுந்தரி தாமரைப் பீடத்தின்மீது நின்று கொண்டு இருக்கிறார். இச்சிற்பமும் உடைந்து விட்டது, இரு கைகளும் காணப்படவில்லை. தலைப்பகுதி இல்லை. கால்களில் வலக்கால் செம்பாகமாக உடைக்கப்பட்டுள்ளது.கணுக் கால்வரை ஆடை தெரிகிறது.

சுப்பிரமணியரும், தேவியரும்

'கல்லகம் குடைந்த செவ்வேள்
கந்தன்ஓர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான
வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப்
பவநெறி காய்த்திட்டு அன்பர்
எல்லவர் தமக்கும் முத்தி
இருங்கனி உதவும் என்றும்!

என்று கந்தபுராணம் பாடுவதற்கேற்ப, வில்லேந்திய வேலனாக வள்ளி, தெய்வயானை சூழ இச்சிற்பம் அமைந்துள்ளது.

வில்லேந்திய வேலன் நிலையில் (வில்இல்லை) வலப்புறம் வள்ளி, இடப்புறம் தெய்வானையோடு காட்சி தருகிறார். இரண்டு கரங்களும் உடைந்து விட்டன. தலையில் கிரீட மகுடம் அணிந்துள்ளார். மூவருக்கும் மூக்கு சிதைந்துள்ளது. வள்ளியின் இரு கரங்களும் உடைந்துவிட்டன. தெய்வயானை இடது கை தாழ் கரத்தில் காணப்படுகிறது. வலது கை உடைந்துவிட்டது. இருவரும் கரண்ட மகுடம் அணிந்துள்ளனர்.

வெளிப்புறச் சுவர்

விநாயகர்

இரு கால்களையும் மடக்கித் தாமரைப் பீடத்தில் அமர்ந்துள்ளார். கீழிரு கரங்களும் உடைந்து விட்டன. முகமும் உடைக்கப்பட்டு விட்டது. மேல் வலக்கரத்தில் அங்குசமும், மேல் இடக்கரத்தில் பாசமும் ஏந்தியுள்ளார்.

பிரசன்னதேவர்

இரு கால்களையும் சமமாக வைத்தமர்ந்துள்ளார். இடக்கரத்தில் ஏடு விரித்து வைத்துள்ளார். வலக்கரம் அருளல் நிலையில் உள்ளது. மார்பில் புரிநூலும், முகத்தில் தாடியும் காணப்படுகிறது.

இவருக்கருகில் இவருடைய மாணவரும் சிறிய உருவத்தோடு காட்டப்பட்டுள்ளார். அவரும் இடக்கரத்தில் ஏடேந்தியுள்ளார். வலக்கரம் அபயமுத்திரை காட்டுகிறது.

மாணிக்கவாசகர்

பத்ரபீடத்தின் மீதுள்ள பத்ம பீடத்தில் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்க விட்டு அமர்ந்துள்ளார். வலக்கரம் உடைந்துள்ளது. இடக் கரத்தை இடது தொடைமீது வைத்திருக்கின்றார். மார்பில் முத்துமாலை காணப்படுகின்றது. முகம் சிதைந்துள்ளது.

சுந்தரர், ஞான சம்பந்தர், அப்பர் மூவரும் ஒரே நிலையில் செதுக்கப்பட்டுள்ளனர்.

சுந்தரர்

கைகளைக் கூப்பிய நிலையில் உள்ளார். கைகள் உடைந்து விட்டன. காதுகளில் பத்ர குண்டலங்கள் தொங்கு கின்றன. தலை கொண்டை போடப்பட்டுள்ளது. மார்பில் மாலை காணப்படுகிறது.

திருஞானசம்பந்தர்

குழந்தை வடிவத்தில் பத்மபீடத்தில் இடதுகாலை ஊன்றி வலதுகாலைத் தூக்கியாடுகின்றார். வலதுகால் உடைக்கப் பட்டுவிட்டது. இடதுகால் பாதம்மட்டும் தெரிகிறது. வலக் கரமும் இடக்கரமும் சிதைக்கப்பட்டுவிட்டன. பால் வடியும் முகத்தோடு சிற்பி ஞானசம்பந்தரைக் காட்டியுள்ளான். இதனைப் பாலசுப்பிரமணியர் என்றும், ஸ்கந்தர் என்றும் குறிப் பாருமுளர்.[2]

அப்பர்

உழவாரப்படை ஏந்தியவராகக் கூப்பிய கரங்களுடன் நின்று கொண்டிருக்கின்றார். தொடைவரை துண்டு அணிந்த நிலை.

பைரவர்

கரிய கஞ்சுகனான பைரவரின் கைகள் உடைந்து விட்டன. ஏனைய பகுதிகளும் சிதைவுற்றுள்ளன. பின்புறம் நாய் காட் டப்பட்டுள்ளது. இக்குடைவரைக்கோயில் இன்று பெரிதும் சிதைந்துள்ளது. முகம்மதியர் படையெடுப்பின் போது இவ்வழிவு நேரிட்டிருக்க வேண்டும். இக்குடைவரை பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. கி. பி. 8-ஆம் நூற்றாண்டளவில் சமணர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட குடைவரையைக் காலப் போக்கில் சைவக் கோயிலாக மாற்றம் பெறச் செய்து விட்டனர் என்பர். இங்குள்ள தூண்கள் முற்காலப் பல்லவர்

---

2. D. Deva Kunjari, 'Madurai through the Ages'—Pa: III.

கலைப்பாணியை ஒத்துக்காணப்படுகின்றன, எனினும் சிற்பங்கள் அனைத்தும் வடபுறக் குடைவரையினின்றும் காலத்தாற் பிற்பட்டவை.

தென்புறமுள்ள இக்குடைவரை சமணர் குகையாக இருந்திருக்கவேண்டும் என்பார் கூற்று வருமாறு:[3]

"குடைவரையின் அமைப்பை நோக்கும்போது இது கி.பி. எட்டாம் நூற்றாண்டையது என்பது கலைப் பாணியில் இருந்தே பெறப்படும். இதைக் காலப்போக்கில், மதமாற்றத்தால் சைவக்கோயிலாக மாற்றம்பெறச் செய்துவிட்டனர்."

இன்று அர்த்தநாரீசுவரர் இருக்கும் கருவறையில் சமண தெய்வமான 'யக்ஷி' வழிபாட்டில் இருந்திருக்கவேண்டும். சமண மதம் வீழ்ச்சியடைந்த நேரத்தில் இப்போதுள்ள மாற்றம் ஏற்படத் தொடங்கி இருக்கவேண்டும். பழைய குடைவரையில் சமணச் சிற்பங்கள் இருந்திருக்கவேண்டும். அதனை முற்றிலுமாகச் சிதைத்துவிட்டு அந்தப் பகுதியை ஆழப்படுத்திவிட்டு கி. பி. 13 - ஆம் நூற்றாண்டளவில் புதிய சைவச் சிற்பங்கள் தோற்றுவிக்கப் பட்டிருக்கலாம். இதற்குச் சான்றாக, இன்று வெளிச்சுவரில் 'பைரவர்' என அழைக்கப்படும் பாகுபலி உருவச் சிற்பத்தைச் சுட்டிக் காட்டலாம். இந்த சமணச் சிற்பத்தை சைவச் சிற்பமாக மாற்ற முனைந்தவர்கள், அதன் அம்மண நிலையைப் பயன் படுத்தி, உருவத்தின் பின்புறம் நாயைச் செதுக்கி, உடம்பிலும் சிலமாற்றங்களைச் செய்துவிட்டனர். ஆனால் ஒன்றை அவர்கள் மறந்துவிட்டனர்.

பைரவர் பொதுவாக 4 கரங்களுடன் தான் காணப்படுவார். ஆனால் இங்கு 'பைரவர்' என அழைக்கப்படுபவருக்கோ, இரண்டு கரங்கள்தான் உண்டு. அதுவும் வெறுமனே கீழே தொங்க விடப்பட்டுள்ளன. இதன் மூலமும் இது சமணக் குகையாக இருந்திருக்க வேண்டும் என்று உணரலாம். காலஞ்சென்ற டாக்டர் தேவகுஞ்சரி, 'இந்த பைரவர் ஒரு சமணத் தீர்த்தங்கரரைப் போலத் தோற்றமளிக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.[4]

3. மா. சந்திரமூர்த்தி, 'பாண்டி நாட்டுக் குடைவரைக் கோயில்கள்'.
4. D. Deva Kunjari, 'Madurai through the Ages'—Pa: 112.

இக் கூற்றுக்கள் ஏற்புடையனவா என்பதைச் சிந்தித்தல் வேண்டும். சமணக்குகை சைவக் குடைவரையாக மாற்றம் பெற்றிருக்குமானால்—அப்படி மாற்றியவன் அதை மிகத்துணி வுடன் அந்த நிகழ்ச்சியினைக் கல்வெட்டில் பொறித்திருக்க முடியும். ஏனென்றால் இங்கு சுந்தரபாண்டிய ஈஸ்வரம் உடையாருக்குக் கோயில் எடுத்தவன் பாண்டியமன்னன். சமணக் கோயிலை சைவக் கோயிலாக மாற்றம் செய்தேன் என்று அவனே கூறியிருக்க முடியும். அல்லது அவனைக் கோயில் எடுக்கும்படி வேண்டிக் கொண்ட பிரசன்ன தேவ ரின் கூற்றாகவே அதைக் கூறியிருக்க முடியும். ஆனால் இப்படிப்பட்ட எந்த நிகழ்ச்சியும் இங்கு காணப்படும் முழு நீளக் கல்வெட்டில் குறிக்கப்படவில்லை. பழைய கல்வெட்டுக் களைப் படியெடுத்து மீண்டும் புதிதாக வெட்டுகிறேன் என்று கூறிய அரசபரையினர் ஒரு மதக்கோயிலை மாற்றும் மிகப் பெரிய நிகழ்ச்சியைச் சொல்லாமலா சென்றிருப்பார்கள் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

மேலும் இக்குடைவரையில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டள வில் சிற்பங்கள் எடுக்கப்படும்போது சமண மதம் முற்றிலுமாக வீழ்ச்சியடைந்து விட்ட நேரம். அந்த நேரத்தில், சமணக் கோயிலை மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப சைவக் கோயிலாக மாற்றினேன் என்று அரசன் கூறாமலா இருந்திருப்பான்?

சிற்சில உருவ வேறுபாடுகளை வைத்துக் கொண்டு முடி வுக்கு வருதல் சிந்திக்கற்பாலது.

நாயக்கர் காலம்

மதுரை நாயக்கர்கள் கி. பி. 1529–ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 1736-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து 207 ஆண்டுகள் விசுவநாத நாயக்கர் முதலாக மீனாட்சி அரசிவரை 13 பேர் மதுரைப் பெருநாட்டை ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். விசய நகரப் பேரரசின் பெருமன்னராக விளங்கிய கிருட்டின தேவ ராயர் மதுரை நாட்டின் ஆளுனராக விசுவநாத நாயக்கரை நியமித்தார். அவரை அச்சுதராயர் மண்டலேசுவரராக உயர்த்தினார்.

இவர்களுள் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1564 - 1572), வீரப்பநாயக்கர் (கி.பி. 1572-1595), இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கர் (கி.பி. 1595-1601), முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி. 1609-1623) ஆகியோர் விசயநகரப் பேரரசுக்கு உட்பட்ட அரசர்களாக ஆண்டுவந்தனர். ஏழாவதாக ஆட்சிக்கு வந்த திருமலை நாயக்கர் (கி. பி. 1623 - 1659) விசயநகரவேந்தன் மூன்றாம் ஸ்ரீரங்கனோடு போரிட்டுத் தன்னை முழுவுரிமையுடைய மன்னனாக நிலை நாட்டிக் கொண்டார். இவருக்குப்பின் இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர், சொக்கநாத நாயக்கர் (கி. பி. 1659-1682), மூன்றாம் முத்து வீரப்பநாயக்கர் (கி.பி. 1682-1689), இராணி மங்கம்மாள் (கி. பி. 1689 - 1706), விசயரங்கச் சொக்கநாத நாயக்கர் (கி. பி. 1706 - 1732), மீனாட்சி (கி.பி. 1734-1738) ஆகிய ஆறுபேர் மதுரை நாட்டை ஆண்டனர்.

இவர்கள் வைணவ நெறியைப் பின்பற்றியபோதும் பிற சமயத்தார் மீது வெறுப்பினைக் காட்டினாரல்லர். சைவத் திருக்கோயில்களுக்கு எண்ணற்ற பணிகளை இவர்கள் செய்துள்ளனர். மதுரைக் கோயில் திருப்பணிமாலை மதுரைக் கோயிலுக்கு இவர்கள் செய்த திருப்பணிகளையெல்லாம் எடுத்துரைக்கிறது. இவர்கள் மதுரைப் பெருநாட்டில் கோயில்களுக்குக் கோபுரங்கள் கட்டினார்கள்; மண்டபங்கள் அமைத்தார்கள்; சிற்பங்கள்

செதுக்கினார்கள். இந்தப் பணி திருப்பரங்குன்றம் கோயிலிலும் செவ்வனே நடைபெற்றுள்ளது.

வீரப்பநாயக்கர் (கி.பி. 1572-1595)

திருப்பரங்குன்றத்தில் இன்று உயர்ந்து நிற்கும் 150 அடி உயரமுள்ள கோபுரத்தை வீரப்ப நாயக்கர் சக ஆண்டு 1505-இல் கட்டிமுடித்தார்.

'தமிழ்நாட்டில் கோயில் என்றாலே கோபுரங்கள் தான் நம் கண்முன்னே நிற்கும். பெரும்பாலோர் கோயில் என்றாலே கோபுரத்தைத்தான் கொள்வர். அந்த அளவுக்குத் தமிழகமெங்கும் கோயில்தொறும் வானளாவ ஓங்கி நிற்கும் வகையில் கோபுரங்கள் எடுக்கப்பட்டுள்ளன. வேறு எந்நாட்டிலும் இல்லாத அளவுக்குத் தமிழகம் எங்கும் தெய்வீகச் சூழ்நிலை நிரம்பிய தாக்கி இக்கோபுரங்கள் விளங்குகின்றன. கோபுரம் என்னும் சொல்லே தமிழகத்தின் தனிச்சொல் என்பர்.''

இக் கோபுரத்தின் கீழ்ப்பகுதி இருபிரிவாக (two-storeyed) அமைந்துள்ளது. இருபிரிவும் கருங்கல்லால் ஆக்கப்பட்டுள்ளது. இவ்விரு பகுதிகளிலும் ஏனைய கோபுரங்களில் காணப்படுவதைப்போன்று பரிவார தேவதைகளோ, மற்றைத் தெய்வ உருவங்களோ காணப்படவில்லை. எழுநிலை மாடக்கோபுரமாக இது விளங்குகிறது. விசய நகரக் கலையின் அம்சமாகவே இது தோற்றமளித்துக் கொண்டிருக்கிறது. சுவர் மட்டத்திலேயே கூடு, பஞ்சரம், சாலை ஆகியன மிகவும்நல்ல நிலையில் காணப்படுகின்றன. கோபுர நுழைவில் இரண்டு கொடிப் பெண்கள் இருபுறமும் உள்ளனர். இருநாயக்க மன்னர்களின் உருவச் சிலைகளும் காணப்படுகின்றன.

கோபுரத்தில் சுதையுருவங்களும் காணப்படுகின்றன. (சுதையுருவங்கள் என்ற பகுதி காண்க) இக்கோபுரம் அரசி மங்கம்மாள் கட்டிய ஆஸ்தான மண்டபத்தால் மறைக்கப்பட்டு மேல்பகுதி மட்டும் தெரிகிறது.

---

1. திரு. இரா. நாகசாமி. 'தமிழகக் கோயிற் கலைகள்'-பக். 73.

இக்கோபுரத்தை மட்டுமின்றித் திருமதிலையும் வீரப்ப நாயக்கர் எடுத்துள்ளார். தில்லையிலும் கூத்தப்பெருமானுக்கு இவர் வலிமைமிக்க மதில் கட்டியுள்ளார். மதுரை மீனாட்சி யம்மன் கோயிலிலும் இவர் திருப்பணிகள் பல புரிந்துள்ளார்.

திருமலை நாயக்கர்: (கி. பி. 1632-1659)

திருமலைநாயக்கர் காலத்தில் இக்கோயில் உன்னத நிலையில் இருந்தது. தானே முருகனை எந்தநேரமும் வழிபட்டுக் கொண்டிருப்பதைப் போன்று தன்னுடைய உருவச்சிலையையும் தம் மனைவியர் இருவர் உருவச்சிலை களையும் இங்கு அமைத்துள்ளான்.

கருவறைக்கு முன்உள்ள பகுதி எட்டுத் தூண்களுடன் உள்ளன. இம்மண்டபத்தை இரண்டு வாயிற்காவலர் காத்து வருகின்றனர். மண்டபத்தில் உள்ள மற்றொரு தூணில் திருமலை மன்னனின் அமைச்சர்களிருவர் வணங்கிக்கொண்டு உள்ளனர். இத்திருக்கோயிலில் இருக்கும் பல மண்டபங்களுள் இதுவும் ஒன்று. இதன் வேலைப்பாடு மதுரைக் கலைப் பாணியாக அமைந்துள்ளது. இங்குள்ள திருமலை நாயக்கரின் உருவம் மிகவும் பெருமிதத்துடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பருமனான உடல் பகுதியுடன், நெடிய உருவமாக மன்னர் காட்டப்பட்டிருக்கின்றார். அவருடைய தோள்கள் வலிமை மிகுந்தனவாகவும் உள்ளன. அத்தோடு நாயக்கர்களுக்கே உரிய முன்புறம் சரிந்த தொந்தி, செதுக்கிவைத்ததைப் போன்ற மூக்கு, திருகிவிடப்பட்ட மீசை ஆகியவற்றோடும் திருமலை நாயக்கர் காட்சி தருகின்றார். அவர் மார்பில் முத்துமாலைகள் புரள்கின்றன; கைகளில் மோதிரங்கள் அணியப்பட்டுள்ளன. அவர் அணிந்துள்ள ஆடை பூவேலைப்பாடு மிகுந்து காட்சி தருகிறது. திருமலை நாயக்கர் மீனாட்சியம்மன் திருக்கோயில் ஆட்சியை ஏற்றுக் கோயில் ஒழுங்கு ஏற்பாடுகளைச் செய்து பல விழாக்கள் நடைபெறப் பலகிராமங்களைத் தானமாக வழங்கினார். புதுமண்டபத்தைக் கட்டினார்; அழகான தெப்பக்குளம் அமைத்தார்; மதுரையின் சிறப்புக்குரிய மகா லைக்கட்டிப் பெருமை பெற்றார்.

கம்பத்தடி மண்டபம்

அர்த்தமண்டபத்திற்கு அடுத்துள்ள மண்டபம் மகாமண்டபம். அதற்குக்கீழ் கம்பத்தடி மண்டபம் என்றழைக்கப்படும் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் முருகப்பெருமான் சன்னதியை நோக்கி பெரியஉருவில் நந்தியும், அதற்கு வலப்புறம் மயிலும், இடப்புறம் பெருச்சாளியும் உள்ளன. அவற்றுக்கு முன்னர் பலிபீடம் கட்டப்பட்டுள்ளது. பலிபீடத்திற்கு முன்னர் கொடிக்கம்பம் உள்ளது. மண்டபத்தை நான்கு யாளித் தூண்கள் அழகு செய்கின்றன. இம்மண்டபத்தில் தூண்கள் அதிகமாக இருந்தாலும் சிற்பங்கள் கிடையா. நாயக்க மன்னர் இருவரின் பெரிய உருவச்சிலைகள் சன்னதியை நோக்கிக் கும்பிட்ட வண்ணம் உள்ளன. இந்நாயக்க மன்னர்களின் தலைக் கொண்டை ஏனைய நாயக்க மன்னர்களுக்கு இங்கிருப்பதைப் போன்று தலைப் பக்கத்தில் விழாமல் மேல் நோக்கி முன் வளைந்திருக்கின்றது. இது புதிய அமைப்பாகக் காணப்படுகிறது.இதுவும் மன்னன் திருமலைநாயக்கர்காலத்தையொட்டி எழுப்பப்பட்டதெனலாம். இங்கு வேதவியாசர், பராசரர் ஆகியோருடைய உருவச் சிலைகளும் உள்ளன. இம்மண்டபத்தை யொட்டி சண்முக மண்டபம் ஒன்றும் இருக்கின்றது. இங்கும் இரண்டும் உருவச்சிலைகள் உள்ளன. அனேகமாக அவை இரண்டும் கோயிலுக்கு நன்கொடையளித்தோரின் உருவமாக இருக்கலாம்.

கொடிக்கம்பம்

விசயநகர வேந்தர்களின் சார்பாளர்களாக வந்த நாயக்க மன்னர்கள் அவர்களைப்போன்று தங்கள் கொடிகளிலும் பன்றி, மரம், கத்தி, சூரியன், சந்திரன் ஆகியவற்றை இலச்சினையாகக் கொண்டனர். இங்குள்ள கொடிக்கம்பத்தில் இவை காணப்படுகின்றன.

கிழக்குப் பகுதியில் பன்றி, கத்தி, சூரியன், சந்திரன், மரம் ஆகியனவும், மேற்கில் சூரியன், சந்திரன், நந்தி ஆகியனவும், தெற்கில் மயில்மீது ஆறுமுகரும், வடக்கில் விநாயகரும் காணப்படுகின்றனர்.

இக் கொடிக்கம்பம் செப்புத்தகட்டால் போர்த்தப்பட்டுத் தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. இதைப் பூசியவன் திருமலை மன்னனாவான்.

திருக்கல்யாண மண்டபம்

கம்பத்தடி மண்டபத்திற்குக் கிழாகத் திருக்கல்யாண மண்டபம் என்னும் திருவாசி மண்டபம் அமைந்துள்ளது. இரண்டு குதிரைகள் தேரை இழுத்துக்கொண்டு செல்வது போல இம்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தேரின் இரு சக்கரங்களும் கல்லால் வடிக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத் தூண்களில் சிற்பங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலான சிற்பங்கள் திருவிளையாடற் காட்சிகளைச் சித்தரிப்பனவாக உள்ளன.

திரிபுராந்தகர், காளிங்க நர்த்தனர், ஆதிசேடன், மயில் வாகனர், வராகமாகிப் பாலூட்டிய பெருமான், மானுக்குப் புலிப்பால் அருத்திய பேராளன், வேடன் பன்றியை வீழ்த்தல், ரதியும், மன்மதனும் அணைத்துக் கொண்டுள்ள நிலை, இரணியன் ஆகம் கீண்டல், அரவுகள் இரண்டு பின்னிப் பிணைந்துள்ள காட்சி, நாயக்க மன்னர் சிலர்—என்று பல சிற்பங்கள் தூண்களில் அமைந்துள்ளன.

சிவபெருமானுடைய திருவிளையாடல்களுள் 'புலியின் முலைப்பாலைச் சிவபெருமான் புல்வாய்க்கன்றுக்கு அளித்தருளியதாக' ஒரு விளையாடல் கூறப்படுகிறது. அது இங்குள்ள 6-வது கற்றூணில் சித்தரிக்கப்பட்டுள்ளது. புலியைக் கொண்டு புல்வாயுருவிற்குப் பாலருத்திய வண்ணம் அச்சிற்பம் அமைந்துள்ளது.

இதே போன்று பன்றிக்குட்டிகளுக்குத் தாயாகிப் பாலளித்த திருவுருவமும் மற்றொரு தூணிலே காணப்படுகிறது. இவ்விரு சிற்பங்களும் மதுரைப் புதுமண்டபத்திலும் காணப்படுகின்றன.

இம்மண்டபத்தில்தான் ஊஞ்சல் திருவிழா நடைபெறுகிறது. இதற்கருகில் யானை கட்டும் தறியொன்றும் உள்ளது.

மண்டபத்தின் விதானப்பகுதியில் நான்கு இடங்களில் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. சிறுசிறு கட்டங்களுக்குள்ளாக அச்சிற்பங்கள் அமைந்துள்ளன.

இதற்கருகிலேயே வசந்த மண்டபமும், குளமும், அமைக்கப்பட்டிருக்கின்றன. லெட்சுமி தீர்த்தத்திற்குப் போகும் பாதையில் அமைந்துள்ள வசந்தமண்டபம் இன்று நந்தவனம் என்று அழைக்கப்படுகின்றது.

'இங்குள்ள இரண்டு உருவங்களில் ஒருவர் முத்தம்பல முதலியாராக இருக்கக்கூடும் என உறுதி செய்யப்பட்டுள்ளது. இம்மண்டபம் சில மர உருவச் சிற்பங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கோயிலின் உள்ளே இருக்கும் உருவச் சிற்பங்களே இங்கும் மரச் சிற்பங்களாகக் காட்டப்பட்டிருப்பதால், இவை கோயில் திருப்பணி செய்யும்போது வழிபாடு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும், இந்தச் சிற்பங்கள் இன்று மிகவும் பேண வேண்டியனவாகும்.'[2]

இராணி மங்கம்மாள் : *(கி. பி. 1689 - 1706)*

இராணி மங்கம்மாள் தன் பேரனான விசயரங்கச் சொக்கநாத நாயக்கன் சார்பாக 17 ஆண்டுகள் மதுரைப் பெருநாட்டை திருச்சியில் இருந்து ஆட்சிபுரிந்து வந்தார். இவர் குளம் வெட்டி வளம் பெருக்கினார்; சோலைகளை அமைத்தார்; சாலைகளைச் சீராக்கினார்; நிலதானம் செய்தார்.

இவர் திருப்பரங்குன்றத்தில் கட்டிய மண்டபம் ஆஸ்தானமண்டபம் என்றழைக்கப்படுகிறது. கோயில் நுழைவில் முதல் மண்டபமாக இது அமைந்துள்ளது. மண்டபத்தின் மேற்பகுதியில் பல சுதையுருவங்கள் உள்ளன. (சுதையுருவங்கள் பகுதியிற் காண்க) நுழைவாயிலில் பத்துத் தூண்கள் காணப்படுகின்றன. வாயிலின் இருபுறமும் இரண்டு குதிரைகளும், இரண்டு யாளிகளுமாக நான்கு குதிரை வீரர்களின் சிற்பங்களும், நான்கு யாளிகளும் அமைக்

2. Ibid. p. p. 313.

கப்பட்டுள்ளன. வலப்புறமுள்ள யாளித்தூண்களில் இரண்டு யாளிகள் ஒன்றையொன்று தும்பிக்கையை இழுத்துக்கொண்டு முரணுவதாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் கீழே கஜலெட்சுமியின் உருவமுள்ளது. கஜலெட்சுமி 4 கைகளுடன் காட்சியளிக்கின்றார். மேலிரு கைகளிலும் மலர் ஏந்தியுள்ளார். கீழ் வலம் அபயமும், கீழ் இடம் வரதமும் காட்டுகிறது.

வலப்புறமுள்ள கஜலெட்சுமியின் கைகள் உடைந்து விட்டன. இதேபோன்று இடப்புறமுள்ள யாளித் தூண்களுக்கு அடியிலும் இரண்டு அடியவர்கள் அமர்ந்து கைகளை அஞ்சலித்த நிலையில் உள்ளனர். இருவருக்கும் இரண்டிரண்டு யானைகள் தம் தும்பிக்கையை உயரத் தூக்கி நீர்த்தெளிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

நாயக்கர் காலத்துப் போர்வீரர்களையும் இந்தத் தூண்களில் சித்திரித்துள்ளனர். இருபுறமுள்ள நான்கு குதிரைகள் மீதும் நான்கு போர்வீரர்கள் அமர்ந்திருப்பதைக் காணலாம். கைகளில் கத்தியும், கேடயமும் கொண்டு ஒரு வீரன் குதிரைக்குக் கீழே நின்று கொண்டிருக்கின்றான். அவனுடைய முகத்தில் அச்சத்தின் சாயல் தெரிகிறது. குதிரை மீதமர்ந்திருப்பவனோ இடையில் குறுவாள் ஒன்றைச் செருகியுள்ளான். வலக்கரத்தில் கத்தியை ஓங்கிய நிலையில் எவரேனும் போருடற்றத் தயாரா என்று அழைப்பதைப் போல அவனுடைய பார்வை அமைந்துள்ளது. குதிரையின் கடிவாளத்தை மிக அலட்சியமாகப் பிடித்துள்ளான். மற்றொரு புறம் ஈட்டியை ஏந்திக் கொண்டு ஒருவீரன் குதிரையில் அமர்ந்துள்ளான். இருதூண்களுக்கு அடியிலும் சிறுசிறு புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

வாலியும், சுக்கிரீவனும் கைகளைக் கோர்த்துக் கொண்டு போர் செய்யும் காட்சி, வீரர்கள் ஓடும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. நீராடும் மகளிரிடமிருந்து கண்ணன் ஆடைகளைத் திருடி மரத்தின் மீது ஏறிக்கொள்ளப் பெண்ணொருத்தி நாணத்தை விடுத்துப் பிறந்த மேனியோடு மரத்தின் மீது ஏறுவதைப் போன்றும், இன்னொரு பெண் பிறந்த கோலத்தோடு,

'கண்ணா' என் சேலையைத் தா!' என்று கெஞ்சுவதைப் போன்றும் சிற்பம் அமைந்துள்ளது.

இத்தூணின் பின்புறம் புலிக்கால் முனிவர் சிவலிங்கத்தைப் பூசிக்கின்ற நிலை காட்டப்பட்டுள்ளது. இராமர், அர்த்தநாரி, கொடிப்பெண் ஆகியோர் சிற்பங்களும் மண்டபத்தின் வாயில் தூண்களில் அமைந்துள்ளன.

இம்மண்டபம் 116 அடி நீளமும், 94 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. 48 தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணும் 25 அடி உயரம் கொண்டவை. இத்தூண்களனைத்தி லும் நாயக்கர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. துவார பாலர்கள், மகிஷாசுரமர்த்தனி, நடனகணபதி, திருமால், அரசி மங்கம்மாள், விசயரங்கச் சொக்கநாதர், தெய்வானை நாச்சி யார் திருக்கல்யாணக் காட்சி, சிவபெருமான், ஆடல்வல்லான், கோதண்டராமன், ஆதிசேடன், நடராசர் தாண்டவம், பத்ர காளி ஆகியோர் சிற்பங்கள் இங்கு அணி செய்கின்றன.

தூணில் உள்ள சிற்பங்களுள், கருப்பண்ண சுவாமியின் சிற்பமும் ஒன்றாகும். இரண்டு கரங்கள்; வலக்கையில் அரி வாளும், இடக்கையில் தண்டமும் ஏந்தியவராக இவர் காணப் படுகிறார். தலையில் கொண்டை போடப்பட்டுள்ளது. இந்தத் தூணைச் சிறுகோயிலாகக் கட்டிப் பக்தர்கள் இப்போது வழி பட்டு வருகின்றனர். இச்சிற்பத்திற்கு எதிரில் ஒருபெண் வணங் கிக் கொண்டிருப்பதைப் போன்ற சிற்பமும் உள்ளது.

இக்கோயில் தினசரி நைவேத்திய வழிபாட்டுக்காக நாளொன்றுக்கு 60 மி. லி. நல்லெண்ணெய்யும், மாத மொன்றுக்கு ஒண்ணே காலரைக்கால்படி அரிசியும் கோயில் நிர்வாகத்தினர் தருகின்றனர் இப்போது கந்தசாமி பிள்ளை வகையறாவினர் இதற்குப் பூசாரிகளாக இருந்து வழிபாடு நடத்தி வருகின்றனர்.

பத்ரகாளி

சுவாலை மகுடம் காணப்படுகிறது. எட்டுக் கரங்கள்; அக் கரங்களில் சூலம், கேடயம் முதலிய ஆயுதங்கள் காணப்படு

8343

கின்றன. கபாலம் ஏந்தியுள்ளாள். கணுக்கால் வரை ஆடை காணப்படுகிறது. கால்களில் கழலும், பாடகமும் உள. இடது காலை முன்னே ஊன்றி வலது காலைப் பின் வைத்துள்ளாள். பத்ரகாளியின் பளுவைத் தாங்கமாட்டாமல் கீழே சிலர் சுமையால் அழுந்துவதைப் போன்ற தோற்றம் சித்தரிக்கப் பட்டுள்ளது.

சிவ தாண்டவம்

ஜடாபாரத்துடன் காட்சியளிக்கின்ற சிவபெருமான் முயலகன் மீது இடக்காலை ஊன்றி வலக்காலை அதிரவீசி ஆடுகின்றாராக நிற்கின்றார். 10 கரங்கள், வலதுகரங்களில் தமருகம், மழு, கத்தி. அபயம்; இடக்கரங்களில் விடைக்கொடி, அனல், மான், கேடயம், கஜஹஸ்தம் ஆகியன கொண்டுள்ள நிலையில் உள்ளார். இச்சிற்பக் குழுவில் காரைக்காலம்மையார் கூனிக்குறுகிய வடிவத்தோடு உடலெல்லாம் தளர்ந்தவராகச் காணப்படுகின்றார். பூதகணமொன்று குடமுழா வாசிக்கிறது. நந்தி மத்தளம் கொட்டுகிறது. பக்கத்தில் நான்முகப் பெருமான் தாளம் தட்டுகிறார். கங்காளமூர்த்தியும் இந்த தூணில் உள்ளார்.

ஆதிசேடன்

நின்ற நிலையில் இரு கரங்களையும் கூப்பி வணங்கிய நிலையில் ஆதிசேடன் உள்ளார்.

நடராசன்

நான்கு கைகளுடன், முயலகன் மீது இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கியாடுகின்றாராகக் காட்டப்பட்டுள்ளார். மேல் வலக்கரத்தில் உடுக்கையும், மேல் இடக்கரத்தில் அனலையும் ஏந்தியுள்ளார் கீழ் வலக்கரம் அபயத்திலும், கீழ் இடக்கரம் வேழ முத்திரையிலும் உள்ளன இங்குள்ள முயலகனின் கண்கள் பிதுங்கிக் கொண்டிருப்பதைப் போன்ற தோற்றத் துடன் வடிக்கப்பட்டுள்ளது. தொடைவரையான ஆடையமைப்பு. ஆடல்வல்லானைச் சுற்றித் திருவாசிகையும் உண்டு.

வாயிற்காவலர்கள்

வலம்: நான்கு கரங்கள் உடையவராகக் காணப்படுகின்றார். மேல் வலக்கரத்தில் சூலமும், மேல் இடக்கரத்தில் பாசமும் உள்ளன. கீழ் வலக்கரம் தர்ஜனி முத்திரை காட்டுகிறது. கீழ் இடக்கரம் தண்டத்தில் ஊன்றிய நிலை.

இடம்: இவரும் 4 கரங்களோடு மேலிரு கரங்களில் சூலமும், பாசமும் ஏந்தியவராகக் காணப்படுகிறார். கீழ்வலக்கரம் தண்டத்திலும், கீழ் இடக்கரம் விஸ்மயத்திலும் உள்ளன.

தெய்வானை நாச்சியார் கல்யாணம்

திருப்பரங்குன்றம் - முருகப் பெருமான் தெய்வானையை மணந்த திருவிடமல்லவா? அதைக் காட்டும் அழகான சிற்பமும் இங்கு மிளிர்கிறது. இச்சிற்பத்துக்கடியில் நாயக்கர் காலக் கல்வெட்டும் உள்ளது. அதில்,

'தெய்வானை நாச்சியார் (கல்யாண)ம்,

என்று எழுதப்பட்டுள்ளது. இன்று இது வெளித்தெரியாவண்ணம் எண்ணெய்ப் பிசுக்கால் மறைந்து கிடக்கிறது.

இந்திரன் தெய்வானையை முருகனுக்கு நீர்வார்த்துக் கொடுக்கும் காட்சி : கீழே புடைப்புச்சிற்பமாக நான்முகன் தெய்வானை திருமணத்திற்காக அக்னி வளர்க்கின்றான். மேலேயிருந்து வானவர்கள் பூமாரி பொழிகின்றனர். இந்திரன் தனது வலது கரத்தால் கெண்டியில் இருந்து நீர் வார்த்துக் கொடுத்துத் தெய்வானையை முருகனுக்குத் தானம் செய்கிறான். மற்ற சிற்பங்களைக் காட்டிலும் இந்தச் சிற்பத்தில் தெய்வானை மிகவும் அற்புதமாக வடிக்கப்பட்டுள்ளார். மதுரையில் உள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் திருமணக் கோலத்தைப் போன்று இச்சிற்பமமைந்து காணப்படுகிறது.

தெய்வானைக்குச் செய்யப்பட்டுள்ள அலங்காரங்களில் முத்துக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதைப் போன்றே இந்திரனுக்கும், முருகனுக்கும் முத்து மாலைகளும், பதக்கங்களும் அணி செய்கின்றன. நாயக்கர்கள் முத்துக்களின் மீது கொண்ட மோகமும் புலப்படுகிறது. தெய்வானை தன்

இடக்கரத்தில் மலர் ஏந்தியுள்ளார். கீழ் வலக்கரத்தில் இந்திரன் வச்சிராயுதத்தைத் தாங்கி உள்ளான். கீழ் இடக்கரம் தொடை மீது வைத்துள்ள நிலை. முருகன் மேலிடக் கரத்தில் வச்சிரப் படை ஏந்தியுள்ளார். கீழ் வலக்கையைத் தெய்வானையின் கையோடுசேர்த்து, நீர்வார்த்துக் கொடுப்பதை ஏற்றுக் கொள்கின்றார்.

இச் சிற்பத்திற்கு நேரெதிரே தெய்வானையின் திருமணக் கோலத்தைத் தரிசித்துக் கொண்டிருப்பதாக ராணி மங்கம்மா, அவர் பேரன் விசயரங்க சொக்கநாதருடன் கைகளைக் கூப்பிக் கொண்டு உள்ளார். ஆடையைவிசிறி மடிப்பாக வைத்து அணிந் துள்ளார். கணுக்கால் வரை மறைக்கும் ஆடையமைப்பு, அவரிடம் முத்துமாலை காணப்படவில்லை. அரசியாக இருந்தும் தனக்கு முத்துக்களின் மீது மோகமில்லை என்பதைக் காட்டுவதாகத் தனது சிற்பத்தை இவர் அமைத்திருக்கலாம். முன் கைகளில் வளையங்களும் கைவிரல்களில் மோதிரங்களும் அணிந்துள்ளார். மார்பில் சிறு இடைவெளி கூட இல்லாமல் மேலாடையும்கீழாடை யும் சரியாக அணியப்பட்டுள்ளது. தலையில் கொண்டை போட் டுள்ளார். இவருக்கருகில், பேரரான விசயரங்கச் சொக்கநாதர் கும்பிட்ட நிலையில் காட்டப்பட்டிருக்கின்றார். கைகளிரண்டும் உடைந்துவிட்டன. ராணிமங்கம்மாளின் உருவச்சிற்பம் மதுரை யில் உள்ள நகராமண்டபத்தில் உள்ளதைப் போன்றே இங்கும் காணப்படுகிறது. இச் சிற்பத்தை வைத்தே இம்மண்டபம் இவரால் எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென ஊகிக்க முடிகிறது.

நடனகணபதி

நான்கு கரங்கள்; மேலிருகரங்களில் அங்குசத்தையும், பாசத்தையும், கீழிரு கரங்களில் தந்தத்தையும், மோதகத்தை யும் வைத்துள்ளார். பாசம் தலைகீழாகப் பிடிக்கப்பட்டுள்ளது.

மகிஷாசுரமர்த்தனி

மகிஷத் தலையின் மீது நின்று கொண்டிருக்கிறார். நான்கு கரங்கள்; மேலிருகரங்களில் சக்கரமும், சங்கும் உள்ளன. கீழ் வலக்கரம் அபயஹஸ்தத்திலும், கீழ் இடக்கரம் கட்யவலம்பித ஹஸ்தத்திலும் உள்ளன. காதுகளில் பத்ரகுண்டலங்கள் உள்ளன.

திருமால்

நின்ற நிலையில், நான்கு கரங்களுடன் தோற்றமளிக்கின்றார். மேலிரு கரங்களில் சக்கரமும், சங்கும் ஏந்திபுள்ளார். கீழ் வலக்கரம் வரதத்திலும், கீழிடக்கரம் கட்யவலம்பித ஹஸ்தத்திலும் காணப்படுகின்றன. இடுப்பு முதல் கணுக்கால் வரையான ஆடையமைப்பு. ஆடையில் மடிப்புகள் உள்ளன. காதுகளில் குண்டலங்கள் அணி செய்கின்றன.

அதிகாரநந்தி

நான்கு கரங்களுடன் நின்ற நிலையில் காணப்படுகின்றார். கீழிரு கரங்களும் கூப்பிய நிலையில் காணப்படுகின்றன.

இவற்றைத் தவிர இன்னும் சில சிற்பங்களை நாயக்கர் காலத்து தூண்களில் செதுக்த முற்பட்டுள்ளனர். ஆயின் அப்பணி முடிவுபெறவில்லை. 'சட்டை அப்பர்' என்று கல்வெட்டு எழுதப்பட்டுள்ள தூணொன்றில் சுவாலை மகுடத்துடன் நிர்வாண நிலையில் வலக்கரத்தில் சூலமும், இடக்கரத்தைத் திண்டின் மீதும் வைத்துள்ள சிற்பமொன்றும் உள்ளது. இச்சிற்பங்களைத் தவிர இன்னும் ஏராளமான சிற்பங்களும் இம்மண்டபத்தில் உள்ளன. அவற்றை விரிப்பின் பல பக்கங்களுக்கு மிகும். திருமால், ரிஷபாந்திகர், குழலூதும் கண்ணன், அடியார்கள் தலையில் திருவமுதேந்திச் செல்லல், பெண்கள் சாமரம் வீசுதல், இரணியன் ஆகத்தை நரசிம்மமூர்த்தி பிளக்கும் காட்சி, கொடிப் பெண், மயில் வாகனன், கோதண்டராமர், நாரதர், கஜசம்ஹாரமூர்த்தி, லிங்க பூசை செய்யும் அடியவர்கள், இரணியனைத் தனது மடியில் கிடத்தி, குடலையுருவி மாலையாக தரிக்கும் நரசிம்மர், யோக நரசிம்மமூர்த்தி ஆகிய சிறு சிறு சிற்பங்களும் இங்குள்ள தூண்களில் அமைந்துள்ளன.

மண்டபத்தின் விதானப் பகுதியிலும் சிறு புடைப்புச் சிற்பங்கள்- கட்டச் சிற்பங்களாக உள்ளன. இம்மாதிரியான விதானப் பகுதியில் பிற இடங்களில் ராசிகளும், நட்சத்திரங்களும் போடப்பட்டிருக்கும். ஆனால் இங்கு அவை காணப்படவில்லை. முனிவரொருவர் இருகாலும் கூட்டியமர்ந்திருக்க

அவருக்கு மேலே சிவலிங்க பூசை நடப்பது போல வடிக்கப்பட்டுள்ளது. இதைச் சுற்றி 28 கட்டச் சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் புலிக்கால் முனிவர், சிங்கம், புலி, ஆடு, குரங்கு, குதிரை, நாய், காளை, யானை, முனிவர் ஆகிய சிற்பங்கள் உள்ளன. இவ்வாறு கலைவண்ணத்தோடு திகழும் இந்த ஆஸ்தான மண்டபம் 'ஓய்வு இல்லமாகவும், பயன்பட்டிருக்கிறது. கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வீரர்கள் தங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்பத்தடி மண்டபத்திலிருந்து கோயிலின் மேற்குப் பக்கத்தில் ஒரு வழி அடிவாரம் வரை அமைந்துள்ளது. திருவிழாக் காலங்களில் இறைவனின் திருமேனி இவ்வழியாகத்தான் வீதியுலாச் செல்லும்.

ஆறுமுகப்பெருமான் சன்னதியில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் உருவச் சிலைகளும் உள்ளன. திலகவதி அம்மையாருக்கு நாயக்கர் காலத்துப் பெண்களைப் போல தலையில் வலது பக்கம் சாய்ந்திருப்பது போலத் தலைக் கொண்டை போட்டுள்ளனர்.

செந்திலாண்டவன் திருவடிவமும், பஞ்சலிங்கமும், சனி பகவானின் தனியுருவமும் உள்ளன. இக்கோயிலின் சிறப்பு இங்கு நவக்கிரகங்கள் இல்லை. பல நாயக்க மன்னர்களின் உருவச்சிலைகளும் இங்குள்ள மண்டபத் தூண்களில் உள்ளன.

சுதையுருவங்கள்

வீரப்ப நாயக்கர் கட்டிய கோபுரத்திலும், அரசி மங்கம்மாள் கட்டிய ஆஸ்தான மண்டபத்திலும்தான் சுதையுருவங்கள் காணப்படுகின்றன. கோபுரத்தில், புராணக்காட்சிகளை நினைவூட்டும் உருவங்கள் உள்ளன. அவற்றோடு விநாயகர், முருகன், பறவை, விலங்குகளும் காணப்படுகின்றன. ஏழு மாடத்திலும் மாடத்திற்கு இரண்டிரண்டு துவாரபாலர்கள் உள்ளனர்.

•

கிழக்குக் கோபுரப் பகுதியில் முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோரின் சுதையுருவங்களும், தவமுனிவர்களின் உருவங்களும் காணப்படுகின்றன. ஆண்டவனை அர்ச்சிக்கின்ற நிலையிலும் சிலர் காணப்படுகின்றனர்.

தெற்கு நோக்கிய பகுதியில் ஆயர்குலக் குழந்தையான கண்ணன் ஆயர் குலப்பெண்களின் சேலைகளை எடுத்துக் கொண்டு மரத்தின் மீது அமர்ந்துள்ள காட்சியும், அதைக் கேட்கும் நிலையில் பெண்கள் நிற்கும் நிலையும் ஏழாவது மாடத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மண்டபச்சுதைகள்

தெற்கு மண்டபத்தின் கொடுங்கைப் பகுதியில் பாம்பாட்டியொருவன் மகுடி ஊதிப் பாம்புகளை மயக்கும் நிலை கல்லிலேயே செதுக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேல் நாரதர், முருகன், தெய்வானை, துர்க்கை, கணேசர், சிவலிங்கம் ஆகியன சிறு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பல்லியொன்றும் ஊர்ந்து போவதைப் போலச் செதுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலாகப் பல சுதையுருவங்கள் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளன. சிவனுடைய தாண்டவம் முதலில் உள்ளது. சுவாலை மகுடத்துடன் எட்டுக் கைகளோடு அவர் காட்சியளிக்கிறார். அடுத்து ஆமை ஓட்டிற்குள் கஜசம்ஹார மூர்த்தியின் சுதையுருவம் உள்ளது. எட்டுக்

கரங்களோடு இவர் காட்சி தருகிறார். அடுத்துத் திருமால் நான்கு கரங்களுடன் நின்ற நிலையில் காணப்படுகின்றார். மேலிருகரங்களில் சக்கரமும், சங்கும்; கீழிருகரங்களில் அபயமும், வரதமும், கொண்டுள்ளார். இவருக்கு இருபுறமும் தேவியர் இருவர் உள்ளனர். வலப்புறமுள்ள தேவிக்கு நான்கு கரங்கள். மேலிருகரங்களில் மலர்களையும், கீழிரு கரங்களில் அபயமும், வரதமும் கொண்டுள்ளார். இடப்புறமுள்ள தேவிக்கு இரண்டு கங்கள் வலக்கரத்தில் மலர் உள்ளது. இடக்கரத்தைத் தொங்க விட்டுள்ளார்.

அடுத்து, தெய்வானையைத் தேவேந்திரன் திருமணம் செய்து கொடுக்கும் காட்சி. இந்த உருவத்திற்கு இருபுறமும் தும்புரு, நாரதர் இருவரும் யாழ் மீட்டிக் கொண்டிருப்பதைப் போன்ற காட்சி. தேவேந்திரனுக்கும், முருகனுக்கும் நான்கு கரங்கள் உள்ளன. கீழ் வலது கரத்தால் தெய்வானையை இந்திரன் நீரோடட்டிக் கொடுப்பது காட்டப்பட்டுள்ளது. முருகனும் தம் வலது கீழ்க்கரத்தால் தெய்வானையை ஏற்றுக் கொள்கின்றார்.

இதற்கடுத்தும் முருகன் திருவுருவம்; அவருக்கு இருபுறமும் வள்ளியும், தெய்வானையும் நின்று கொண்டு இருக்கின்றனர். இதற்கப்பால் அகத்திய மாமுனி முருகனை வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளார். இவையனைத்திற்கும் பெரிதாகச் சுதை யுருவங்கள் ஒருசேரக் காணப்படுகின்றன. மகிஷத்தின் மீது துர்க்காதேவி நின்று கொண்டிருக்கின்றாள். நான்கு கரங்கள். மேலிருகரங்களில் சங்கு சக்கரமுமுள்ளன. கீழ் வலக்கரம் அபயத்திலும், கீழ் இடக்கரம் கட்ய வலம்பித ஹஸ்தத்திலுமுள்ளன. துர்க்காதேவிக்கு வலப்புறம் நாரதர் கையில் வீணையோடு நின்று கொண்டிருக்கின்றார். அவருக்கருகில் முருகப் பெருமான் நிற்கின்றார். நான்கு கரங்கள்; மேலிருகரங்களில் வச்சிரப்படையும், சக்திப்படையும் உள்ளன. கீழ் வலக்கரம் அபயஹஸ்தத்திலும், கீழ் இடக்கரம் வரதத்திலும் உள்ளன. தெய்வானை நின்று கொண்டிருக்கின்றார். துர்க்கைக்கு இடப்புறம் பிள்ளையார் நடமாடும் பிள்ளையாராகக் காணப்படுகின்றார். நான்கு கரங்கள்; மேலிரு கரங்களில் அங்குசமும் பாசமும் உள்ளன. கீழ் வலக்கரத்தில் தந்தமும், கீழ் இடக்கரத்தில் மோதகமும் உள்ளன. பாசத்தைக் கீழ் நோக்கிப் பிடித்தவராக இவர்

காணப்படுகின்றார். இவருக்கருகில் சிவலிங்கம் கதையால் செய்யப்பட்டுள்ளது. மேலே வானவரிருவர் இருகரங்கூப்பி வணங்கிக் கொண்டிருக்கின்றனர். அடுத்து, மறுபடியும் முருகன் உருவம் காணப்படுகிறது. அவரைப் பார்த்தபடி அமரனொருவன் கைகட்டி வாய்பொத்திய நிலையில் நின்று கொண்டிருக்கின்றான். இனி, நான்முகனின் நான்கு கரங்களோடு கூடிய கதையாலாகியுள்ள உருவமும் காணப்படுகிறது. மேலிருகரங்களில் அக்கமாலையும் கமண்டலமும் ஏந்தியுள்ளார். கீழ் வலக்கரம் அபயத்திலும், கீழ் இடக்கரம் வரதத்திலும் உள்ளன. இவருக்கு இருபுறமும் இரண்டு தேவியர் நின்று கொண்டிருக்கின்றனர். அடுத்துக் காணப்படுவது மீனாட்சி — சொக்கநாதரின் திருமமணக் காட்சி. திருமால், அங்கயற் கண்ணியம்மையை ஆலவாயழகனுக்கு நீரோட்டிக் கொடுப்பது காட்டப்பட்டுள்ளது. திருமாலுக்கு நான்கு கரங்கள். மேலிரு கரங்களில் சக்கரமும், சங்கும் உள்ளன. கீழ் வலக்கரத்தால் மீனாட்சியை சொக்கநாதப் பெருமானிடம் நீர்வார்த்துக் கொடுக்கின்றார். அங்கயற்கண்ணியம்மை நாணமே உருவாக அங்கு நிற்கின்றார். சொக்கனாதப் பெருமான் நான்கு கரங்களோடு உள்ளார். கீழ் வலக்கரத்தால் மீனாட்சியை ஏற்றுக் கொள் கின்றார். மேல் இடக்கரத்தில் மான் ஏந்தியுள்ளார். கீழ் இடக்கரத்தை கட்ய வலம்பிதஹஸ்தத்தில் வைத்து மலரொன்றையும் பிடித்துள்ளார். இக்காட்சியை வானவர் வணங்குவதாகவும் காட்டப்பட்டுள்ளது. மீண்டும் சிவமூர்த்தம் தென்படுகிறது.

நான்முகன் அஞ்சலித்த நிலையில் உள்ளார். கடைசியாகச் சிவபெருமானுடைய ஊர்த்துவதாண்டவம் உள்ளது. இடக்காலை முயலகன் மீது ஊன்றி விரிசடை விரிந்தாட ஆடும் பெருமானாக அண்ணல் காணப்படுகிறார். பத்துக் கரங்கள். வலக்கால் இறைவன் முகத்திற்கு நேராகத் தூக்கிக் காட்டப்பட்டுள்ளது. இச்சுதையுருவங்களின் மேல் சிறுசிறு தேவ உருவங்கள் பல்வேறு வாத்தியக் கருவிகளை இசைப்பதைப் போன்று காணப்படுகின்றன. விமான அமைப்பு ஒவ்வொன்றும் கோயிலாகக் காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு: பழநியாண்டவர் ஆண்டியப்பர் கோலத்தில் காட்டப்பட்டுள்ளார். கழுத்தில் உத்திராட்ச மாலை உள்ளது.

நடுவில் ஆறுமுகப் பெருமான் மயில்வாகனத்தில் பன்னிரு கரங்களும் பாற்பட இயற்றிய பெருமானாக அமர்ந்திருக்கின்றார். இதற்கடுத்துச் சுகாசனமூர்த்தி நான்கு கரங்களுடன் காட்சி தருகின்றார். இங்கும் சில வானவர்கள் முருகனையும், சிவ பெருமானையும் வணங்குவதாகக் காட்டியுள்ளனர்.

மேற்கு: இப்பகுதியின் நடுநாயகமாக விநாயகப்பெருமான் விளங்குகின்றார். பெருச்சாளி வாகனத்தில் தம் இடது தொடையில் வல்லபையைத் தாங்கியுள்ளார். 10 கரங்கள், பாசம், மலர், தந்தம், கரும்பு, சக்கரம், ஆகியவற்றை ஏந்தியுள்ளார். இப்பகுதியிலும் சுகாசனமூர்த்தி உருவம் உள்ளது. அடியவரிருவர் தலையில் தட்டில் பழம், தேங்காய் கொண்டு செல்கின்றனர். மற்றொருவர் பழம் எடுத்துச் செல்கின்றார். இராமதூதனாகிய அனுமனும் தம் வலக்கரத்தை ஓங்கிய நிலையில் இங்கு காட்டப்பட்டுள்ளார். அவருக்கருகில் கருப்பணசாமி கையில் அரிவாள் ஏந்தியவராக நின்று கொண்டிருக்கின்றார்.

வழிபாடும் விழாக்களும்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் பாகுபாட்டுக்குட்பட்ட தமிழகத்தின் ஐந்து நிலப் பகுதிகளிலும் ஐந்து கடவுளர் தொல்காப்பியர் காலந்தொட்டு வழிபடப் பட்டு வந்துள்ளனர். ஒவ்வொரு கோயிலிலும் பல்வேறு வழி பாட்டு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற் கெனச் சைவநூல்களும், வைணவ நூல்களும் இன்னின்ன வழி பாடு இன்னின்ன காலங்களில் நிகழ வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றன.

வழிபாட்டு முறைகளிலும், தினசரி பூசை, நிமித்த பூசை, என்று பலவகை உண்டு. ஒவ்வொரு கோயிலிலும் அந்தந்தக் கோயிலில் உள்ள செல்வத்திற்கு ஏற்ற வண்ணம் பூசைகள் நடைபெறும்.

திருப்பரங்குன்றத்தில், ஆதிகாலத்தில் மதுரை அருகே உள்ள மாடக்குளத்தில் இருந்து சிவாச்சாரியார் ஒருவர் ஒற்றை யடிப்பாதை வழியாக இங்கு வந்து பனைமரத்தின் மீது சாரம் கட்டி வழிபாடு நடத்தியதாக இங்குள்ளோரிடம் தொன்று தொட்டுக் கதையொன்று வழங்கி வருகின்றது. அன்று ஒரு வேளை மட்டும்தான் வழிபாடு நடைபெற்றதாகவும் கூறு கின்றனர்.

ஆனால் இன்று தமிழகத்தின் ஏனைய சிவன் கோயில் களில் உள்ளதைப் போன்றே இங்கும் காரண ஆகமத்திலும் காமிக ஆகமத்திலும் வழிபாட்டு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. கந்தர்சஷ்டித் திருவிழாவின் போது மட்டும் குமார தந்திரத்தில் கூறப்பட்டுள்ள வழிபாட்டு முறைகள் மேற் கொள்ளப்படுகின்றன. முருகப்பெருமானை இந்தத் தலத்தில் சோமசுந்தரப் பெருமானுடைய அம்சமாகவே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு நாளும் ஆறுகால பூசை நடைபெறுகிறது. காலை சூரியோதயத்துக்கு முன் திருவனந்தல் நடைபெற்று

விடுகின்றது. ஆதிசைவர் எனப்படும் சிவாச்சாரியர்கள் மட்டுமே இங்கு வழிபாட்டு முறைகளை நடத்தி வருகின்றனர். வேறு எவரும் இங்கே பூசை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

விழாபூசை

சிவபெருமான், அம்மன், சூரியன் ஆகியோருக்கு மட்டும் இந்த பூசை நடத்தப்படும். காலை 7 மணியிலிருந்து 7 30 மணிக்குள் இது நடைபெறும்.

காலசந்தி

இப்பூசைக்குப் பின் காலசந்தி பூசை நடைபெறும். காலை 8 மணியில் இருந்து 8-30 மணிக்குள் இது நடக்கும். இப்பூசையின் போது எல்லா இறையுருவங்களுக்கும் பூசை செய்யப்படும்.

திருக்கால சந்தி

இது காலசந்தி பூசைக்குப் பிறகு 10-30 மணியில் இருந்து 1-மணிக்குள் நடை பெற்று முடியும். சிவபெருமான், அம்பாள், சுப்பிரமணியர், உற்சவமூர்த்தி, விநாயகர் ஆகியோருக்கு இப் பூசையின் போது அபிஷேக தீபாராதனை நடத்தப்படும்.

உச்சிக்காலம்

உச்சிவேளையில் நடைபெறும் பூசை இது. 11-30 மணியில் இருந்து 12 மணிக்குள் இது நடந்துவிடும். சிவன், அம்பாள், விநாயகர், துர்க்கை, சுப்பிரமணியர், உற்சவமூர்த்தி ஆகியோருக்கு இந்த பூசை நடத்தப்படும். காலை 5-30 மணிக்குத் திறக்கப்பட்ட கோயில்களின் திருக்கதவுகள் இப்பூசை நடைபெற்று முடிந்ததும் சாத்தப்படும்.

சாயரக்ஷை

உச்சி காலப் பூசைக்குப் பிறகு மீண்டும் மாலையில் சாயரக்ஷை பூசை 5 மணிக்கு ஆரம்பம் ஆகும். இப்பூசையின் போது எல்லா சுவாமிகளுக்கும் பூசை செய்யப்படும்.

அர்த்தஜாமம்

இறுதியாக அர்த்தஜாமபூசை நடைபெறுகிறது. இரவு 9 மணியில் இருந்து 9-45க்குள் இது நடைபெறும். சிவன்,

அம்பாள், விக்னேஸ்வரர், சுப்பிரமணியர், உற்சவர் ஆகியோருக்கு இந்த நேரத்தில் பூசைகள் செய்யப்படும்.

பள்ளியறை

இதன் பின் இரவு 9-45 மணிக்குத் திருப்பல்லக்குக் கிளம்பிப் பள்ளியறையை அடைகிறது. அங்கு தீபாராதனையோடு பூசைகளை முடிக்கின்றனர்.

முருகப்பெருமானுக்கும், இங்குள்ள மூர்த்தங்களுக்கும் திருமுழுக்கு நடத்தப்படுவதில்லை. முருகன் கையில் வைத்துள்ள வேலுக்கு மட்டுமே எல்லாவிதமான அபிஷேகங்களும் (நீர், பால், பஞ்சாமிர்தம்) நடைபெறுகின்றன. மற்றமூர்த்தங்களின் மீது எண்ணெய்க் காப்பும், புனுகும் சாத்தப்படுகிறது.

திருவிழாக்கள்

தமிழ் நாட்டில் திருவிழாக்கள் இல்லாத திங்களே இல்லை எனக் கூறிவிடலாம். திருவிழாக் காலங்களில்தான் மக்கள் தங்களை மறந்து, தங்கள் கவலைகளை மறந்து அவ்விழாக்களில் ஈடுபடுகின்றனர். மதுரையைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு வீதியும், ஒவ்வொரு மாதத்தின் பெயரைப் பெற்று அந்த மாதத்தில் நடை பெறக்கூடிய திருவிழாக்களை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. (சித்திரைவீதி, ஆனி வீதி, ஆடி வீதி, ஆவணிமூலவீதி, மாசிவீதி) திருப்பரங்குன்றம் கோயிலில் ஒவ்வொருமாதமும் விழாக்கள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன.

சித்திரை

சித்திரைத் திங்களில் முருகன் கோயிலில் ஒரு நாள் திருவிழா நடைபெற்றாலும், இது முக்கியமான திருவிழாவாக நடத்தப்படுகிறது. ஏனென்றால் இந்த மாதத்தில்தான் மதுரையில் அங்கயற்கண்ணியம்மைக்கும், ஆலவாய் இறைவனுக்கும் திருமணம் நிகழ்வுறும். இந்தத் திருமண விழாவைக் காண தமிழகம் முழுவதுமிருந்து ஆண்களும், பெண்களும் இலட்சக் கணக்கில் கட்டுச்சோற்றைக் கட்டிக் கொண்டு மதுரை வந்து சேர்வர்.

தன்னுடைய தந்தைக்கும், தாய்க்கும் நிகழக்கூடிய இந்தத் திருமணத்திற்கு முருகப்பெருமான் பாண்டிய மன்னனாக இங்கிருந்து கிளம்பிச் சென்று திருமணத்திலும் கலந்து கொள்கின்றார். அந்தமுறை இன்றும் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. ஒருநாள் திருவிழாவுக்காக முருகன் இங்கிருந்து கிளம்பிச் சென்றாலும், மீனாட்சியம்மன் கோயிலில் இருந்து திரும்பி மீண்டும் இங்கே வர நான்கு நாட்களாகும்.

வைகாசி விசாகம்

வைகாசி விசாகத்திருநாள் தமிழ் நாட்டில் உள்ள முருகப் பெருமான் கோயில்களில் எல்லாம் சிறப்பான திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருவதைப்போல் இங்கும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த மாதத்தில்தான் வசந்த உற்சவம் 10 நாட்கள் இங்கு நடைபெறும். பத்தாம் நாள் பாலாபிஷேகம் நடத்தப்படும். அன்று வரும் பால்காவடிகளுக்கு அளவே கிடையாது. பால்குடத்தைத் தலையில் ஏந்திக்கொண்டு தங்கள் குறை தீர்க்க வேண்டும் என்று பக்தர்கள் பரவசமுற்று முருகப் பெருமான் சன்னதியை நோக்கிப் பல மைல்களுக்கு அப்பாலிருந்தெல்லாம் கால்நடையாகவே வருவர். சில நேரங்களில் பக்தி மேலீட்டால் தங்களை மறந்து ஆவேசமுற்றவர்களைப் போல முருகப்பெருமான் சன்னதியை நோக்கி ஓடோடியும் வருவர். இந்தக்காட்சிகளை எல்லாம் கண்டவர்கள் சங்க இலக்கியங்கள் கூறும் திருப்பரங்குன்றத்து விழாநிகழ்ச்சிகளுக்கே தங்களை மறந்து சென்று விடுவர். பக்தர்கள் தங்கள் உடம்பில் வேல்களை குத்திக்கொண்டு தேர்களை இழுத்து வரும் காட்சிகாண்போருக்கு எல்லாம் புல்லரிப்பை ஏற்படுத்தி விடும். பாலாபிஷேகத்தன்று இரண்டாயிரம் பால்குடங்களுக்கும் மேலாக அபிஷேகம் செய்யப்படும். இந்த அபிஷேகம் முழுவதும் இங்குள்ள மூர்த்தத்திற்குச் செய்யப்படுவதில்லை. கீழே உள்ள ஆறுமுருகப் பெருமானுக்குத் தான் அத்தனை உற்சவங்களும் இந்தத் திருநாளன்று நடைபெறும்.

ஆனி-ஊஞ்சல் திருவிழா

ஆனி மாதத்தில் பத்துநாட்கள் ஊஞ்சல் திருவிழா நடைபெறும். அரசி மங்கம்மாள் கட்டிய ஆஸ்தான மண்டபத்தில் ஊஞ்சலமைத்து உற்சவ மூர்த்திகளை அங்கெழுந்தருளச்

செய்து கோயிலில் உள்ள இரண்டு ஓதுவார்களும் ஊஞ்சற் பாட்டுக்களைப் பாடுவர். இந்த விழா இரவு 7 மணி முதல் 9 மணி வரை நிகழும். அதன்பின் சுவாமி உள்ளே கொண்டு வரப்படுவார்.

ஆடிக்கார்த்திகை

ஆடிக்கார்த்திகை தினத்தன்று இங்கு ஒருநாள்விழா நடத்தப்படுகின்றது.

புரட்டாசி

புரட்டாசித் திங்களில் 9 நாட்கள் நவராத்திரித் திருவிழா கொண்டாடப்படுகிறது. இந்தத்திருவிழா விசயநகரப் பேரரசர்களாலும், மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களாலும் தமிழகத்தில் பரப்பப்பட்டது. இத்திருவிழா நிகழும் நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகை அலங்காரம் செய்யப்படும். இறுதிநாளான ஆயுத பூசையன்று இங்கிருந்து உற்சவமூர்த்தி வெளிக்கிளம்பி கோயிலிலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியில் ஒன்றரைமைல் தொலைவில் உள்ள பசுமலைக்குச் செல்வார். 'அம்புபோடும் மண்டபம்' ஒன்று அங்கு இருக்கிறது. அந்த மண்டபத்தில் உற்சவமூர்த்தி இறக்கி வைக்கப்படுவார். பின் பூசைகள் நடத்தப்படும். பூசை முடிந்ததும் சிவாச்சாரியார் ஒருவர் அம்புவிடுவார்.

கந்தசஷ்டி

ஐப்பசித் திங்களில் ஆறுநாட்கள் கந்தசஷ்டித் திருவிழா நடைபெறும். இம்மாதத்தில் வரக்கூடிய சஷ்டிநாள் தமிழகம் முழுவதும் பெரும் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. இத்திருவிழாவின் போது ஒவ்வொரு நாளும் மாலை 6மணிக்கு உற்சவமூர்த்தி வெளிக் கிளம்பி வெளியில் உள்ள மண்டபங்களை எல்லாம் சுற்றி இரவு 10மணிக்கு உள் வந்தடைவார். ஆறாம் நாள் இரவு சூரசம்ஹார விழா நடைபெறும்.

கந்தசஷ்டி முடிந்து ஏழாவது நாளன்று தங்கக் கவசம் சாத்தப்பட்டு, இறைவனுக்குத் தயிரமுது படைத்து அவ்வமுதை கந்தசஷ்டி விரதம் மேற்கொண்டவர்களுக்கு வழங்குவர். இதன் பிறகுதான் அவர்கள் தங்கள் விரதத்தை முடித்துக் கொள்வர்.

கார்த்திகைத் திருவிழா

கார்த்திகைத் திங்கள் என்றவுடன் தீபத்திருவிழாதான் நம் கண்முன்னே வந்து தோன்றும். இந்த மாதத்தில் பத்து நாட்கள் 'தீபத்திருவிழா' இங்கு கொண்டாடப் பெறும். திருவண்ணாமலைத் தீபத்திருவிழாவைப்போல இங்கும் பக்தர்கள் கார்த்திகைத் தீபம் காண ஏராளமாகக் கூடுவர். தீபத்திருநாளின் எட்டாவது நாளன்று நிகழும் பட்டாபிஷேகக் காட்சி குறிப்பிடத்தக்கது. இறுதிநாளன்று சொக்கப்பனை கொளுத்தி மகிழ்வர்.

மார்கழி

ஒவ்வொரு நாளும் காலை 5-30 மணிக்குத் திறக்கப்படும் கோயில் திருக்கதவங்களை மார்கழித் திங்கள் முழுவதும் விடியற்காலை 4 மணிக்கே திறந்துவிடுவர். 4-30 மணிக்குள் பூசை நடந்துவிடும். இந்தத் திங்கள் முழுவதும் கோயிலின் உள்ளே எல்லா சன்னதிகளுக்கும் திருப்பள்ளி எழுச்சி பூசை நடைபெறும். இத் திங்களில் கடுங்குளிரையும் பொருட்படுத்தாது காலையில் குளித்துவிட்டு ஈர ஆடையோடு பக்தர்கள் இங்கு வந்து மனமுருக வணங்கிக் கொண்டிருப்பார்கள். இத்திங்களில் நடைபெறும் திருவாதிரை உற்சவமும் குறிப்பிடத்தக்கது. மாணிக்கவாசகர் தம் திருவெம்பாவையை இந்தத் திருநாளில் பாடிமுடித்தார் என்பதால் அவருக்கும் இங்கு பத்துநாட்கள் உற்சவம் நடைபெறுகிறது.

தை

இம்மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் இங்கு தெப்பத் திருவிழா நடைபெறும். இதற்காகத் தெப்பம் அமைத்து, பேருந்துநிலையத்தின் அருகே உள்ள தெப்பத்தில் உற்சவ மூர்த்தியைக் காலை, மாலை ஆகிய இருவேளையும் எழுந்தருளும்படிச் செய்வர்.

மாசி

மாசி மாதத்தில் ஒரேஒருநாள் மட்டும் மாசி மக விழா நடைபெறுகிறது.

பங்குனி

இம்மாதத்தில்தான் பெருந்திருவிழா - பிரமோற்சவத் திருவிழா பதினைந்து நாட்கள் இங்கு கொண்டாடப்படு கிறது. ஐந்தாம் நாள் நக்கீரர் யாகம் நடத்தப்படும். ஆறாம் நாள் சைவ சமய நிறுவனர் நாளாகவும், பத்தாம் நாள் சூரசம்ஹார நாளாகவும் நடைபெறும். 11-ஆம் நாளன்று பட்டாபிஷேகம் நடத்தப்படும். 12-ஆம் நாள் திருக்கல்யாணம் நடத்தப்படும்.

இந்தத் திருமணம் நடைபெறுவதற்கு ஐந்து மணிநேரத் திற்கு முன்பாகவே மதுரையிலிருந்து சொக்கநாதப் பெரு மானும், மீனாட்சியன்னையும் புறப்பட்டு வந்து திருப்பரங் குன்றத்திற்கு வரும் வழியில் மூலக்கரை என்னுமிடத்தில் உள்ள மண்டபத்தில் தங்கியிருப்பர். அந்த மண்டபத்திற்கு முருகப் பெருமான் தெய்வயானை சமேதராய் இங்கிருந்து புறப்பட்டுச் சென்று அம்மையையும் அப்பனையையும் வலம் வந்து வணங்குவார். அதன்பிறகு அனைவரும் அங்கிருந்து திருப்பரங்குன்றத்திற்கு வந்தவுடன் திருக்கல்யாணம் நடை பெறும். இத்திருமணம் நடந்து முடிந்தவுடன், மீனாட்சி சொக்க நாதர் இருவரும் மதுரை நோக்கிப் புறப்படுவர். இவர்களு டன் இங்குள்ள பதினாறுகால் மண்டபம் வரை முருகனும், தெய்வயானையும் கூடச் சென்று அங்கு இருவரையும் வணங்கி விடைபெற்றுக் கொள்வர். அப்போது முருகன் யானை வாக னத்திலும், தெய்வயானை பூப்பல்லக்கிலும் வருவர். பின் வீதிகளை எல்லாம் வலம் வந்து கோயிலடைவர்.

13-ஆம் நாள் 'பெரியதேர் உலா' விழா நடைபெறும்.

இப்படி ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதமும் திருப் பரங்குன்றத்தில் திருவிழாக்கள் நடந்தவண்ணமாகவே உள் ளன.

வாகனங்கள்

கோயில் வாகனங்கள் வெள்ளியாலும். மரத்தாலும் செய்யப்பட்டுள்ளன.

•

அவை: வெள்ளி சிம்மாசனம், வெள்ளி யானை, வெள்ளி ஆட்டுக்கிடாய், வெள்ளி பூதவாகனம். மர ரிஷப வாகனம், அன்ன வாகனம், ஆதிசேடன் வாகனம், காமதேனு வாகனம். தல விருட்சம் 'கல்லத்தி விருட்சம்' என்று வழங்கப்படுகிறது. நாயக்கர் காலச் சிற்பங்களடங்கிய தேர் ஒன்றும் கோயிலுக்குச் சொந்தமானதாக உள்ளது. இத்தேர் இப்போது சன்னதித் தெருவில் உள்ளது.

சமணர் குகைத்தளம்

திருப்பரங்குன்றம் சங்க காலந் தொட்டு பெரும் சைவத் தலமாக இருந்ததோடல்லாமல் சமணருக்கு இருப்பிடமாகவும் அமைந்து வந்துள்ளது. கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இங்கு சமணர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். திருப்பரங்குன்றத்தில் மட்டுமல்ல; மதுரையைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் எல்லாம் அவர்கள் படுக்கை ஏற்படுத்தி உறைந்து வாழ்ந்திருக்கிறார்கள். ஆனைமலை, மீனாட்சிபுரம், கீழ்க்குயிற்குடி, உம்மணாமலை, முதலான இடங்களை எல்லாம் சமணர்கள் தங்கள் இருப்பிடமாகக் கொண்டிருந்தனர். ஆனைமலை என்பது 'இவகுன்றம்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழிக் கல்வெட்டிலேயே குறிப்பிடப்படுவது அறியத்தக்கது.

பரங்குன்றமும் சமணர்களின் வாழ்விடமாக அமைந்ததை இங்குள்ள கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. மதுரையைச் சூழ்ந்து எட்டு மலைகள் இருந்ததாகவும், இவற்றில் சமணர்கள் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. சிலர் இவ்வெட்டுமலைகளிலுமே எண்ணாயிரம் சமணர்கள் இருந்தனர் என்றும் குறிப்பிடுவர். பெரியபுராணம், 'எண்பெருங்குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள்' என்று சமணர்கள் கழுவேறியதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. எண்பெருங்குன்றங்கள் பற்றித் தக்கயாகப் பரணியும்,

"வேதப் பகைவர் நம்முடம்பு
வீங்கத் தூங்கும் வெங்கழுவிற்
சேதப்படும் எண்பெருங்குன்றத்
தெல்லா வசோகும் எரிகெனவே"

தாழிசை : 218

எனக்கூறும்.

இதற்கு உரையெழுதிய பழையவுரையாசிரியர் எண் பெருங்குன்றங்களும் மதுரையைச் சூழ்ந்திருப்பன என்று குறிப் பிடுகின்றார். யானைமலை, நாகமலை, கணங்கமலை, செப்பு மலை, வெள்ளிமலை என ஐந்து மலைகளின் பெயர்கள் அதில் குறிப்பிடப்படுகின்றன. பிற மூன்று மலைகளின் பெயர்களுள்ள ஏடு செல்லரித்து விட்டதாம். சமணர்கள் தாங்கள் வழங்கி வந்த செய்யுளில் எட்டு மலைகளையும் குறிப்பிடுகின்றனர். அதில் திருப்பரங்குன்றம் முதற்கண் குறிப்பிடப்படுகிறது.

அச்செய்யுள் வருமாறு:—

> 'பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
> யருங்குன்றம் பேராந்தை யானை—இருங்குன்றம்
> என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்
> சென்றெட்டு மோபிறவித் தீங்கு'

இங்கு முதன்மையாகக் குறிக்கப்படும் திருப்பரங்குன்றத் தில் சமணத் துறவிகள் இருந்த குகைகளும், பாறையில் அமைக் கப்பட்ட கற்படுக்கைகளும், தமிழி எழுத்துக்களும் காலங்கால மாய் நின்று நிலவி வருகின்றன.

இதுபோன்ற படுக்கைகள் பற்றிய கருத்து வருமாறு:—

"மலைகளில் இயற்கையாக அமைந்த குகைத்தளங்கள் உள்ளன. இவற்றின் அருகில் நல்ல சுனைகள் இருக்கின்றன. ஊர்களில் இருந்து சற்று ஒதுக்குப் புறமான இடங்களில்தான் இவை இருக்கின்றன. பெரும்பாலான குகைத் தளங்களுக்குச் செல்வது கூடக் கடினம். இருப்பினும் இங்குச் சென்றால் இயற் கையின் எழில் மன அமைதியை அளிக்கும் வண்ணம் உள்ளது. இக்குகைகளில் பண்டு துறவியர் வசித்தனர். அவர்கள் பௌத்த சமயத்தையும், சமண சமயத்தையும் சேர்ந்தவர் என்பது சிலர் கருத்து. அவை அனைத்துமே சமணப் பெரி யோர்கள் வாழ்ந்த இடங்கள்தாம் என்பது என்சருத்து. சமணத் துறவிகளுக்கு அவ்வப்போது பேரரசர்களும், வணிகர் களும் பாழி அமைத்துக் கொடுத்திருக்கின்றனர். அதாவது குகையின் தளத்தை வழவழவென்று செதுக்கி அவர்கள் படுத் துறங்குவதற்கு ஏற்பச் செய்தளித்துள்ளனர். இவற்றைக்

குறிக்கவே கல்வெட்டுக்களைப் பொறித்து வைத்துள்ளனர். கல்வெட்டுகள் பெரும்பாலும் குகையின்மேல் பாறையின் முகப்பில் வெட்டப்பட்டுள்ளன. சில இடங்களில் வழவழப் பாகச் செதுக்கப்பட்ட படுக்கைகளின் தலையிலும் செதுக்கப் பட்டுக் காணப்படுகின்றன. இரண்டு இடங்களிலும் காணப் படுவதுண்டு.''[1]

திருப்பரங்குன்றத்தில் காணப்படும் சமணப் படுக்கை களைப் 'பஞ்சபாண்டவர் படுக்கை' என்று நகரமக்கள் வழங்கிவருகின்றனர். ஆனால் பஞ்சபாண்டவர்களுக்கும், இவற் றுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. மலையின் ஒருபுறத்தே இயற்கையாக அமைந்த இக்குகைத் தளத்தை இப்போது எளிதில் சென்றடையத் தொல்பொருள் ஆய்வுத்துறை படிக் கட்டுக்களை அமைத்துள்ளது. இந்தப் படுக்கைகள் கீழும், மேலும் ஒரே இடத்தில் அமைந்துள்ளன. எழுத்துக்களும் படுக்கைகளின் அருகிலேயே வெட்டப்பட்டுள்ளன. இப்படுக் கைகளின் தலைப்புறத்தே நான்கு தமிழிக் கல்வெட்டுக்கள் உள்ளன.

1. அந்துவன் கொடுபிதவன்
— S. I. I. Vol. XII - 48

2. ....கய..................
— S. I. I. Vol. XII - 49

3. ...மாறயத்து.........
S. I. I. Vol. XII-50.

4. 'எருகாடூர் ஈழகுடும்பிகன் போலாலயன் செய்தாஅ ஆய்சயன நெடுசாதன'
S. I. I. Vol. XII-51.

இத்தமிழிக் கல்வெட்டுக்களே தமிழகத்தில் இதுகாறும் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் மிகவும் தொன்மையானவை யாகும்.

இத் தமிழிக் கல்வெட்டுக்கள் இருவேறு காலத்தைச் சேர்ந் தவையாக உள்ளன. கிறித்துவிற்கு முற்பட்ட காலத்துக் கல்

1. கல்வெட்டியல், டாக்டர். இரா. நாகசாமி, பக். 13.

வெட்டும், சமகாலத்துக் கல்வெட்டும் இங்குள்ளன. இக்கல்வெட்டுக்களைப்படிப்பதிலும் ஒரு தெளிவானமுறை அறியப்பட்டுள்ளது. கிறித்துவிற்குச் சமகாலத்துத் தமிழிக் கல்வெட்டுக்களை வாசிக்கும் முறைகொண்டு அதற்கு முற்பட்ட காலத்துத் தமிழ் எழுத்துக்களைப் படித்துப் பொருள் கொள்ளல் இயலாது.

'மெய்யிலிருந்து புள்ளியை நீக்கிவிட்டால் எந்த வடிவு எஞ்சுகிறதோ அவ்வடிவே அகரத்தோடு கூடிய உயிர்மெய்யாக இலக்கணப்படிக் கொள்ளப்படும். ஆனால் இக்கல்வெட்டில் அம்மரபு இல்லை' அகரத்தோடு கூடிய உயிர்மெய்யைக்குறிக்க எழுத்தின் தலையில் ஒருகோடு இடப்பட்டுள்ளது. இதுவே ஆகாரத்தோடு கூடிய உயிர்மெய்யையும் குறிக்கும். உதாரணமாக 'க' என்ற எழுத்தின் தலையில் ஒரு குறுக்குக் கோடிருந்தால் அதை 'க' என்று தான் படிக்கவேண்டும் குறுக்குக் கோடு இல்லாவிடின் க்' என்று மெய்யாகத்தான் கொள்ள வேண்டும். 'க' விற்கும் 'கா' விற்கும் எழுத்தில் வேறுபாடில்லை. மொழி அறிந்தவர்கள் சொல்லறிந்து வேறுபடுத்தி வாசித்தல் வேண்டும். இவ்வாறு தலையில் கோடு இல்லாத வடிவை மெய்யாகவும், கோடு உள்ள வடிவை அகரமுடைய உயிர்மெய்யாகவும் படித்தால் தான் இக்கல்வெட்டின் பொருள் தெளிவாகக் கிடைக்கும். எழுத்துக்கள் இம்முறையில் எழுதப்பட்டன என்பதை முதன்முதலில் 'பட்டிப் புரோலு' என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டிலிருந்து டாக்டர் பியூலர் என்பார் கண்டு பிடித்தார். அக்கல்வெட்டுகள் பிராகிருதமொழியில் இருக்கின்றன. புத்த பிரானுடைய புனிதமான எலும்பு ஒன்றை வைத்திருந்த ஒரு கற்பேழையில் இவ்வெழுத்துக்கள் காணப்படுகின்றன. இப்பேழைகள் சென்னை அருங்காட்சியகதில் வைக்கப்பட்டுள்ளன. டாக்டர் பியூலரின் முறையைப் பின்பற்றி இக்கல்வெட்டுக்களைத் திரு. ஐ. மகாதேவன் அவர்கள் இப்போது படித்துள்ளார்.[2]

திருப்பரங்குன்றத்தில் இருவேறு காலக் கல்வெட்டுக்களும் பொறிக்கப்பட்டிருப்பதால் இடமுணர்ந்து அவற்றை வாசித்தல் வேண்டும்.

2. Ibid பக். 50-51.

•

'அந்துவான கொடுபிதாவான' என்று எழுதப்பட்டு இருப்பதை 'அந்துவன் கொடுபிதவன்' என்றே படித்தல் வேண்டும். இது கிறித்துவிற்கு 3, 2 நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்துத் தமிழிக் கல்வெட்டு.

இக்கல்வெட்டில் அந்துவன் என்றபெயர் குறிப்பிடப் படுவதால் இதனை ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக் கருத்துக்குக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் சங்க காலத்தில் அந்துவன் என்ற பெயருடைய சங்கப் புலவர்கள் சிலர் காணப்படுகின்றனர். அந்துவன் சாத்தன் என்பான் புறம் 71-இல் குறிப்பிடப்படுகின்றான். பதிற்றுப்பத்து ஏழாம்பத்தில் அந்துவன் என்ற பெயர் வருகிறது. புறம்: 359-இல் அந்துவன் கீரன் என்பான் குறிக்கப்படுகின்றான். நல்லந்துவன் என்பான் கலித்தொகை ஆசிரியர்களுள் ஒருவனாகவும் குறிக்கப்படுகின்றான். 'அந்துவன் பாடிய சந்துகெழுநெடுவரை' என்று மதுரை மருதனிளநாகனார் குறிப்பிடுகிறார். பரிபாடலில் 6, 7, 11, 20, ஆகிய பாடல்களைப் பாடியவரும் நல்லந்துவனார் என்ற புலவரே.

அதில் குறிப்பிட்டிருப்பது சங்ககாலத்து நல்லந்துவன் தானா? அல்லது இதில் எந்த அந்துவனாரை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது என்பதும் கேள்விக்குறியாக இருக்கிறது.

பரிபாடலில் குறிப்பிடப்படும் நல்லந்துவன் திருப்பரங்குன்றத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'திருப்பரங்குன்றின் கண் செவ்வேளைக் கண்டு மகிழத் திருமால் முதலிய தேவரெல்லாம் வந்து கூடுதலாலே அப்பரங்குன்றம் இமயக் குன்றம் நிகர்க்கும் எனவும், அப்பரங்குன்றில் உள்ள சுனை இமயத்தின் கண் உள்ள சரவணம் என்னும் ஒருநிலைப் பொய்கையினையே ஒக்கும் என்றும் குறிப்பிடுவதும் நோக்கத் தக்கது.

...கய..., மாறயத்து...என்று சிதைந்துபோன கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

'எருகாடூர் ஈழகுடும்பிகன் போலாலயன்
செய்தாஅ ஆய்சயன நெடுசாதன'

இது கிறித்துவின் சமகாலத்தைச் சேர்ந்த கல்வெட்டாகும்.

'ஈழகுடும்பிகன் என்றால் ஈழத்தில் இருந்து வந்த இல்லறத்தான் என்பது பொருளாகும். அவனுடைய பெயர் போலாலயன் அவன் செய்வித்த படுக்கையையும், நெடிய இருக்கையையும் குறிக்கிறது. சாதன என்றால் இருக்கை. சயன என்றால் படுக்கை.[3]

இதைத் திரு ஐ. மகாதேவன் ஆப், சயன், நெடுசாத்தன் என்போர் படுக்கை செய்ததாகப் பொருள் கொண்டுள்ளார்.

எருகாடூர் என்பது ஓர் ஊராகும். எருகாடூர்—அக்காலத்திலேயே பல குடும்புகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதில் ஈழக்குடும்பு என்பதும் ஒன்றாக இருக்க வேண்டும். அந்த ஈழக்குடும்பைச் சேர்ந்தவன்தான் போலாலயன். இது ஏற்புடையதாயின், பல நூறாண்டுகளுக்கு முன்பேயே பாண்டிய நாட்டில் ஊராட்சி முறை இருந்தமை தெளிவாகும்.

'ஈழவர் என்றசொல் இழு என்பதிலிருந்து தோன்றியிருக்கக் கூடும். மரத்திலிருந்து தேங்காயை இழுப்போர், பறிப்போர் என்னும் பொருளில் இச்சொல் தோன்றியிருக்கக்கூடும். முதலில் இச்சொல்லில் இழவர் என 'இ' குறிலாகவே இருந்திருக்க வேண்டும். இழு—இழவர் என.

திருப்பரங்குன்றத்தில் உள்ள கி.பி. முதல் நூற்றாண்டுக் கல்வெட்டில் 'இழகுடும்பிகன்' என்று ஒரு சொல் உள்ளது. 'இ' எழுத மூன்று புள்ளிகள் எழுதப்பட்டுள்ளன. மூன்று புள்ளிகள் குறிலை எழுதவே பயன்படுத்தப்பட்டன. இதே காலத்தில் எழுதப்பட்ட ஆனைமலைக் கல்வெட்டில் 'இது' என்ற சொல்லில் 'இ' மூன்று புள்ளியாகத்தான் எழுதப்பட்டுள்ளது. ஆதலின் 'இழகுடும்பிகன்' என்று படிப்பதே சிறந்தது. ஆதலின் பண்டைய சொல் 'இழவர்' என்பதே பொருத்தம் எனத் தோன்றுகிறது.'[4]

---

3. Ibid பக். 64.
4. 'கல்வெட்டு' காலாண்டிதழ் - 7.

•

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்ற புலவரும் சங்க காலத்து இருந்திருக்கின்றார். அகநானூற்றில் 149-ஆம் பாடலைப் பாடியுள்ளார். ஈழக்குடும்பு ஏற்கப்படுமாயின் கிறித்துவின் சமகாலத்திலேயே மதுரையும், மதுரையைச் சுற்றியுள்ள பல பகுதிகளும் பல்வேறு குடும்புகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

எழுத்தமைப்பு

கிறித்துவின் சமகாலக் கல்வெட்டான இக்கல்வெட்டில் எழுத்தின் வளர்ச்சி முறையைக் காணலாம். 'எ' முக்கோண வடிவில் எழுதப்பட்டுள்ளது. 'ரு' என்ற எழுத்து எழுத, ரகரத்தின் 'நடுவில்' கோடு போடப்பட்டுள்ளது. பிற கல்வெட்டுக்களில் ரகரத்தின் கீழேதான் கோடுகள் போடப்பட்டுள்ளன. 'ஈ' என்ற எழுத்து எழுதுவதற்கு 3 கோடுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பு 'ழ்'கரம் இந்தக்கல்வெட்டில் வளர்ந்த நிலையில் இருப்பதைக் காணலாம்.

இக்குகைத் தளத்தில் மழை பெய்தால் வடிகின்ற நீர் சமணர்களுக்குத் தொல்லை கொடுக்காது வெளிச்செல்லதன் பொருட்டுப் படுக்கைக்குப் பக்கத்திலேயே காடி வெட்டிவிடப் பட்டுள்ளது.

ஒரே இடத்தில் இரண்டு காலங்களையும் சேர்ந்த கல்வெட்டுக்கள் கிடைப்பதால் அதன் வளர்ச்சியை நாம் எளிதில் அறியமுடிகிறது.

குன்றத்துக் கோயில்கள்

திருப்பரங்குன்றத்தில் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட குடைவரைக் கோயில்களைத் தவிர, நாயக்கர் காலத்தில் எடுக்கப்பட்ட சின்னஞ்சிறு கோயில்களும் குன்றத்தைத் தெய்வீகக் குன்றமாக ஆக்கிக் கொண்டிருக்கின்றன.

சொக்கநாதர் கோயில்

குடைவரைக் கோயிலுக்குப் போகும் வழியில் சுவாமி சன்னதித் தெருவில் - இக்கோயில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கியுள்ளது. இது நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகும். நாயக்க மன்னர்களின் உருவச்சிலைகளும் உள்ளன. இக்கோயில் தூண்களில் விநாயகர் சிற்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

திருப்பரங்குன்றக் கோயில் கோபுரத்தில் காணப்படும் கல்வெட்டொன்றில் கிருஷ்ணவீரப்ப நாயக்கன் கோபுரத்திற்கு அருகில் விஸ்வநாத நாயக்கன் நினைவாக கல்மடம் ஒன்றை ஏற்படுத்தி, அதில் விநாயகருடைய உருவத்தையும் நிர்மாணித்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (M.E. R. 264/1942) அந்தச் சொக்கநாதர் கோயில்தான் இன்று சுவாமி சன்னதியில் இருப்பதாகக் கொள்ளலாம். பல்வேறு தோற்றங்களில் இங்கு கணேசருடைய உருவச்சிலைகள் உண்டு. ஒரு விநாயகர் நின்று கொண்டு வணங்கிக் கொண்டிருக்கின்றார். மற்ற 3 விநாயகர்கள் கைகளைத் தலைக்கு மேல் வைத்துள்ளனர். ஒருவர் குள்ள பூதத்தின் மேல் நர்த்தனம் புரிகின்றாராகக் காட்சியளிக்கின்றார். இன்னொரு விநாயகர் வலது கையில் தண்டம் வைத்துக் கொண்டுள்ளார்.

மற்றும் நான்முகன், திருமால், சந்திரசேகரர் ஆகியோருடைய உயரமான சிற்பங்களும் உள்ளன. இக்கோயில் மண்டபத்தில் யானை மீதமர்ந்தாராக முருகன், இந்திரன் சிற்பங்கள் காணப்படுகின்றன. கருவறை சதுர வடிவில் அமைந்துள்ளது. தூணொன்றில் சேரமான் பெருமாள் நாயனாரின் சிற்பமும் காணப்படுகிறது.

இக்கோயிலில் தனியாக அம்மன் ஆலயமுள்ளது. மீனாட்சி என்று அம்மன் அழைக்கப்படுகின்றாள். இக்கோயில்கருவறையைச்சுற்றிச் சிறுசிறு தேவ கோட்டங்கள் உள்ளன. அவற்றுள் தெற்கில் தெட்சிணாமூர்த்தி, மேற்கில் லிங்கோற்பவர், வடக்கில் துர்க்கை ஆகியோர் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

திருப்பரங்குன்றம் பெரியகோயிலுக்குச் செல்லும் முன்பாக இக்கோயிலை வணங்கிவிட்டுத்தான் பக்தர்கள் பெரிய கோயிலுக்கு வருவார்கள்.

பழநியாண்டவர் கோயில்

திருப்பரங்குன்றம் மலையின் வடபக்கத்தில், உச்சியிலுள்ள தர்க்காவிற்குச் செல்லும் வழியில் பழநியாண்டவர் கோயில் ஒன்றுள்ளது. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபத்துடன் இக்கோயில் காட்சியளிக்கின்றது. நாயக்கர் காலக் கட்டிட மரபைக் கொண்டு இது விளங்குகிறது. இங்கு அர்த்த மண்டபத்தில் திருமலை நாயக்கர் அஞ்சலித்த நிலையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இச்சிலையின் இடப்புறம் திருமலை மன்னரின் மனைவியின் உருவமும், அருகே அமைச்சரொருவரின் உருவமும் காணப்படுகின்றன.

இக்கோயிலையொட்டித் தென் புறத்தில் இயற்கையான சுனை ஒன்று காணப்படுகின்றது. இச்சுனையின் அருகிலுள்ள பாறையில் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாவீரர், பார்சுவநாதர் ஆகியோரின் உருவங்கள் காணப்படுகின்றன. இவற்றின் அடியில் அச்சிலைகளைச் செய்தவர்களின் பெயர்கள் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. வெண்பு நாட்டு குறண்டி என்ற ஊரிலிருந்த சமணப்பள்ளியிலிருந்து வந்த மாணவர் ஒருவரின் பெயர் ஒரு சிலையின் அடியில் பொறிக்கப் பெற்றுள்ளது. மற்றொரு சிலையின் அடியில் பலதேவன் என்ற சமணத்துறவி ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்குள்ள மகாவீரரின் உருவம் அர்த்த பரியங்காசனத்தில் முக்குடையின் கீழ் காட்சியளிக்கின்றது. நிற்கும் இணையரிகள் சுமந்த சிம்மாசனத்தில் மகாவீரர் அமர்ந்துள்ளார். இரு புறமும் இரண்டு இயக்கர்கள் சாமரம் வீசும் நிலையில் காட்சி

யளிக்கின்றனர். இங்குள்ள பார்சுவநாதரின் உருவம் நின்ற நிலையில் காணப்படுகின்றது. பார்சுவநாதரின் ஒருபுறம் அவரது இயக்கன் தர்னேந்திரனும் மற்றொரு புறம் இயக்கி பத்மாவதியும் காணப்படுகின்றனர். இங்குள்ள சமணச் சிற்பங்கள் கழுகு மலை சமணச் சிற்பங்களின் கலைப்பாணியைப் பின்பற்றி விளங்குகின்றன.

தீபத்தூண்

மலையடிவாரத்தில் இருந்து மலைக்குச்சென்றால் பாதி வழியில் 'தீபத்தூண்' ஒன்று இருப்பதைக் காணலாம். இந்தத் தூண் நாயக்கர் காலத்தது. நாயக்கர் காலத்துக் கல்வெட்டும் தூணிலேயே எழுதப்பட்டுள்ளது. கல்வெட்டுக்கு மேல் அனுமன் ஒரு கையை ஓங்கிக்கொண்டு முகத்தை இடதுபக்கம் திருப்பிக் கொண்டிருப்பதாகச் சிற்பமும் உள்ளது. இத்தீபத் தூண் ஆண்டவனுடைய தலையின் உச்சியில் நாட்டப்பட்டிருப்பதாகவும், இதில் புண்ணியவான்கள் அனைவரும் விளக்கேற்றலாம் என்றும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

அக்கல்வெட்டு:

1. உ. ஆண்டவ
2. ற் சிற உச்சி
3. மலையில்
4. (ப) கம்பம் தீ
5. நாட்டியதின்
6. பெரில் சகல
7. புண்ணிய வ
8. ான்களும் தி
9. பம் பொடலம்
10. சா சிவமயம்

இத்தீபத்தூணில் கார்த்திகை தோறும் ஊரிலுள்ள மக்கள் விளக்கேற்றி வருகிறார்கள்.

காசிவிசுவநாதர் கோயில்

திருப்பரங்குன்றத்து மலைபுச்சியில் இக்கோயில் அமைந்துள்ளது. கருவறை மேற்கு நோக்கியுள்ளது. உள்ளே சிவலிங்கம்

பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. கீழ்க்குடை வரையி லுள்ள முருகப்பெருமானின் கையில் உள்ள வேல் ஆண்டுக் கொரு முறை புரட்டாசித் திங்களில் இங்கு கொண்டு வரப் பட்டு, பலராலும் வணங்கப்படுகின்றது.

இக்கோயிலில் நுழையும் முன் உள்ள பெரிய பாறை யில் சமணச் சிற்பங்கள் உள்ளன. இங்கு பழங்காலத்தில் சமணப் பள்ளியொன்றும் இருந்திருத்தல் வேண்டும். பாறை யின்மீது பாகுபலியின் உருவமொன்றும், பார்சுவநாதரின் உருவமொன்றும் புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகின்றன. காசிவிசுவநாதர் கோயிலுக்கருகில் பாறையில் புடைப்புச் சிற்பமாக இருந்த சமண உருவங்களும், கல்வெட்டுக்களும் பிற்காலத்தாரால் அழிக்கப் பெற்றிருக்கவேண்டும்.

வெயிலுகந்த அம்மன் கோயில்

மழை பொய்ப்பதால் வாடிவிடக் கூடிய பயிர்களைக் காப்பதற்காக, அவற்றுக்கு வழி செய்யும்படி மக்கள் இந்த அம்மனை வழிபடுவர். திருப்பரங்குன்றத்திலும், விருதுநகரி லும் வெயிலுகந்த அம்மனுக்குக் கோயில்கள் உண்டு. இங்கு ஏரிக்கரையில் இக்கோயில் அமைந்துள்ளது. மாசித் திங்கள் முழுநிலாவுக்கு மறுநாள் இக்கோயிலில் விழா நடைபெறும்.

பிறகோயில்கள்

இக்கோயில்கள் தவிர மேலரத வீதியில் பாம்பாளம்மன் கோயிலும், கிழ ரதவீதியில் குருநாதன் கோயிலும், மலை யின் கிழக்கே பேச்சியம்மன் கோயிலும் அமைந்துள்ளன.

ஸ்கந்தர் மலை

மலையுச்சியில் இரு பாறைகளுக்கிடையே சமாதியொன் றுள்ளது. இங்கு சிக்கந்தர்பாட்சா என்ற பக்கிரி அடக்கமாகி யுள்ளார். இதனால் ஸ்கந்தருக்குச் சொந்தமான மலையைச் சிக்கந்தர்மலையாக்கிவிட்டனர். இங்கு நாடொறும் முகம்மதி யர்கள் வந்து வணங்கிச் செல்கின்றனர்.

காசித்தீர்த்தம்

இச்சுனை மலையுச்சியில் காசிவிஸ்வநாதர் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிறது. நக்கீரர் இறைவனிடம், காசித் தீர்த்

தத்தில் நீராடிய பலனையும், ஆண்டவனை வணங்கிய பலனையும் தமக்குத் தரவேண்டுமென வேண்ட இச்சுனை இறைவனால் உண்டாக்கப்பட்டது என்ற கதை வழங்கப் பட்டு வருகிறது. இச்சுனையில் பல வண்ண மீன்கள் உள்ளன.

சன்னியாசிக்கிணறு

கோயிலின் உள்ளாக அமைந்திருக்கும் கிணற்றைச், சன்னியாசிக்கிணறு என்றழைக்கின்றனர். இங்கிருந்துதான் அபிஷேகத்திற்கு நீர் எடுத்துச்செல்லப்படுகிறது.

பஞ்சாட்சரப்பாறை

மலையில் நக்கீரர் இருந்து பூசை செய்ததாக ஓர் இடத்தைக்கூறி அதற்குப் பஞ்சாட்சரப் பாறை என்று பெயரிட்டு வழிவழியாகக் கதையும் கூறி வருகின்றனர்.

சரவணப்பொய்கை

கோயிலுக்குக் கிழக்கே அரை கி.மீ. தொலைவில், 4 ஏக்கர் பரப்பளவில் இச்சரவணப்பொய்கை அமைந்துள்ளது. இக்குளத்தில் முருகப்பெருமான் ஆறுமுகப்பெருமானாகத் தோன்றினார் என்பர். ஒரே நேரத்தில் ஏராளமான மக்கள் இதில் நீராடலாம். ஆனால், இன்று ஊர்மக்கள் துணிதுவைக்கும் வெளுப்புக்கூடமாக இது மாறியுள்ளது.

சமாதிகள்

திருப்பரங்குன்றத்தைச் சுற்றிலும் சுவாமிகள் பலர் சமாதி நிலையை அடைந்துள்ளனர். அவர்களுள் சிவப்பிரகாசசுவாமிகள், ஆறுமுகசுவாமிகள், கட்டிக்குளம் மாயாண்டி சுவாமிகள் மூட்டை மாயாண்டி சுவாமிகள், மிளகாய்ச்சாமி என்ற சோமசுந்தரத்தம்மாள், சூட்டுக்கோல் இராமலிங்கசுவாமிகள் முதலானோர் குறிப்பிடத்தக்கோராவர்.

சந்தைகள்

வெள்ளிக்கிழமையன்று சந்தை கூடுகிறது. பலகிராமங்களில் இருந்தும் இங்கு மக்கள் வருகின்றனர். மாட்டுச்சந்தைக்காகத் தனியிடமொன்றும் கோயில் நிர்வாகத்தினரால் கட்டப் பட்டுள்ளது. பல பகுதிகளில் இருந்தும் மாடுகள் இங்கு விற்பனைக்காகக் கொண்டு வரப்படும்.

கல்வெட்டுக்களால் அறியப்பெறும் செய்திகள்

ஒருநாட்டின் வரலாற்றைக் காலவாரியாகப் பகுத்துணர் வதற்கு அந்த நாட்டிலும் அந்த நாட்டோடு தொடர்புடைய பிற இடங்களிலும் காணப்பெறும் கல்வெட்டுக்கள் பெரிதும் துணைபுரிகின்றன என்பது எவரும் மறுக்கவியலா உண்மை. கல்வெட்டுக்களோடு சமகால இலக்கியங்கள், புதைபொருட் சான்றுகள், நாணயங்கள், இன்னும் பிற சான்றுகளும் வர லாற்றை அறியத் துணைநிற்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்த அளவு கிடைத்துள்ள - வெளி யிடப்பட்டுள்ள கல்வெட்டுக்களின் வாயிலாகப் புதிய வர லாறு உருவாக்கப் பட்டிருக்கிறது. படியெடுக்கப்பட்ட எண் ணற்ற கல்வெட்டுக்கள் அச்சாகி வெளிவரும்போது இப்போது முடிவாகியுள்ள சில வரலாற்றுப் பகுதிகள் மாற்றம் பெறக்கூடும்.

பல்லவ வேந்தனாகிய மகேந்திரவர்மனுடைய ஆட்சிக் காலம் இதுகாறும் (கி. பி. 600-630) 30 ஆண்டுகள் தான் என்று பல்லவர் வரலாற்றை எழுதிய அறிஞர் பெருமக்களால் உணர்த்தப்பட்டு வந்தது. ''ஆனால் இப்போது கிடைத்துள்ள நடுகற்களின் மூலம் மகேந்திரவர்மன் 39 ஆண்டுகள் ஆட்சி செலுத்தியது தெரியவருகிறது. ஆதலால் அவன் கி.பி. 590-இல் பட்டத்திற்கு வந்திருத்தல் வேண்டும். அவன் தந்தை சிம்ம விஷ்ணு 33 ஆண்டுகள் ஆட்சியில் இருந்ததால் கி.பி. 556-இல் பட்டத்திற்கு வந்திருத்தல் வேண்டும் என்று பல்லவ வர லாற்றை இப்போது மாற்றவேண்டிய நிலை உள்ளது'' என்று டாக்டர் திரு. நாகசாமி 'செங்கம்நடுகற்கள்' நூலின் முக வுரையில் குறிக்கின்றார்.

திருப்பரங்குன்றத்தில் காணப்பெறும் மாறஞ்சடையனின் ஆறாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலமும், கிரந்தக்

கல்வெட்டில் குறிக்கப்பெறும் கலிஆண்டின் மூலமும் அவனுடைய ஆட்சியாண்டை நம்மால் அறுதியிட்டு உரைக்க முடிகிறது. கல்வெட்டுக்களில் பெரும்பாலும் அந்தந்த அரசர்களுடைய ஆட்சியாண்டே குறிப்பிடப் பெற்றிருக்கும். அது போன்றே இங்குள்ள வட்டெழுத்துக் கல்வெட்டும் மாறஞ்சடையனுடைய ஆறாவது ஆட்சியாண்டைக் குறிப்பிடுகிறது. அதற்கருகே துர்க்கை கருவறை மேல் நிலையிலுள்ள கிரந்தக் கல்வெட்டில் கலி ஆண்டு 3874 என்று குறிப்பிடப்படுகிறது.

இனி, மாறஞ்சடையன் யார் என்ற கேள்வி எழும்போது அதற்கு விடை பகர மதுரை அருகே உள்ள ஆனைமலையில் காணப்பெறும் இரண்டு கல்வெட்டுக்கள் துணைபுரிகின்றன. பராந்தக நெடுஞ்சடையனின் ஆட்சிக் காலத்தில் கலி 3871-ஆம் ஆண்டு அவனுடைய உத்தர மந்திரியாகிய மாறன் காரி ஆனை மலையில் திருமாலுக்காகக் கோயில் எடுத்துள்ளான்—இவன் கரவந்த புரத்தவன்; வைத்திய குலத்தைச் சேர்ந்தவன்.

அக்கல்வெட்டு வருமாறு:—

"கோமாறஞ் சடையற்கு உத்தர மந்திரி களக்குடி வைத்யன் மூவேந்த மங்கலப் பேரரையன் ஆகிய மாறங்காரி இக்கற்றளி செய்து, நீர்த்தளியாதேய் ஸ்வர்க்காரோகணஞ் செய்த பின்னை அவனுக்கு அனுஜந் உத்ரமந்த்ர பதமெய்தின பாண்டிமங்கல விசையரையன் ஆகிய மாறன் எஇனன் முகமண்டபஞ்செய்து நீர்த்தளித்தான்"

பராந்தகனின் அமைச்சனாகிய மாறன்காரி பணி முற்றுப் பெறும் முன்பாகவே இறந்து விடுகின்றான். அவனுக்குப் பின் அந்தப் பணியைத் தலைமேற் கொண்டு அவனுடைய தம்பி யாகிய மாறன் எயினன் முடிக்கின்றான். கடவுண் மங்கலம் செய்கின்றான்; முகமண்டபமும் அமைக்கின்றான். இதை வட்டெழுத்துக் கல்வெட்டு குறிப்பதைப் போன்று வலப்புறம் உள்ள கிரந்தக் கல்வெட்டும் குறிப்பிடுகிறது. அதில் 'பராந்த கன் என்ற பெயருடைய பாண்டியனின் மந்திரி மதுரகவி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கோமாறஞ் சடையன் என்பவன் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் என்பதும், மாறங்காரிக்கு மதுரகவி என்ற பெயரிருத்தலும் தெரியவரும்.

ஆனைமலையில் மாறங்காரி கலியாண்டு 3871-இல் திருமாலுக்காகக் கோயில் எடுத்தபோது, பராந்தக நெடுஞ்சடையனின் தண்டல் நாயமாகிய சாத்தன் கணபதி திருப்பரங்குன்றத்தில் சரியாக 3 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது கலி 3874-இல் சிவபெருமானுக்காகக் கோயிலை எடுத்திருக்கின்றான். இங்குள்ள கிரந்தக் கல்வெட்டு இந்த உண்மையை விளக்குகிறது. பாண்டியனின் செல்வாக்குப் பெற்ற இருபெருந்தலைவர்களில் ஒருவர் திருமாலுக்காகவும், மற்றொருவர் சிவபெருமானுக்காகவும் கோயில் எடுத்திருப்பது, அக்காலச் சமயப் பொறையைத் தெளிவுபடுத்துகிறது. [இல்லாவிடில், திருமாலுக்காகக் கோயில் எடுக்கும்போது சைவனாகிய தான் வாளாவிருக்கலாமா என்ற எண்ணத்தில் போட்டிக்காகத் தோற்றுவிக்கப் பட்டிருக்க வேண்டும்.] ஓரிடத்தில் தலைமையமைச்சன் கோயில் எடுப்பித்திருக்கின்றான். மற்றோரிடத்தில் தண்டல் நாயகம் கோயில் எடுத்திருக்கின்றான். இருவருமே கரவந்தபுர வாசிகள்.

ஆனைமலைக் கல்வெட்டில் குறிக்கப்பெறும் கலியாண்டு 3871-ஐ இவனது 2-ஆவது ஆட்சியாண்டாகக் கொண்டால் கி.பி. 765-இல் பாண்டியன் ஆட்சிக்கு வந்திருத்தல் வேண்டும். கலி 3874-இல் திருப்பரங்குன்றத்தில் சிவபெருமானுக்காகக் கோயில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் மூலம் பாண்டியனுடைய ஆட்சியாண்டைத் திட்டவட்டமாக அறியமுடிகிறது.

கிரந்தக் கல்வெட்டில் சம்புவின் கோயில் குறிக்கப்பட்ட போதும், இங்கு ஐந்து தெய்வங்களுக்கும் கோயில் எடுக்கப்பட்டுள்ளது. சிவனுக்கு முதலிடம் கொடுத்து மற்ற தெய்வங்களுக்கும் சிறப்பிடம் கொடுத்திருக்கின்றான். ஆனைமலைக் குடைவரையைக் குடைந்த சிற்பியே இந்தக் குன்றுக்கும் வந்திருக்கலாம். ஏனென்றால் இரண்டு கோயில்களும் ஒன்றுக்கொன்று மூன்றாண்டு இடைவெளியில் எழுந்துள்ளன.

வட்டெழுத்துக் கல்வெட்டில், 'சாத்தன் கணபதி திருத்துவித்தது திருக்கொஇலும் ஸ்ரீதடாகமும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிவபெருமானுக்காக முதலில் கோயில் எடுத்த பிறகு பிற சிற்பங்களை அவன் தோற்றுவித்திருக்கலாம் என்று உணர்த்தும் வண்ணம் 'திருத்துவித்தது' என்ற சொல்

கையாளப்பட்டுள்ளதெனலாம். ஸ்ரீ தடாகம் என்பது இன்று 'லெட்சுமி தீர்த்தம்' என்று வழங்கப்படுகிறது. இனி சாத்தன் கணபதியின் மனைவியாகிய நக்கன் கொற்றியும் துர்க்கா தேவிக்கும் ஜேஷ்டா தேவிக்கும் அங்கு தனித்தனியே கோயில் எடுப்பித்திருக்கின்றாள். இச் செய்தியும் வட்டெழுத்துக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

கோபுரமேறிக் கீழே விழுந்தோர்

சுப்பிரமணிய சுவாமி கோயில் உட்கோபுரத்தில் உள்ள கல்வெட்டு காலத்தால் மிகவும் பிற்பட்டதாயினும் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருப்பினும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி அக்கால மக்களது கோயிற் பணியாளர்களது கடமையுணர்வை இனிவரும் சந்ததியினரும் உணர்ந்து, இறைப்பணியே தலைப்பணியாகக்கொள்ளல் வேண்டுமென்பதைக் கூறாமல் கூறி நிற்பதால் இங்கு முதற்கண் குறிப்பிடப்படுகிறது.

சாலிவாகன சகாப்தம் 1714, பரிதாபி ஆண்டு, பங்குனி மாதம் 4 ஆம் நாள், புதன் கிழமை, சுக்கில பட்சமும் இரேவதி நட்சத்திரமும் சூலநாம யோகமும் பாலவா கரணமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ கோபால ராயரவர்கள் காலத்து, ஐரோப்பியர்கள் திருப்பரங்குன்றத்துக் கோயிலுள் புக ஆரம்பித்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கோயில் இறைப்பணியாளர் அனைவரும் ஒன்று கூடி வயிராவி முத்துக்கருப்பன் என்பவருடைய மகன் குட்டியைக் கோபுரத்திலேறிக் கீழே விழச் செய்தனர். அவனுக்கு ரத்தக் காணிக்கையாக நிலமும் கொடுக்கப்பட்டுள்ளது.

".........வெள்ளைக்காரர் பாளையம் வந்து இறங்கி சொக்கனாதர் கோவிலும் இடித்து, பழநியாண்டவன் கோயிலையும் இடித்து, ஊரையும் ஒப்புக் கொண்டு, ஆஸ்தான மண்டபங் கைக் கொண்டு, அட்சகோபுரவாசல் கதவையும் வெட்டி, கலியாண மண்டபத்துக்கு வருகிற பக்குவத்தில் திருவிழாவும் நின்று தலமும் ஊரும் எடுபட்டுப் போரதாயிருக்கிறது என்று, தலத்தாரில், சுந்தரபட்டர், தெய்வேந்திர பட்டர், குட்டி பட்டர், சிதம்பரம் பிள்ளை, விழுப்பாதராயர், ஆறுநிறுபாகக்காரர்

உள்ளிட்டாரும் நாட்டாண்மை முத்துக்கருப்பப் பிள்ளை உள்ளிட்டாரும் காவல் ஆறுகரைப்பேர் உள்ளிட்டாரும் கூடி, வயிராவி முத்துக்கருப்பன் மகன் குட்டியைக் கோபுரத்தில் ஏரி விழச்சொல்லி, அவன் விழுந்து பாளையம் வாங்கிப் போனபடியினாலே, அவனுக்கு ரத்தக் காணிக்கை பட்டயம் எழுதிக் கொடுத்தோம்.''

இக் கல்வெட்டின் மூலம் கி.பி. 1792-ஆம் ஆண்டு திருப்பரங்குன்றத்தில் நாட்டாண்மை வேலை செய்தவர் முத்துக்கருப்ப பிள்ளை என்பதும், கோயில் பட்டர்களாகச் சுந்தர பட்டர், தெய்வேந்திர பட்டர், குட்டி பட்டர், சிதம்பரம் பிள்ளை, விழுப் பாதராயர் ஆகியோர் பணியாற்றினர் என்பதும் அறியப்படுகிறது. மேலும் முத்துக் கருப்பன் மகன் குட்டிக்கு நிலம் கொடுத்ததோடமையாது, கோயிலில் இருந்து நாடொறும் அரைப்படி அரிசிச் சோறும் கொடுக்கவேண்டும் என்றும் அக் கல்வெட்டு கூறுகிறது.

இங்கு ஐரோப்பியர்களைக் கோயிலின் உள்புகவொட்டாது குட்டி கீழே விழுந்தான். இதைப் போன்ற செயல் திருவரங்கத்திலும் நிகழ்ந்திருக்கிறது. அங்கு இரண்டுபேர் வெவ்வேறு கோபுரங்களில் ஏறி, ஒரே நேரத்தில் கீழேவிழுந்து இறந்திருக்கின்றனர். கோயில் காரியம் சரிவர நடைபெறவில்லை என்ற காரணத்திற்காக இருவரும் கோபுரமேறித் தங்கள் உயிரைப் போக்கிக்கொண்டுள்ளனர்.

1. சுபமஸ்து ஸௌமியஷு தைய்மாச
2. ட வெள்ளிக்கிழமை னாள்ஸ்ரீர
3. ங்கநாத ஸ்வாமிக்குப் படித்
4. தரம் ஒன்றும் நடத்தாமல்
5. மிகவும் அநியாயம் பண்ணுகை
6. கயில் பொறுக்கமாட்டா
7. தெ இந்த திருக்கோபுரத்திலெ
8. லறி விழுந்து இறந்தகாலமெ
9. டுத்த அழகிய மணவாள தாச
10. ன் ஸ்ரீகார்யம் அப்பவய்யங்
11. கார் .....

இது முதற் கோபுரவாசலில் இடப்புறச் சுவரில் இருக்கிறது. அரங்கநாதப் பெருமானுக்குச் செய்யவேண்டிய படித்தரம் ஒன்றும் செய்யாததோடு அநியாயமும் செய்யத் தொடங்கியதால் அதைப் பொறுக்கமாட்டாமல் அழகிய மணவாள தாசன் ஸ்ரீகாரியம் அப்பவய்யங்கார் கோபுரத்திலேறித் தன்னுயிரைப் போக்கிக்கொண்டுள்ளார். இவரைப் போன்றே இன்னொருவரும் கோயில் காரியம் நடைபெறவில்லை என்று அரங்கநாதர் ஆலயத்தின் வெள்ளைக் கோபுரத்தின் மீதேறிக் கீழே விழுந்து உயிர்விட்டார். அழகிய மணவாளதாசன் பெரியாழ்வார் என்று கல்வெட்டில் அவருடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் இவ்விரு கல்வெட்டுக்களையும் காணலாம்.

இச்சான்றுகளின் மூலம் கோயில் நிர்வாகம் பொறுப்புடன் நடைபெற வேண்டுமென்பதில் ஒவ்வொருவரும் எத்துணையளவு கண்ணும் கருத்தும் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகும். வயிராவி முத்துக்கருப்பன் மகன் குட்டிக்கு மானியமாகக் கொடுக்கப்பட்ட நிலம் இன்றும் அவருடைய வழிமுறையினரால் அனுபவித்து வரப்படுகிறது.

குட்டியைப் போல மற்றொருவனும் இதே கோபுரத்தின் மீதேறிக் கீழே விழுந்துள்ளான். ஆண்டராபண முதலி என்பவரது மகன் எல்லப்பமுதலி. இவன் கோயிலின் சில உரிமைகளை நிலைநாட்டுவதற்காகக் கோபுரமேறிக் கீழே விழுந்து இறந்திருக்கின்றான். இவனுக்கும் ரத்தக்காணிக்கையாக நிலம் தரப்பட்டுள்ளது. (A. R. E. 260/1941-42).

இந்தச்செய்தியைக் குறிப்பிடும் கல்வெட்டு இன்று கோபுர நடைபாதையில் பதிக்கப்பட்டுக் கிடக்கிறது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் இதன் மீது நடந்து செல்கின்றனர். இப்போதே எழுத்துக்கள் சரியாகப் புலப்படவில்லை. இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக்கல்லில் கல்வெட்டுக்கள் இருந்த தடயமே இல்லாமல் மற்ற கற்களைப் போல இதுவும் மனிதர்கள் கால்பட்டுக் கால்பட்டு வெறும் கல்லாகி விடும். அந்தக்கல் வரலாற்றைப் பேசாமல் வாய்மூடிக் கல்லாகக் கிடக்கும். அதைப் பேணும் பொறுப்பு அறநிலையத் துறையைச் சேர்ந்தது.

•

திருப்பரங்குன்றம் கோயிலில் பாண்டியர், விசயநகரர், நாயக்கர் ஆகியோருடைய கல்வெட்டுக்கள் உள்ளன.

பாண்டியர்களில் மாறஞ்சடையன், கோனேரின்மை கொண்டான், சடையவர்மன் குலசேகரபாண்டியன், மாறவர்மன் திரிபுவனசக்கரவர்த்திகள் சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர், விக்கிரமபாண்டியன், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர் கல்வெட்டுக்களும், வீரப்பநாயக்கர், வரதப்பநாயக்கர், பொன்பரப்பின பெருமாள் கல்வெட்டுக்களும் உள்ளன.

பிற்காலப் பாண்டியர்களுடைய கல்வெட்டுக்களில் அவர்களுடைய ஆட்சியாண்டுதான் குறிப்பிடப்படுகிறது. சக ஆண்டோ, கலியாண்டோ காணப்படவில்லை. இங்கு, பாண்டியர்களின் கல்வெட்டுக்களில் சில மெய்க்கீர்த்திகளுடன் தொடங்குகின்றன. இம் மெய்க்கீர்த்திகளின் மூலம் எந்தப் பாண்டியன் என்பதை நம்மால் உறுதி செய்ய முடிகிறது.

இங்கு காணப்படும் மெய்க்கீர்த்திகள்

1. 'பூவின் கிழத்தி' — முதலாம் சடையவர்மன் குலசேகரன்
2. 'பூ மருவிய திருமடந்தையும்' — முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்
3. 'திருமலர் திருவும்' — இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்
4. 'திருமலர் மாது' — மாறவர்மன் விக்கிரம பாண்டியன்

முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன்

கி. பி. 1190 முதல் 1218 வரை ஆட்சி புரிந்தவன் மாறவர்மன் விக்கிரமபாண்டியனுடைய திருக்குமரனாவான். இவன் காலத்தில்தான் மூன்றாம் குலோத்துங்கன் பாண்டியநாடு புகுந்து பாண்டியனுடன் போரிட்டு மதுரையில் 'சோழ பாண்டியன்' 'திரிபுவன வீரதேவன்' என்னும் பட்டங்களைப் புனைந்து வீராபிடேகம் செய்து கொண்டான். குலசேகரனுக்கு 'இராச சேகர கம்பீரன்' என்னும் சிறப்புப் பெயரும் அந்நாளில் வழங்கி வந்தது. இவன் கல்வெட்டுக்கள் இவனுடைய 28-ஆவது ஆட்சி யாண்டிற்குப் பிறகு காணப்படவில்லை.

முதல் கல்வெட்டில் தன்னுடைய 9-ஆவது ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்ட சில கிராமங்களின் பெயர்களைக் குறிப்பிடு கின்றான். 13 ஆவது ஆண்டு 365-ஆவது நாள், 15-ஆவது ஆண்டு ஆகிய காலக் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. முதற் கல்வெட்டில், குலசேகரபுரம் என்ற ஊருக்கு விதித்திருந்த வரியைக் காளிங்கராயர் வேண்டுகோளின்படி நீக்கி, கோயிலில் இருந்த க்ஷேத்திரபால பிள்ளையார்க்கு நைவேத்தியம் செய்ய வேண்டுமென்று அரசாணையிட்டான். (A.R.E 243/1941-42)

15-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, 'பூவின் கிழத்தி' என்ற மெய்க்கீர்த்திப் பகுதியோடு தொடங்குகிறது. திருப்பரங் குன்றம் உடையார் கோயில் நிர்வாகத்தினர் குலசேகரபுரத் தார்க்கு நிலம் விற்பனை செய்ததை இக்கல்வெட்டு தெரிவிக் கிறது. (A.R.E. 240/1941-42)

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

கி.பி. 1216 முதல் 1238 முடிய மதுரைமாநகரில் முடி மன்ன னாக வீற்றிருந்து ஆட்சி புரிந்தவன். சடையவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சிக் காலத்திலேயே இளவரசனாக முடிசூடப் பெற்றவன். இவனுடைய மெய்க்கீர்த்தி, 'பூமருவிய திருமடந் தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப' என்று தொடங்குகிறது. இவன் காலத்தில் சோழநாட்டை மூன்றாம் இராசராசசோழன் ஆட்சி புரிந்தான். அவன் சோணாட்டைக் காக்கும் திறனில் லாததால் இருமுறை இவனுடைய படையெடுப்புக்கு ஆட்பட்டு இவ்வேந்தனால் சோழநாடு திருப்பிக் கொடுக்கப்பட்டு ஆண் டான். எனவே இவனுடைய கல்வெட்டுக்கள் இவனைச் 'சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியதேவர்' சோணாடு வழங்கி அருளிய சுந்தரபாண்டிய தேவர் எனவும் கூறுகின்றன.

இங்கு இவனுடைய 3, 5, 17 ஆகிய ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவனது 3-ஆவது ஆண்டில் மலைமண்டலத்தைச் (சேரநாடு) சேர்ந்த ஒருவன் திருப் பரங்குன்றம் உடைய நாயனார் கோயிலில் இரு விளக்குகள் எரிப்பதற்காக ஒரு பொன் பணம் வழங்கியுள்ளான். அந்தப் பணத்தைக் கோயில் சிவபிராமணர்கள் ஏற்றுக்கொண்டு

விளக்கெரிக்கச் சம்மதம் தெரிவித்ததை அக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு இப்போது இரும்புக் கம்பிகளால் மறைக்கப்பட்டுள்ளது. (A. R. E. 254/1941-42).

மற்றொரு கல்வெட்டும் இதே ஆண்டைச் சேர்ந்ததாக உள்ளது. தமிழ், கிரந்த எழுத்துக்களில் அக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. குலசேகரபுரம் என்ற ஊர்ச்சபையினரால் கோயிலுக்கு நிலதானம் வழங்கப்பட்டதை அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. (A. R. E. 245/1941-42).

5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு மெய்க்கீர்த்தியோடு தொடங்குகிறது. ஸ்ரீருத்ர மாகேஸ்வரர் என்பவரால் இரண்டு பொற்கொல்லர்களுக்கு இறைவனுக்கு வழிபாடு செய்வதற்காக நிலம் வழங்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. திருவுண்ணாழிகை நல்லூர் என்ற கிராமத்தையும் வழிபாட்டுக்காக எவ்விதப் பயனும் கருதாது பெரியநாயனார் குலசேகர தேவரின் இரண்டாவது ஆட்சியாண்டில் வழங்கப்பட்ட செய்தியையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. (A. R. E. 25/1941-42).

இன்னொரு கல்வெட்டு சிதைந்து நான்கு பகுதிகளாக உள்ளது. அக்கல்வெட்டில் இவனுடைய அமைச்சன் மழவராயனின் பெயர் குறிக்கப்படுகிறது. (A. R. E. 336/1981).

தன்னுடைய 17-ஆவது ஆட்சியாண்டின்போது, வீரதாவளத்தில் அமர்ந்துகொண்டு, கோயில் ஊழியர் ஒருவரின் மகளும், தேவரடியாளுமான ஒருத்திக்கு வீட்டுமனையொன்றும் வழங்கியுள்ளான். இதே கல்வெட்டில் ஆழ்வி ராஜகம்பீர விண்ணவதரையன் என்பவனுக்குக் குசக்காணிக்கையாக நிலமளித்ததும் கூறப்பட்டுள்ளது. (A.R.E. 242/1941-42)

இதற்குமுன், தன்னுடைய ஆட்சியாண்டு ஏழு, நாள் முந்நூற்றிருபத்தைந்தில் திருப்பரங்குன்றத்தின் தென்பக்கத்தில், பிரசன்ன தேவர் என்பவர் வேண்ட, 'சுந்தரபாண்டிய ஈஸ்வரமுடையார் கோயில்' என்னும் கோயிலையும் ஏற்படுத்யுள்ளான். இக்கோயில் இன்று உமையாண்டார் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இங்குள்ள கல்வெட்டின் மூலம் இவனுடைய மனைவி பெயர் உலகமுழுதுடையாள் என்பது தெரிகிறது. 'உலக முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளி' என்பது கல்வெட்டுப் பகுதி. இவன் மதுரோதைய வளநாட்டு மாடக்குளக்கீழ் மதுரைக் கோயில் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப்பீட மழவ ராயனில் எழுந்தருளி இருந்ததாகக் கல்வெட்டு தெரிவிக் கிறது. இவன் காலத்து, பாண்டிய நாடு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாடக்குளத்திற்குக் கீழ்பால் இம் மன்னனின் அரண்மனை இருந்ததாகவும், அங்கு 'மழவராயன்' என்ற அரியணையில் இவன் அமர்ந்திருந்து பிரசன்னதேவர் வேண்டுகோளைச் செவிமடுத்தான் என்றும் அக்கல்வெட்டில் தெரிவிக்கிறது.

மாடக்குளம் என்பது மதுரைக்கு மேற்கே உள்ள ஓர் இடம். இங்கு ஒரு குளம் உண்டு. 'மாடக்குளம் பெருகினால் மதுரைபாழ்' என்ற பழமொழியும் வழங்கிவருகிறது. இவ் விடத்திற்குப் புராணக்கதை யொன்றும் வழங்கிவருகிறது. வருணன் விட்ட கடல், நான்கு மேக வேந்தர்களால் குடித்துக் குறைக்கப்பட்டதாகவும், அப்பால் வருணன் கட்டளைப்படி மேகங்கள் பெய்த பெருமழையை நான்கு மேக வேந்தர்களும் நான்கு மாடங்களாகித் தடுத்ததாகவும், அதனால் அவ்விடம் மாடக்குளக் கீழ்மதுரை எனவும் பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

இக்கோயிலில் திருப்படி மாற்றுக்காக (தினசரி பூசை நிவே தனம்) நிலதானமும் செய்யப்பட்டுள்ளது. 'மலைக் குடிக்கோல்' என்ற நிலமளக்கும் கருவியும் இவ்வேந்தன் காலத்து வழக்கில் இருந்து வந்திருக்கிறது.

இக்கல்வெட்டின் மூலம் அறியப்பெறும் நாட்டுப் பிரிவுகள்

1. வீரநாராயணன் குளம் (குளம்)
2. புளிங்குன்றூரான சுந்தரபாண்டியபுரம்
3. மிழலைக் கூற்றத்து கீழ் கூற்று வெட்சி யூரான மும்முடிச்சோழநல்லூர்
4. மிழலைக் கூற்றத்து கீழ் கூற்று விளத்தூரான ஜெயங் கொண்ட சோழநல்லூர்

5. மிழலைக் கூற்றத்து நடுவிற்கூற்று புல்லுக்குடி
6. கீழ்வேம்பனாட்டுத் தச்சனூர்
7. மதுரோதய வளநாட்டு புறப்பரளை நாட்டு புத்தூர்
8. மதுரோதய வளநாட்டு கானக இருக்கை
9. திருமல்லி நாட்டுத் தடங்கிண்ணிச் சிற்றூர்
10. கீழ்ச்செம்பில் நாட்டாலங்குடி
11. அண்டநாட்டுப் பெருமணலூர்

சில பெயர்கள்

வெண்காடு தேவன்
குலசேகர மாதவராயன்
சுந்தரத் தோளுடையனான அதிகைமான்
அழகப் பெருமாளான நீலகங்கரையன்
கதிர் ஆயிரமுடையானான விசையராயன்
பொன்னன் உபகாரி சேதரப்பல்லவரையன்
கேரளராஜன்
சேந்தன் உய்யநின்றாடுவான் குருகுலத்தரையன்
திருமாலிருஞ்சோலை நின்றானான மழவராயர்
புல்லாணி இராமனான இராஜராஜ விழுப்பரையன்
பரசுராமன்
சுந்தரத்தோளன் முத்தனான தென்னவதரையன்
திருமுடிசூட்டினான் உத்தமபாண்டிய விழுப்பரையன்
திருக்காடு தேவனான விசையகாமன்
அருளாளன் சிராமனான சுந்தரபாண்டியக் காடுவெட்டி
தொண்டைமான்
கேரளராமன்
காளிங்கராஜன்
காங்கேயராயன்
ஈழத்தரையன்
விராடராஜன்
வத்தராஜன்

சுந்தரபாண்டிய நந்திபன்மன்
முனையதரையன்
கரியமாலழகனான உத்தம விழுப்பரையன்
ஆதிச்சதேவன் ஆழியங்கையனான பாத்தியதரையன்
அழகியமணவாளனான வில்லவதரையன்

இவர்களனைவரும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். பெயர்கள் எத்துணை அழகுடையனவாக வைக்கப்பட்டன என்பது இவற்றால் புலப்படும்.

இக்காலத்து வரிப்பிரிவுகள் சில

காராண்மை, மீயாட்சி, அந்தராயம், மாக்கலம், வெட்டி பாட்டம், பஞ்சுபீலி, சந்திவிக்கிரகப்பேறு, பாடிகாவல் முதலிய வரிகள் இங்குள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

காராண்மை

பரம்பரையாக நிலத்தை உழுது பயிரிட்டு அனுபவிக்கும் உரிமை.

மீயாட்சி

மேல்வாரம், பலநேரங்களில் இது காராண்மை என்றசொல்லோடு சேர்ந்து வரும்.

அந்தராயம்

உள்வரி. உள்வரும்படி - அதாவது, ஊர்ச்சபை, நாட்டவர் போன்றவற்றிற்கு இறுக்கும் வரி.

சந்தி விக்கிரகப்பேறு

கிராமத்தின் மத்தியஸ்தனுக்குக் கொடுக்கும் கட்டணம், பத்திரம் எழுதுபவர்களுக்குக் கொடுக்கும் கட்டணம்.

வெட்டி நிலை

வாய்க்கால் வெட்டு முதலிய கிராமப் பொதுவேலைகளைக் கூலிபெறாமல் செய்வது, வெட்டியாள், வெட்டிப்பாட்டம் எனப் பெறும்.

புஞ்சுபீலி

பஞ்சு சம்பந்தமான வரி. [நெசவு தொடர்பானதாகலாம்.]

பாடிகாவல்

ஊர்க்காவல் வரி.

இங்குக் காணப்படும் கல்வெட்டுக்களிலேயே இக் கல்வெட்டுதான் மிகப்பெரிய கல்வெட்டு. 129 வரிகளோடு இக் கல்வெட்டு அமைந்துள்ளது. இதில் சுந்தரபாண்டியனின் மெய்க் கீர்த்தியும் இடம்பெற்றுள்ளது. இக்கல்வெட்டின் மூலம் சில நாட்டுப்பிரிவுகளையும், ஊர்ப்பிரிவுகளையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் II

இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனுக்குப் பின்னர் கி.பி. 1239 முதல் 1251 வரை அரசாட்சி செய்தான். இங்கு இவனுடைய 'திருமலர் திருவும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியின் இறுதிவரிகள் உள்ளன. பிள்ளை பகவதி ஆழ்வார் பெயரால் கோயிலில் அர்த்தசாமபூசை நடைபெறு வதற்காகப் பணம் கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக் கிறது. இது இவனுடைய 10-ஆவது ஆட்சியாண்டில் நிகழ்ந் துள்ளது. (A. R. E. 248 / 1941 - 42)

மாறவர்மன் விக்கிரமபாண்டியன்

மாறவர்மன் குலசேகரபாண்டியனுடைய தம்பியாவான். இவனுடைய கல்வெட்டு தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் மிகுதியாகக் கிடைப்பதைநோக்க, இவன் நடுநாடு, தொண்டைநாடு ஆகியவற்றின் அரசப்பிரதிநிதி யாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இங்குள்ள இவனுடைய கல்வெட்டு 'திருமலர் மாது', என்னும் மெய்க் கீர்த்திப் பகுதியோடு தொடங்குகிறது.

நாட்டாற்றுப்போக்கில் உள்ள அல்லியூரில் அரசன் வீற்றிருந்தபோது, மைத்துனன் விக்கிரமசோழதேவன் வேண்டு கோளுக்கிணங்க விக்கிரமபாண்டிய ஈஸ்வரமுடையார்க்கு வேண்டும் நிவந்தங்களுக்காகப் புதுக்குளம் என்னும் கிராமத் தைத் தானமாக வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது.

(A. R. E. 252 / 1941 - 42)

திருப்பரங்குன்றத்து உடைய நாயனாரை விக்கிரமபாண்டிய ஈஸ்வரம் உடையார் என்றழைத்து மகிழ்ந்திருக்கின்றான் அரசன். மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்திகள் எல்லா நாடுங் கொண்ட குலசேகரதேவன் 42-ஆவது ஆட்சியாண்டில் ஸ்ரீவல்லபச் சதுர்வேதி மங்கலத்தாரால் திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியாருக்கு நிலதானம் செய்யப்பட்டுள்ளது. *(ARE 339/1918)*

பெயர்கள் சிதைந்து போன சில கல்வெட்டுக்கள் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான்' என்பதோடு நின்றுள்ளன. அக்கல்வெட்டுக்களிலும் சில செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. ஆவுடையநாயகிக்கு நிலதானம் செய்ததை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. *(ARE 238/1941-42)*

திருப்பரங்குன்றமுடையார் கோயிலுக்கு வடகிழக்கில் பகவதி ஆழ்வார் மடம் கட்டியதற்கு மடப்புறமாக நிலமளித்த செய்தி ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. *(ARE 239/1941-42)* கோயிலில் உள்ள ஊழியர்கள் பலருக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டதை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. *(ARE 241/1941-42)* அக்காலத்திலேயே கோயில் ஊழியர்களுக்குத் தக்க வசதிகள் செய்து கொடுத்திருந்ததை இக்கல்வெட்டு வெளிப்படுத்துகிறது.

திரிபுவனச்சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டானின் ஆட்சியாண்டு 5, நாள் 325-இல் சோழ குலாந்தகச் சதுர்வேதி மங்கலத்தின் ஒரு பிரிவான குலசேகர நத்தத்தில் உள்ள நிலமொன்றைத் தன்னுடைய மச்சாழ்வி விக்ரம சோழதேவன் வேண்டுகோளுக் கிணங்க மடப்புறமாக இராவளர் பசுபதி தேவருக்குத் தந்துள்ளார். *(ARE 265/1941.42)* கோனேரின்மை கொண்டான் 43-ஆவது ஆண்டில் திருக்காமக்கோட்டத்திற்குச் சேந்தப்பிள்ளை என்பவர் தேவதானமாக நிலம் தந்துள்ளார். *(ARE 337 / 1918)* உலகுடைய நாயனார் என்பவரால் இதே திருக்காமக் கோட்டத்திற்கு ஒரு வேலி நிலம் தானமாகத் தரப்பட்டுள்ளது. *(ARE 338 / 1918)*

•

விசயநகரரைப் பற்றிப் புகழ்ந்து கூறும் சில கல்வெட்டுக்களும் இங்கே கிடைக்கின்றன. அவற்றுள், விசயநகர வேந்தர்களில் ஒரு பிரிவான ஆரவீடு படைத்தலைவர்களின் வமிசாவளியை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. (ARE *244/1941-42*) அய்யண சோமேந்த்ர நிருபதி, விமலாதித்தன், அவன் மகன் ராஜநரேந்திரன் ஆகியோர் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். மகாபாரதத்தைத் தெலுங்கு மொழியில் மொழிபெயர்க்கச் செய்ததையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. கல்வெட்டின் இறுதிப் பகுதியில் சரவஞ்ஜ சோமேஸ்வர நிருபதி, பின்னம்மா சோமபேந்த்ர நிருபதி, விடலேஸ்வர, திம்மபூபன் ஆகிய வேந்தர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

•

வாணர் தலைவனைப்பற்றிப் புகழ்ந்து கூறும் சகல வித்யாசக்ரவர்த்தியால் எழுதப்பட்ட சமஸ்கிருதப்பாடல் கல்வெட்டும் உள்ளது. (A. R. E. *247/1941-42*) மதுரையும், கருவூரும், காஞ்சியும் கொண்ட பொன் பரப்பின பெருமாளின் சிதைந்து போன கல்வெட்டொன்றும் இங்கு காணப்படுகிறது. (A. R. E. *259/1941-42*) இப் பொன்பரப்பின பெருமாள் மூன்றாம் குலோத்துங்கன் காலத்து, அவனுக்குக் கீழ்ப்பணிபுரிந்த படைத்தலைவர்களுள் ஒருவனாவான். பாண்டியர்களின் கல்வெட்டுக்களுக்குப் பிறகு இந்த அளவில் தான் விசயநகரர் கல்வெட்டுக்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

இதற்கடுத்தபடியாக நமக்குக் கிடைப்பன நாயக்கர்காலக் கல்வெட்டுக்கள் தாம். சகம் *1505*-இல் வீரப்ப நாயக்கரால் கோபுரமும், திருமதிலும் எடுக்கப்பட்டதைக் கோபுரத்தில் உள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. (A.R.E. *262/1941-42*) இதே செய்தியை இங்குள்ள மற்றொரு தெலுங்குமொழிக் கல்வெட்டும் தெரிவிக்கிறது. (A.R.E. *262/1941-42*)

கச்சிப் பெருஞ்செல்வன் கிருஷ்ணய்ய வீரப்பனின் கல்வெட்டொன்றும் இங்கு உள்ளது. அந்தக் கல்வெட்டில், திருப்பரங்குன்றத்துக் கோபுரத்துக்குக் கிழக்கில் கல்மண்டபம் கட்டி அதில் ஐங்கரனின் உருவத்தை, விசுவநாத நாயக்கரின் ஆத்மா அமைதி பெறுவதற்காகத் தோற்றுவித்ததாகவும் அவன் குறிப்பிடுகின்றான். (A.R.E. *264/1941-42*) இந்தக்

கல்மண்டபம், இன்று சன்னதி தெருவில் சொக்கநாதர் கோயில் என்றழைக்கப்படுகிறது. இங்கு ஐங்கரனின் பல் வேறு உருவச்சிலைகள் பல்வேறு அளவுகளில் காணப்படு கின்றன. நாயக்க மன்னர்களின் உருவச் சிலைகளும் இம் மண்டபத்தில் உள்ளன. கி. பி. 18-ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பியர் திருப்பரங்குன்றம் கோயிலுக்குள் புக முயன்ற போது இக்கோயில் இடிக்கப்பட்டதாகவும் கோபுரத்தில் உள்ள ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. சகம் 1593-இல் வரதப்ப நாயக்கர் சேதுஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பும்போது முருகப்பெருமானுக்குத் தங்கப்பல்லக்கும், கார்த்திகைப் பௌர்ணமி நாளன்று திருவமுதுக்குத் தானமும் கொடுத்ததை இங்குள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

(A.R E. 860, 861/1918.)

இவ்வாறு திருப்பரங்குன்றம் வரலாற்றுக் காலங்களில் பாண்டியர்களாலும், விசயநகர வேந்தர்களாலும், நாயக்க மன்னர்களாலும் பெரிதும் பேணப்பட்டு வந்துள்ளது.

இக்கல்வெட்டுக்களில் இருந்து திருப்பரங்குன்றத்துப் பெரு மான் 'பரங்குன்றமுடையார்' 'உடையநாயனார்' என்று பல பெயர்களால் வழங்கப்பட்டு வந்ததையும், கோயிலுக்கு அவர்கள் செய்துள்ள பணிகளையும், அளித்த கொடை முதலியவற்றையும் அறிந்து கொள்ளமுடிகிறது. நாட்டுப் பிரிவுகளையும் இக்கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

இங்குள்ள கல்வெட்டுக்களைப் படிக்கும் போது சிலநூற் றாண்டுகள் எவ்வித கல்வெட்டுகளும் இல்லாமல் இருப்பதைக் காணலாம். கி.பி.8-ஆம் நூற்றாண்டளவில் நமக்கு இங்கு முதல் கல்வெட்டு கிடைக்கிறது. அதன்பின் கி. பி. 1190 முதல் 1218 வரை ஆண்ட முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டிய னுடைய கல்வெட்டும், அவனுக்குப்பின் வந்த பாண்டிய மன்னர் களின் கல்வெட்டும் கிடைக்கின்றன. ஆனால் கி. பி. 8-ஆம் நூற்றாண்டுக்கும், கி. பி. 12-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப் பட்ட காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் இதுகாறும் நமக்குக் கிடைக்கவில்லை.

இக்காலத்தில் மதுரைப் பெருநாட்டைத் தலைநகரமாகக் கொண்டு பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்து வந்திருக்கின்றனர். இந்தப் பாண்டிய மன்னர்கள் யாரும் திருப்பரங்குன்றம் கோயிலுக்குத் தானங்கள் செய்யவில்லையா? பரங்குன்றிலிருந்த சிவபெருமானை வழிபடவில்லையா? என்ற வினாக்கள் தோன்றுகின்றன. சங்ககாலத்தில் இருந்து சிறப்புடன் போற்றப்பட்டு வந்த குன்றம் இக்காலத்துப் பெருமையில் குன்றியதா? என்ற கேள்விக்கு எப்படி அமைதி காண இயலும்?

இவ்விடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் இருந்திருக்கவேண்டும். பின்னால் நாயக்க மன்னர்கள் கோயிலின் பல பகுதிகளிலும் கட்டிடப்பகுதிகளை எடுக்கும்போது அக்கல்வெட்டுக்கள் அழிந்துபட நேரிட்டிருக்கலாம் அல்லது இடமாற்றம் செய்யப்பட்டு மறைந்திருக்கலாம்.

சோழர்களின் கல்வெட்டுக்கள் இங்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இதே காலத்தைச் சேர்ந்த சோழர்காலக் கல்வெட்டுக்கள் மதுரையைச் சுற்றியுள்ள கோயில்களில் காணப்படுகின்றன. அச்சோழ மன்னர்கள் திருப்பரங்குன்றம் கோயிலுக்கு நிவந்தங்கள் பலவற்றை அளித்திருக்கலாம். அக்கல்வெட்டுக்களும், பாண்டியர் கல்வெட்டுக்களோடு சேர்ந்து அழிவு பட்டிருக்க வேண்டும் என்று அமைதி கொள்ளலாம்.

முடிவுரை

புராணகாலத்தில் இருந்து, சங்ககாலந்தொட்டு, இன்று வரை காட்டப்பெற்ற ஏதுக்களால் இன்று வழிபடப் பெற்று வரும் முருகப்பெருமான் கோயில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சிவபெருமானுக்காகப் பராந்தக நெடுஞ்சடையனின் தண்டல் நாயகமாகிய சாத்தன் கணபதியால் எடுக்கப்பட்டது என்பதும், அவன் மனைவி நக்கன் கொற்றி துர்காதேவிக்கும், ஜேஷ்டா தேவிக்கும் கோயில் எடுத்தாள் என்பதும் பெறப்படும்.

திருக்காமக்கோட்டத்து ஆளுடைய நாச்சியார்க்கு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் அம்மன் கோயில் தோற்றுவிக்கப்பட்டிருப்பதும், திருப்பரங்குன்றம் சிவன் கோயிலே என்பதைத் தெளிவு படுத்துகிறது.

முருகப்பெருமான் கோயிலாக வழிபடும் மாற்றம் இந் நூற்றாண்டுக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் என்பதும், நாயக்கர் காலத்து அது உயர்ந்தது என்பதும் முற்காட்டிய சான்றுகளால் புலனாகும்.

எப்படியிருப்பினும், குன்றம் அன்று தொட்டு இன்றுவரை இமயக்குன்றத்தை நிகர்த்து நின்று நிலவி வருகிறது.

8343

அன்னதான மடம் பற்றிய செப்பேடு

திருப்பரங்குன்றம் பற்றிய நாயக்கர்காலச்செப்பேடு ஒன்றும் உள்ளது. இங்குள்ள சுப்பிரமணியர் திருக்கோயிலில் அன்னதான மடமொன்று அமைக்கப்பட்டிருந்ததை இச்செப்பேடு தெரிவிக்கிறது. இச்செப்பேடு சுமார் ஒரு அடி நீளமும், அரை அடி அகலமும் உடையதாக இருக்கிறது. செப்பேடு கனமாகக் காணப்படுகிறது. செப்பேட்டின் மேற்புறம் முருகன் வள்ளி, தெய்வானையுடன் நிற்கும் தோரண அமைப்பு காணப்படுகிறது. முதல் பக்கம் 48 வரியும், அடுத்தபக்கத்தில் 55 வரியுமாக 103 வரிகளில் இது எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் இரு நேர்கோடுகள் போடப்பட்டு அவற்றின் உள்ளாக எழுதப்பட்டுள்ளன. எழுத்துக்களில் புள்ளியிடப்படவில்லை. குறிலுக்கும், நெடிலுக்கும் எகர, ஏகார உயிர்மெய்களில் வேறுபாடின்றி 'ெ' குறியீடு பயன் படுத்தப்பட்டுள்ளது. எழுத்துக்கள் தொடர்ந்து எழுதப் பட்டுச் சென்றாலும் இடையிடையே பெரிய எழுத்துக்கள் காணப்படுகின்றன.

இச்செப்பேடு 'அழகிரிப் பணிக்கன் மகன் மீனாட்சிப் பணிக்கன்' என்பவனால் எழுதப்பட்டது. ராணி மங்கம்மாள் மதுரைப் பெருநாட்டை ஆட்சி புரிந்துவந்த காலத்தில், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோயிலில் அன்னதான மடம் அமைத்தது பற்றி இச்செப்பேடு கூறுகிறது.

"மதுரைப் பட்டணத்திலிருக்கும் அஞ்சில்ல முறமுறைப் பணிக்கமார், அஞ்சில்ல உறமுறையார் முதல்த்தெற்குக் கோட்டாறு நாஞ்சி நாட்டுக்குவடக்கு, மேலை மலையாளத்துக்குக் கிளக்கு வடக்குசீதரங்கம் தஞ்சாவூருக்குத் தெற்கு.மேல் சூரிய கிரணம் பட்ட பூமியிலிருக்கும் உறைவின் முறையாரனவோரும் கூடி அன்னதானம் உண்டுபண்ணினோர்கள் அன்னதான மடத்தில் தினசரி விளக்குச் செண்டி, சங்கனாதம் கார்த்திகை நட்செத்திரம் பங்குனி திருவிளாக் கட்டளையும் இந்தப்படி நடந்து வருகிறதுக்குத் தேசத்திலுண்டாகிய

உறமுறையாரனைவோரும் வரிசத்தில் வீட்டுக்கு 105 பணம் அன்னதான மடத்துக்குக் கட்டளையிட்டார்கள்''

பணிக்கர்கள் அனைவரும் சேர்ந்து அன்னதான மடம் ஏற்படுத்தியதையும், இந்த மடம் நடந்து வருவதற்கு பணிக்க உறவுமுறையினர் ஆண்டுக்கு 105 பணம் செலுத்தியதையும் இது தெரிவிக்கின்றது.

செப்பேட்டின் காலம் பற்றி கருத்துவேறுபாடு தோன்றுகிறது. முதலில் 'சுபத்திரீமன்' என்று தொடங்குகிறது, பின்னர் 'மூவராய கண்டன் பாஷைக்குத் தப்புவராய கண்டன்...' என்று விருதுப் பெயர்களாகக் கூறி விசயநகர வேந்தர் வரிசையும், நாயக்கர் வரிசையும் கூறப்பட்டு இறுதியில், 'மங்கம்மாளவர்கள் பிறுதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளன்ற சாலிவாகன சகாத்தம் கலியுகம் ௵ 1569க்கு மேல்செல்லா நின்ற ஆனந்த ௵ சித்திரை மீ 20உ' என்று காணப்படுகிறது.

இங்கு குறிக்கப்பெறும் சக ஆண்டுக்கு நிகரான கி. பி. 1647 ஆம் ஆண்டு மதுரைப் பெருநாட்டை ஆட்சிபுரிந்தவர் திருமலைநாயக்கராவார். ஆனால் செப்பேடோ 'மங்கம்மாளவர்கள் பிறுதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருள நின்ற'. என்று குறிப்பிடுகிறது. செப்பேடு திருமலை காலத்ததா? மங்கம்மாள் காலத்ததா? புனைந்துரையா என்ற ஐயம் எழுகிறது. ஆயின் எழுத்தமைதியைக்கொண்டு இதனை கி. பி. 1700-ஆம் ஆண்டுக்கும் முற்பட்டதாகக் கொள்ளலாம்.

மேலும் இந்த அன்னதான மடம் திருமலை மன்னன் காலத்திருந்து வந்திருக்கவேண்டும். அதனை மங்கம்மாள் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து நடத்திவர அனுமதியளித்திருக்கலாம் என்று அமைதிகொள்ளலாம்.

மடம் அமைத்தமை கூறப்பட்டு முடித்ததும், அதற்கு நன்மை செய்வார் அடையும் பயனும், தீமை செய்வார் அடையும் துன்பங்களும் கூறப்படுகின்றன. அதற்கு சாட்சியாக 'ஆகாசபாணியும் பூமி தேவியும்' என அறிவித்து 'சுந்தரேசர் துணை' என முடிவுபெறுகிறது. இத்துடன் செப்பேட்டுச் செய்தி முடிவடைந்துவிடுகிறது.

இதற்குப் பின்னும் 46 வரிகள் உள்ளன. அவை:

முப்பமுதலியார்
ராசம் குளுங்கலிய முதலியார்
கனபகடாசல சொக்க முதலியார்
காரினாகிய கன்னிமுதலியார்
சேனாட்டு முதலியார்
மகிள் வரு திப்பமுதலியார்
மாநிலம் போக்கிய செல்வமுதலியார்

என்று ஏழு முதலியார்களும், "தென்னிந்திய ரீர்மலையாளப் போத்திமாரும் சீனுடன் கொடுத்த கட்டறையும்" எனப் பேசுகிறது. செப்பேட்டு முடிவில் 'தேவி சகாயம்' மீனாட்சி யம்மன் துணை சுவாமி துணை' என்று எழுதப்பட்டுள்ளது.

•

கல்வெட்டுக்கள்

திருப்பரங்குன்றத்தில் 41 கல்வெட்டுக்கள் மட்டுமே படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களிலும் மூன்றுக்கு மட்டுமே மூலம் வெளியாகியுள்ளன. ஏனைய கல்வெட்டுக்களின் கருத்துச் சுருக்கம் கல்வெட்டுத்துறை ஆண்டறிக்கையில் வெளி யிடப்பட்டுள்ளன.

1. குடைவரைக் கோயில் தூணில் உள்ளது.

1. ஸ்ரீ கொமாறஞ் சடையற்கு
2, ராஜ்ய வர்ஷம் ஆறுவது செல்லா
3. நிற்ப மற்றவற்கு மஹா
4. சாமந்தானகிய கரவந்த புராதி
5. வாசீ வைத்யன் பாண்டி அமி
6· ர்தமங்கல வரையனா இ
7. ன சாத்தங் கணபதி தி
8. ருத்துவித்தது திருக்கொ இ
9. லும் ஸ்ரீ தடாகமும் இதனுள
10. றமுள்ளதும் மற்றவ
11. ற்கு தர்மபத்னி ஆகிய ந
12. க்கங் கொற்றியாற் செய
13. ப்பட்டது துர்க்கா தெவி கொ
14. இலுஞ் ஜெஷ்டை கொஇலும்

S.I.I. Vol. XIV No.3

2. திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் கோபுரத்தின் வலப்பக்கமுள்ளது.

1. ஸகாப்தம் 1505ன் மெல்
2. செல்லா நின்ற சுபானு
3. ஹு கார்த்திகைய் 12 ட விசு

4. வநாதநாயக்கர் கிஷ்ணப்ப
5. நாயக்கரய்யன் குமாரர்
6. வீரப்ப னாயக்கரய்யன்
7. கட்டிவித்த கொபுரமும் திரு
8. மதிளும் உ

(பார்வைப்படி)

3. திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் உள் கோபுரத்தில் உள்ளது.

"சாலிய வாகன சகார்த்தம் 1714-ஆம் ஸ்ரீ இதன்மேல் செல லாநின்ற பரிதாபி ஸ்ரீ பங்குனி மீ 4-உ புதன் கிழமையும் சுக்கிலபட்சத்தில் துதிகைரேபதி நட்சத்திரமும் முலநாமயோக மும், பாலவாகரண(மும்) கூடிய சுபதினத்தில் அசரதகேபில் நபாபுசாயபு அவர்கள் ராட்சியம் ஆளுகிறநாளையில் மாடல் கூடன மதுரைச் சீமை அம்காதர் சாயபு அவர்கள் மாமுலத்துச் செய்கிற போதும், துரைபாண்டி பதினாலு தலத்தில் திருப்பரங் குன்றம் தலத்தில் நடந்தவயனம்; அசரது திரிசுரபுரம் நபாபு சாயபு அவர்கள் திவாணி சுறாய ஸ்ரீகோபாலராயரவர்கள் நாளையில் தலத்தில் ரிசுமிட்டு வெள்ளைக்காரர் பாளையம் வந்து இரங்கி சொக்கனாதர் கோவிலும் இடித்து, பழநியாண்ட வன் கோவிலையும் இடித்து ஊரையும் ஒப்புக்கொண்டு ஆஸ் தான மண்டபம் கைக்கொண்டு அட்சகொபுரவாசல் தேவையும் வெட்டி கலியாணமண்டபத்துக்கு வருகிறபக்குவத்தில் திருவிழா வும் நின்று தலமும் ஊரும் எடுபட்டுப் போரதாயிருக்கிறது என்று, தலத்தாரில் சுந்தரபட்டர் தெய்வேந்திர பட்டர் குட்டி பட்டர் சிதம்பரம்பிள்ளை விழுப்பாதராயர் ஆறு நிறுபாகக் காரர் உள்ளிட்டாரும் நாட்டாண்மை முத்துக் கருப்பபிள்ளை உள்ளிட்டாரும் காவல் ஆறுகரைப்பேர் உள்ளிட்டாரும் கூடி வயிராவி முத்துக்கருப்பன் மகன் குட்டியைக் கோபுரத்திலேரி விழச் சொல்லி அவன் விழுந்து பாளையம் வாங்கிப் போன படி யினாலே, அவனுக்கு ரத்தக் காணிக்கை பட்டயம் எழுதிக் கொடுத்தோம். ரத்தகாணிக்கை நிலம்; தெங்கால் புரவில் அம்மாபாகத்துக்குத் தெற்கு மதுரைபாகத்துக்கும் குளத்துக் கரைக்கும் கிளக்கு வீரப்பபிள்ளை தெப்பக்குளத்துக்கு மேற்கு

தெப்பக்குளம் வாய்க்காலுக்கு வடக்கு இன்னாங்கெல்கைக்கு உள்ப்பட்ட திருத்தல் நிலம் ஒருமாவும் கிர்ஷ்ணாபுரம் குடியிருப்புக்கு மேற்கு சுந்தரபட்டர் ஆண்டிச் செய்க்கி கிழக்கு சரவணப் பெருமாள்பட்டர் திருத்தலுக்கும் வாய்க்காலுக்கும் தெற்கு மதுரைப் பாதைக்கும் வடக்கு இன்னாங்கெல்கைக்கு உள்ப்பட்ட ஊரடி நிலம் ஒருமாவும் ஆக ரெண்டு செய்யும் உள வடை மேல்வாரம் கட்டுச் சுவந்திரம் சர்வசுத்த மானியம் பண்ணி கோவிலில் நித்தியபடி அரைப்படி அரிசிச்சாதமும் கொடுத்து கிராமத்து வரி நலொட்டுவரி ஆயம் உள்பட சுத்த மானியமாய் கல்லும் காவேரி புல்லும் பூமியும் சந்திராதித்யருள்ளவரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியமாய் ஆண்டு கொள்வாராகவும். இதுக்கு விகாதம் பண்ணினவன் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவாராகவும். குமரன் துணை. உ. (A.R.E. 262 of 1941-42)

சாசன மாலை ப. 60

இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1918. க. எண். 339.

கோவர்த்தனி அம்மன் கோயிலின் முதல் திருச்சுற்று கிழக்குப் புறச்சுவரில் உள்ளது, எம்மண்டலமும் கொண்டருளிய மாறவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவனது 42-ஆவது ஆட்சி ஆண்டு, கற்கடக ஞாயிற்று சுக்லபக்ஷத்து, சஷ்டியும் ஞாயிற்றுக் கிழமையும் பெற்ற ஹஸ்த நட்சத்திர நாள் திருப்பரங்குன்றமுடைய நாயனார் கோயிலில் உள்ள திருக்காமக்கோட்டத்து ஆளுடைய நாச்சியாருக்கு ஸ்ரீவல்லப சதுர்வேதிமங்மலத்துச் சபையினர் நிலம் கொடுத்ததைக் குறிக்கிறது.

இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1981. க. எண். 337.

சுப்ரமணியர் கோயிலில் உள்ள கோவர்த்தனி அம்மன் கோயில் முதல் திருச்சுற்று கிழக்குச்சுவரில் உள்ளது—திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்-42 எதிராமாண்டு சேந்தப்பிள்ளை என்பவரால் திருப்பரங்குன்றமுடைய நாயனார் கோயிலில் கட்டப்பட்டுள்ள திருக்காமக் கோட்டக் கோயிலுக்கு தேவதானமாக நிலம் கொடுக்கப் பட்டதைக் குறிக்கிறது.

பாண்டியர்கள் ஆட்சிக்காலம்

கடுங்கோன்	—	கி. பி. 560 590
மாறவர்மன் அவனிசூளாமணி	—	590-620
செழியன் சேந்தன்	—	620-650
அரிகேசரி பராங்குச மாறவர்மன்	—	650-700
கோச்சடையன்ரணதீரன்	—	700-730
முதலாம் இராசசிம்மன்	—	730-765
ஜடிலபராந்தக நெடுஞ்சடையன்	—	765-815
சீமாறன் சீவல்லபன்	—	815-862
இரண்டாம் வரகுணன்	—	862 885
பராந்தக வீரநாராயணன்	—	860-905
இரண்டாம் இராசசிம்மன்	—	905-920

நாயக்கர்கள் ஆட்சிக் காலம்

விசுவநாத நாயக்கர்	—	கி. பி. 1529-1564
கிருஷ்ணப்ப நாயக்கர்	—	1564-1572
வீரப்ப நாயக்கர்	—	1572-1595
கிருஷ்ணப்ப நாயக்கர்	—	1595-1601
முதலாம் முத்துகிருஷ்ணப்ப நாயக்கர்	—	1601-1609
முத்துவீரப்ப நாயக்கர்	—	1609 1623
திருமலைநாயக்கர்	—	1623-1659
இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர்	—	1659
சொக்கநாத நாயக்கர்	—	1659-1682
மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர்	—	1682-1689
ராணி மங்கம்மாள்	—	1689-1706
விசயரங்கச் சொக்கநாதர்	—	1706-1732
மீனாட்சி அரசி	—	1732-1736

நூற்பெயர்க்கோவை

நூல்கள்

1. பாண்டியர் வரலாறு — தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்.
2. கல்வெட்டுக் கருத்தரங்கு — திரு. இரா. நாகசாமி
3. தமிழகக்கோயிற்கலைகள் —
4. செங்கம் நடுகற்கள் —
5. மாமல்லை — ,,
6. சமணமும் தமிழும் — திரு. மயிலை. சீனிவேங்கடசாமி
7. சாசனமாலை — மர்ரே & கோ
8. நாம் வணங்கும் தெய்வங்கள் — திரு. பி. ஆர். சீனிவாசன்
9. தமிழில் தலபுராண இலக்கியம்— திரு. வே. கிருட்டிணசாமி
10. கல்வெட்டியல் — தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு
11. நாயக்கர் வரலாறு — திரு. அ. கி. பரந்தாமனார்
12. இந்திய ஓவியம் — திரு. சி. சிவராமமூர்த்தி.
13. மதுரைத் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழாப் பெரு மலர்.
14. The Art of Tamilnadu — Dr. R. Nagaswamy
15. Kalugumalai and Early Pandya Rock Cut Shrines — C. Sivaramamoorthi
16. Madura the temple City— Shenoy.
17. Temples of South India— K. R. Srinivasan
18. Lokayata — Debi Prasad Chattopadyaya

19. The Pandyan Kingdom — K. A. Nilakanta Sastri.
20. Madura District Gazetteer.
21. Madurai through the Ages— Dr. D. Devakunjari
22. ARE Volumes.
23. S. I. I. Volumes.

இலக்கியங்கள்

1. திரு முருகாற்றுப்படை
2. பரிபாடல்
3. அகநானூறு
4. கலித்தொகை
5. மதுரைக் காஞ்சி
6. தேவாரம்
7. திருக்கோவையார்
8. கல்லாடம்
9. பெரிய புராணம்
10. திருப்புகழ்
11. கந்தபுராணம்
12. திருவிளையாடற்புராணம்—பரஞ்சோதி
—பெரும்பற்றப்புலியூர் நம்பி
13. திருப்பரங்கிரிப் புராணம்

★